# தின பூமி

thinaboomi.com

மதுரை, வெள்ளி, ஜூலை 01, 2022 | ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ பாண்டிச்சேரி | பக்கம் 8 ₹ 3.00



உலகம்

நேட்டோ படைகளுக்கு அனுமதி வழங்கக்கூடாது: பின்லாந்து, சுவீடனுக்கு புடின் எச்சரிக்கை



பக்கம் 2

இந்தியா

ஜனாதிபதி தேர்தலில் போட்டி: திரௌபதி முர்மு, சின்கா வேட்பு மனுக்கள் ஏற்பு



பக்கம் 3

விளையாட்டு

மலேசிய பேட்மிண்டன் தொடர்: தாய்லாந்து வீராங்கனையை வீழ்த்தி பி.வி. சிந்து காலிறுதிக்கு தகுதி



பக்கம் 7




ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சிகளின் சார்பில் வேட்பாளராக போட்டியிடும் யஷ்வந்த் சின்கா நேற்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து ஆதரவு கோரினார். அப்போது யஷ்வந்த் சின்காவுக்கு பூங்கொத்து கொடுத்து முதல்வர் ஸ்டாலின் வரவேற்றார்.

### ரூ.118.40 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள

# இராணிப்பேட்டை புதிய கலெக்டர் அலுவலக பெருந்திட்ட வளாகம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

இராணிப்பேட்டை, ஜூலை 01-

இராணிப்பேட்டை அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நேற்று நடைபெற்ற அரசு விழாவில், ரூ.118.40 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய மாவட்ட கலெக்டர் அலுவலகப் பெருந்திட்ட வளாகம் மற்றும் ரூ. 32.18 கோடி செலவிலான 23 முடிவுற்ற பணிகளை முதல்வர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார். மேலும் ரூ. 22.19 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 5 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 71,103 பயனாளிகளுக்கு ரூ. 267.10 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

இராணிப்பேட்டை கால்நடை நோய்த்தடுப்பு மருந்து நிலைய வளாகத்தில், 13.40 ஏக்கர் நிலப் பரப்பளவில், ரூ.118.40 கோடி செலவில் புதிய மாவட்ட கலெக்டர் அலுவலகப் பெருந்திட்ட வளாகம் கட்டப்பட்டுள்ளது. இந்த கட்டிடம் மொத்தம் 28,711 ச.மீ பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. மேலும் 150 கோடியே 58 லட்சம் ரூபாய் செலவிலான 24 முடிவுற்ற பணிகளை முதல்வர் நேற்று திறந்து வைத்தார்.

இராணிப்பேட்டை புதிய பேருந்து நிலையம், செய்யாறு ஆற்றின் குறுக்கே கட்டப்படவுள்ள உயர்மட்டப் பாலம், இராணிபேட்டை மற்றும் அரக்கோணம் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் புதிய பணிமனைக் கட்டிடங்கள், ஆற்காட்டில் கால்நடை மருந்தகம் என மொத்தம் 22 கோடியே 19 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 5 புதிய திட்டப்பணிகளுக்கு முதல்வர் அடிக்கல் நாட்டினார். மேலும் பல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் 71,103 பயனாளிகளுக்கு 267 கோடியே 10 லட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்டங்களை முதல்வர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ.வேலு, ஆர். காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர். எஸ்.ஜெகத்ரட்சகன், கதிர்ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் ஈஸ்வரப்பன், முனிரத்தினம், நந்தகுமார், கார்த்திகேயன், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமை செயலாளர் தயானந்த் கட்டாரியா, இராணிப்பேட்டை மாவட்ட கலெக்டர் பாஸ்கர பாண்டியன், உள்ளாட்சி அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மகாராஷ்டிரா மாநில அரசியலில் திடீர் திருப்பம்:

# சிவசேனா அதிருப்தி அணி தலைவர் ஏக்நாத் ஷிண்டே முதல்வரானார்

## துணை முதல்வராக பா.ஜ.க.வின் தேவேந்திர பட்னாவிஸ் பொறுப்பேற்பு

மும்பை, ஜூலை 01-

பா.ஜ.க மூத்த தலைவர் தேவேந்திர பட்னாவிஸ் மகாராஷ்டிர மாநில முதல்வராவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், திடீர் திருப்பமாக, சிவசேனா அதிருப்தி அணி தலைவர் ஏக்நாத் ஷிண்டே புதிய முதல்வராக பதவியேற்றார். துணை முதல்வராக தேவேந்திர பட்னாவிஸ் பதவியேற்றார். இவர்களுக்கு கவர்னர் கோஷ்யாரி பதவிப்பிரமாணம் மற்றும் ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார்.



**உரிமை கோரினர்....**

சிவசேனாவின் உத்தவ் தாக்கரே முதல்வர் பதவியிலிருந்து நேற்று முன்தினம் இரவு ராஜினாமா செய்த நிலையில் ஆட்சி அமைக்க தேவேந்திர பட்னாவிசும் ஏக்நாத் ஷிண்டேவும் கவர்னர் கோஷ்யாரியிடம் உரிமை கோரினர். ஆட்சி அமைக்க உரிமை கோரி வந்த தேவேந்திர பட்னாவிஸ், ஏக்நாத் ஷிண்டேவுக்கு இனிப்பு ஊட்டினார் கவர்னர் கோஷியாரி. தங்களுக்கு தான் பெரும்பான்மை பலம் இருப்பதாக இருவரும் ஆட்சி அமைக்க உரிமை கோரினர்.

**புதிய முதல்வராக....**

பா.ஜ.க.வின் தேவேந்திர பட்னாவிஸ் முதலமைச்சராவார் என எதிர் பார்க்கப்பட்ட நிலையில் திடீர் திருப்பமாக ஏக்நாத் ஷிண்டேதான் மகாராஷ்டிரா முதல்வராக பதவியேற்பார் என நேற்று மாலை தேவேந்திர பட்னாவிஸே அறிவித்தார். இந்தநிலையில், மகாராஷ்டிரா முதல்வராக இருந்த உத்தவ் தாக்கரே நேற்று முன்தினம் ராஜினாமா செய்ததையடுத்து புதிய முதல்வராக ஏக்நாத் ஷிண்டே பதவி ஏற்றார். ஏக்நாத் ஷிண்டேவுக்கு மகாராஷ்டிரா கவர்னர் பகத் சிங் கோஷியாரி பதவிப்பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார்.

**மராத்தி மொழியில்...**

நம்பிக்கை வாகெடுப்பில் தோல்வியை தவிர்க்க முதல்வர் பதவியை உத்தவ் தாக்கரே ராஜினாமா செய்தார். அதிருப்தி எம்.எல்.ஏக்கள் ஆதரவுடன் மகாராஷ்டிரா மாநில முதல்வராக ஏக்நாத் ஷிண்டே பதவி ஏற்றுக் கொண்டார். பால் தாக்கரே பெயரை குறிப்பிட்டு மராத்தி மொழியில் ஏக்நாத் ஷிண்டே முதல்-மந்திரியாக பதவி ஏற்றார். மகாராஷ்டிரா மாநில துணை முதல்வராக பா.ஜ.க.வின் தேவேந்திர பட்னாவிஸ் பதவி ஏற்றுக் கொண்டார். அமைச்சரவையில் இடம் பெற மாட்டேன் என பட்னாவிஸ் அறிவித்த நிலையில் பா.ஜ.க. உத்தரவை ஏற்று பதவி ஏற்றுக்கொண்டார்.

**ஆட்டோ ஓட்டுநர்...**

1964-ல் பிறந்த ஏக்நாத் ஷிண்டே பள்ளிப் படிப்பை கூட முழுமையாக முடிக்காமல் ஆட்டோ ஓட்டி வந்தார். பால்தாக்கரே மீது கொண்ட அதீத ஈர்ப்பு காரணமாக 1980-ல் சிவசேனாவில் தன்னை இணைத்துக்கொண்டார். கட்சியில் படிப்படியாக வளர்ந்த ஏக்நாத் ஷிண்டே 2004-ம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் ஆனார். 2009-ல் மந்திரி பதவி தர காங்கிரஸ் முன் வந்த போதும் அதை நிராகரித்து சிவசேனாவில் இருந்தார் ஷிண்டே.

### அரசு பள்ளிகளில் முறையான வழிகாட்டுதல்கள் இன்றி

# தற்காலிக ஆசிரியர்களை நியமிப்பது ஆபத்தானது

## ஐகோர்ட் மதுரை கிளை கருத்து

சென்னை, ஜூலை 01-

தமிழகத்தில் அரசு பள்ளிகளில் முறையான வழிகாட்டுதல்கள் இன்றி, தற்காலிக ஆசிரியர்களை நியமிப்பது ஆபத்தானது என்றும், அது மாவட்ட கல்வி அலுவலர்கள் தங்களுக்கு தேவையான, தகுதியற்றவர்களை பணியில் அமர்த்த வாய்ப்பாக அமையும் என்றும் உயர்நீதிமன்ற மதுரைக் கிளை நீதிபதிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

ஆசிரியர் தகுதி தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் சங்கத்தின் தலைவர் ஷீலா உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார். அதில், "கடந்த 2013ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற ஏராளமானோர் அப்போதிருந்த வெயிட்டேஜ் முறையால் பணிக்கு தேர்வாகவில்லை. ஆனால் அவர்கள் ஆசிரியர் தகுதி தேர்வில் வெற்றி பெற்றவர்களே. அவர்களில் பெரும்பாலானவர்கள் தற்போதுவரை பணி வாய்ப்பு கிடைக்காமல் பொருளாதார ரீதியாக மிகுந்த சிரமத்தை சந்தித்து வருகின்றனர்.

இந்நிலையில் தமிழக அரசின் பள்ளிகளில் காலியாக உள்ள இடைநிலை, பட்டதாரி, முதுநிலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை தற்காலிக ஆசிரியர்களைக் கொண்டு நிரப்ப திட்டமிட்டு அரசு கடந்த 23ஆம் தேதி அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

தற்காலிக ஆசிரியர்கள் தேர்வு தொடர்பாக முறைப்படுத்தப்பட்ட வழிமுறைகள் எதுவும் இல்லை. அந்தந்த மாவட்ட கல்வி அலுவலர்கள் அவர்களுக்கு தேவையான நபர்களை பணியில் நியமித்து கொள்ள வாய்ப்பு உள்ளது. இதனால் தகுதியற்றவர்கள் தற்காலிக ஆசிரியர்களாக நியமிக்க படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. இதனால் மாணவர்களின் எதிர்காலமே பாதிக்கப்படும். அதோடு ஏற்கனவே ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் பணி வாய்ப்பை பெற இயலாத நிலை உருவாகும்.

ஆகவே இவற்றை கருத்தில் கொண்டு, தமிழக அரசின் பள்ளிகளில் காலியாக உள்ள இடைநிலை, பட்டதாரி, முதுநிலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை தற்காலிக ஆசிரியர்கள் மூலம் நிரப்புவது தொடர்பாக கடந்த 23ஆம் தேதி வெளியிடப்பட்ட அறிவிப்பை ரத்து செய்வதோடு, அதன் அடிப்படையில் நடவடிக்கைகளை எடுக்க இடைக்கால தடை விதித்தும் உத்தரவிட வேண்டும்" என கூறியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி எம்.எஸ்.ரமேஷ், "முறையான வழிகாட்டுதல்கள் இன்றி, தற்காலிக ஆசிரியாகளை நியமிப்பது ஆபத்தானது. இது ஏற்கததக்கதல்ல. இது மாவட்ட கல்வி அலுவலர்கள் தங்களுக்கு தேவையான, தகுதியற்றவர்களை பணியில் அமர்த்த வாய்ப்பாக அமையும்" என குறிப்பிட்டார்.

அதைத்தொடர்ந்து அரசு தரப்பில் விளக்கம் பெற்று தெரிவிக்க கால அவகாசம் கோரப்பட்டது. இதை ஏற்ற நீதிபதி அரசுத்தரப்பில் உரிய விளக்கம் பெற்று தெரிவிக்க உத்தரவிட்டு வழக்கை இன்று ஒத்தி வைத்தார்.

# மாணவிகளுக்கு ரூ.1,000 வழங்கும் திட்டம்: விண்ணப்பிக்க கால அவகாசம் நீட்டிப்பு

சென்னை, ஜூலை 01-

அரசுப் பள்ளியில் படித்து, பட்டப் படிப்பு படிக்கும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்துக்கு விண்ணப்பிக்க கால அவகாசம் வரும் 10-ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த உதவித் தொகை பெற இதுவரை சுமார் 2 லட்சம் பேர் விண்ணப்பித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் அரசுப் பள்ளியில் படித்து, சான்றிதழ் படிப்பு, பட்டயம், பட்டம், தொழிற்கல்வி ஆகியன படிக்கும் மாணவிகளுக்கு மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதித் திட்டத்தின் கீழ், மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. அரசுப் பள்ளிகளில் 6-ம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரை பயின்று இருக்க வேண்டும். கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ், தனியார் பள்ளியில் 6-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை பயின்று அதன் பின்பு 9 முதல் பிளஸ் 2 வரை அரசுப் பள்ளியில் படித்த மாணவிகளும் இந்த நிதியுதவித் திட்டத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

தொலைதூரக் கல்வி மற்றும் திறந்தவெளி பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவிகளுக்கு இந்தத் திட்டம் பொருந்தாது. மாத உதவித் தொகை பெறும் திட்டத்துக்கென https://penkalvi.tn.gov.in/ என்ற புதிய இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இணையதளம் வழியாக விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்து கொள்ளலாம். இந்த திட்டத்துக்கு விண்ணப்பிக்க நேற்றுடன் கால அவகாசம் நிறைவு பெற்ற நிலையில் ஜூலை 10-ம் தேதி வரை காலஅவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

# 3 செயற்கைக்கோள்களுடன் விண்ணில் பாய்ந்தது பி.எஸ்.எல்.வி. சி - 53 ராக்கெட்

## சுற்றுவட்ட பாதையில் வெற்றிகரமாக நிறுத்தம்

ஸ்ரீஹரிகோட்டா, ஜூலை 01-

டிஎஸ்-இஓ என்ற புவி கண்காணிப்பு செயற்கைகோள் உள்பட 3 செயற்கைக் கோள்களுடன், பி.எஸ்.எல்.வி. சி-53 ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது. பின்னர் 3 செயற்கைக்கோள்களும் அதன் சுற்றுவட்ட பாதையில் வெற்றிகரமாக நிறுத்தப்பட்டது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ பி.எஸ்.எல்.வி. மற்றும் ஜி.எஸ்.எல்.வி. ரக ராக்கெட்டுகளில் செயற்கைகோள்களை பொருத்தி அவற்றை விண்ணில் ஏவி வருகிறது. இந்நிலையில், ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் இருந்து நேற்று மாலை 6 மணிக்கு பி.எஸ். எல். வி.சி-53 ராக்கெட்டை விண்ணில் ஏவியது.

இரண்டாவது ஏவுதளத்தில் இருந்து ராக்கெட் விண்ணில் பாய்ந்தது. பிஎஸ்எல்வி சி- 53 ராக்கெட்டில் 365 கிலோ எடை கொண்ட டிஎஸ்-இஓ எலக்ட்ரோ-ஆப்டிக் செயற்கைகோள் என்ற புவி கண்காணிப்பு செயற்கைகோளும், அதனுடன் சிங்கப்பூரின் மற்றொரு செயற்கைகோளான 155 கிலோ எடை கொண்ட என்இயு-சாட் மற்றும் 2.8 கிலோ எடையுள்ள ஸ்கூப் 1 உள்பட 3 செயற்கைகோள்கள் விண்ணில் ஏவப்பட்டன.


இரண்டாவது ஏவுதளத்தில் இருந்து ஏவப்பட்ட பி.எஸ்.எல்.வி. ரகத்தில் 16வது ராக்கெட் இதுவாகும். டிஎஸ்-இஓ செயற்கைக்கோள் அதிக தெளிவு திறன் மற்றும் ஒரே நேரத்தில் பல கோணங்களில் பூமியை படம் எடுக்கும் வசதி கொண்டது. இது கடல் சார் பாதுகாப்பு, பேரிடர் மீட்பு, பேரிடர் மீட்புக்கு தேவைப்படும் மனித வளங்களை கண்டறிவது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளும். 44.4 மீட்டர் உயரம் கொண்ட இந்த ராக்கெட் பூமியில் இருந்து 570 கிலோ மீட்டர் தூரத்தில் நிலைநிறுத்தப்பட உள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஸ்ரீஹரிகோட்டாவிற்கு அழைத்துச் செல்லப்படும் பத்திரிகையாளர்கள், பார்வையாளர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.


PSLV-C53/DS-EO ராக்கெட்டை விண்ணில் செலுத்துவதற்கான 25 மணி நேர கவுண்ட்டவுன் நேற்று முன்தினம் மாலை 5 மணிக்கு தொடங்கியது.

இஸ்ரோ தலைவராக சோமநத் பொறுப்பேற்ற பிறகு முதன்முறையாக நேற்று செய்தியாளர்களை சந்தித்து இஸ்ரோவின் அடுத்த கட்ட திட்டங்கள் குறித்து பேட்டி அளித்தார்.


## மார்க்கெட் விலை நிலவரம்



| BSE | NSE |
|---|---|
| -8.03 | -18.85 |
| பாயிண்ட் 53018.94 | பாயிண்ட் 15780.25 |




**தங்கம்**
1 சவரன் ₹37,424
1 கிராம் ₹4,678



**வெள்ளி**
1 கிலோ ₹65,100
1 கிராம் ₹65.10

**$ டாலர்** ₹79.03

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24



# நேட்டோ படைகளுக்கு அனுமதி வழங்கக் கூடாது


## சுவீடன், பின்லாந்துக்கு புடின் எச்சரிக்கை

**மாஸ்கோ, ஜூலை 01-**

நேட்டோ படைகள் மற்றும் ராணுவ உட்கட்டமைப்புக்கு சுவீடன் மற்றும் பின்லாந்து அனுமதி வழங்கினால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என ரஷ்ய அதிபர் புடின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேட்டோ உறுப்பினர் நாடுகளாக சுவீடன் மற்றும் பின்லாந்து நாடுகள் இணைவதற்கு துருக்கி தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், மேட்ரிட் நகரில் நடந்த அந்நாட்டு தலைவர்களுடனான கூட்டத்தில், நேட்டோவில் இவ்விரு நாடுகளும் இணைவதற்கான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் தொடர்புடைய நாடுகளின் தலைவர்கள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

இதனை தொடர்ந்து, துருக்கி தனது எதிர்ப்பு நிலைப்பாட்டை கைவிட்டது. இதனை துருக்கியின் அதிபர் டயீப் எர்டோகன் உறுதிப்படுத்தி உள்ளார். இதனால், நேட்டோ உறுப்பினர்களாக சுவீடன் மற்றும் பின்லாந்து ஆகிய இரு நாடுகள் இணைவதில் இருந்த துருக்கியின் எதிர்ப்பு விலகியது. இதற்கான முத்தரப்பு நாடுகளுடனான கையெழுத்து ஒன்றும் ஒப்பந்தம் ஆனது.



இந்த நிலையில் ரஷ்ய அதிபர் புடின் துர்க்மெனிஸ்தானில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் கூறும் போது, நேட்டோவில் சுவீடன் மற்றும் பின்லாந்து ஆகிய நாடுகள் இணைவது பற்றி ரஷ்யா கவலை கொள்ளவில்லை. அவர்கள் சேர விரும்பினால் சேர்ந்து கொள்ளட்டும். ஆனால், ஒன்றை தெளிவாகவும், சரியாகவும் புரிந்து கொள்ள வேண்டும்.

இதற்கு முன்வரை அந்த பகுதிகளில் இருந்து அச்சுறுத்தல் எதுவும் இல்லை. ஒரு வேளை, அந்த பகுதிகளில் ராணுவ படைகள் குவிக்கப்பட்டாலோ அல்லது ராணுவ உட்கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டாலோ, எங்களுக்கு எதிராக அச்சுறுத்தல் விடப்பட்டால், அதற்கு எங்கள் தரப்பில் இருந்து பதிலடி தரப்படும். அதே அளவிலான அச்சுறுத்தல் அந்த பகுதியில் ஏற்படுத்தப்படும் என தெரிவித்தார்.

## நாளை புதுச்சேரி வருகிறார்:

# ரங்கசாமியை சந்தித்து ஆதரவு கோருகிறார் திரௌபதி முர்மு

**புதுச்சேரி, ஜூலை 01-**

ஜனாதிபதி தேர்தல் வரும் ஜூலை 18-ம் தேதி நடைபெற உள்ளது. பாஜக கூட்டணி கட்சிகளின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக திரௌபதி முர்மு போட்டியிட மனு தாக்கல் செய்துள்ளார். அவரை எதிர்த்து எதிர்கட்சிகள் சார்பில் யஷ்வந்த்சின்கா போட்டியிடுகிறார். தேர்தலில் போட்டியிடும் 2 வேட்பாளர்களும் நாடு முழுவதும் அனைத்து மாநிலங்களுக்கும் சென்று எம்எல்ஏக்கள், எம்பிக்களை சந்தித்து ஆதரவு திரட்டி வருகின்றனர்.

இதன்படி பாஜக வேட்பாளர் திரௌபதி முர்மு வரும் ஜூலை 2ல் புதுவைக்கு வருகிறார். டெல்லியிலிருந்து தனி விமானம் மூலம் நாளை (ஜூலை 2) காலை லாஸ்பேட்டை விமான நிலையத்துக்கு திரௌபதி முர்மு வருகிறார். அவரை பாஜகவினர் வரவேற்கின்றனர். தொடர்ந்து அங்கிருந்து ஹோட்டல் அக்கார்டுக்கு செல்கிறார். அங்கு பாஜக கூட்டணியிலுள்ள என்.ஆர்.காங்கிரஸ், ஆதரவு சுயேட்சை எம்எல்ஏக்களை சந்தித்து ஆதரவு திரட்டுகிறார். அங்கு நடைபெற உள்ள கூட்டத்திலும் ஆதரவு திரட்டி பேசுகிறார்.

இதுதொடர்பாக பாஜக மாநிலத்தலைவர் சாமிநாதன் கூறுகையில், "வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் இஸ்லாமிய சமூகத்தை சேர்ந்தவரையும், கடந்த ஆட்சிக்காலத்தில் தலித் சமூகத்தை சேர்ந்தவரையும் ஜனாதிபதியாக பாஜக தேர்வு செய்தது. தற்போது எளிய குடும்பத்தில் பிறந்த அரசியல் பின்புலம் இல்லாத திரௌபதி முர்மு பாஜக ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்துள்ளனர்.

ஹோட்டல் அக்கார்டில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் கூட்டம் முதல்வர் ரங்கசாமி தலைமையில் நடக்கிறது. கூட்டத்தில் திரௌபதி முர்மு கலந்துகொண்டு பேசுகிறார். அமைச்சர்கள், எம்எல்ஏக்கள், ஆதரவு எம்எல்ஏக்கள், அரசியல் கட்சி தலைவர்கள் இதில் பங்கேற்கின்றனர். திரௌபதி முர்மு வருகை புதுவைக்கு வளர்ச்சி தரக்கூடியதாக இருக்கும்'' என்று தெரிவித்தார்.

# அ.தி.மு.க.வின் பொருளாளர் யார் என்பது பற்றி பொதுக்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்படும்

## துணை ஒருங்கிணைப்பாளர் கே.பி.முனுசாமி பேட்டி

**கிருஷ்ணகிரி, ஜூலை 01-**

அ.தி.மு.க.வின் பொருளாளர் யார் என்பது பற்றி பொதுக்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என்று துணை ஒருங்கிணைப்பாளர் கே.பி.முனுசாமி தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்ட அ.தி.மு.க. அலுவலகத்தில் கட்சியின் துணை ஒருங்கிணைப்பாளர் கே.பி.முனுசாமி எம்.எல்.ஏ. நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:-

உள்ளாட்சி தேர்தலில் இரட்டை இலை சின்னத்தை ஒதுக்குவதற்கு கையெழுத்திடுவது தொடர்பாக ஓ.பன்னீர்செல்வம், எதிர்க்கட்சி தலைவரும், இணை ஒருங்கிணைப்பாளருமான எடப்பாடி பழனிசாமிக்கு ஒரு கடிதம் எழுதி உள்ளார். பி.பார்மில் கையெழுத்திடுவது தொடர்பாக அந்த கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தார். தற்போது உள்ள சூழ்நிலையில் எந்த கையெழுத்தையும் போடக்கூடிய தார்மீக பொறுப்பை ஓ.பன்னீர்செல்வம் இழந்துவிட்டார்.

காரணம் ஒரு கட்சியின் தலைமை பொறுப்பில் இருந்து கொண்டு பொதுக்குழு, செயற்குழு பற்றிய அறிவிப்பு வெளியிடப்பட்ட நிலையில் அந்த கூட்டத்திற்கு எதிராக செயல்படக்கூடாது. குறிப்பாக அந்த கூட்டத்திற்கு தடை விதிக்க வேண்டும் என்றும் 23 தீர்மானங்களுக்கும் மேல் வேறு எதையும் விவாதிக்க கூடாது என்றும் காவல்துறையையும், நீதிமன்றத்தையும் அவர் அணுகியது, கட்சி கட்டுப்பாட்டை மீறிய செயல். அந்த கூட்டத்தில் கலந்து கொண்டு என்ன தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகிறது என்பதை கவனித்து ஆலோசனை வழங்க வேண்டும். எதிராக செயல்படக்கூடாது.

கட்சியின் பொதுக்குழு அதே நாளில் திட்டமிட்டப்படி நடைபெறும். கட்சியில் உள்ள 75 மாவட்ட செயலாளர்களில் 70 பேரும், 66 எம்.எல்.ஏ.க்களில் ஓ. பன்னீர்செல்வம், வைத்திலிங்கம், மனோஜ்பாண்டியன் ஆகிய 3 பேர் தவிர 63 பேரும், தலைமை கழக நிர்வாகிகளில் 74-ல் 70 பேரும், பொதுக்குழு உறுப்பினர்களில் 2685 பேரில் 2582 பேர் உள்பட 99 சதவீதம் பேர் ஒற்றை தலைமையை ஆதரிக்கிறார்கள்.

எதிர்க்கட்சியாக இருந்து கொண்டு ஆளுங்கட்சிக்கு ஆதரவாக ஓ.பன்னீர்செல்வம் செயல்படுகிறார். தி.மு.க.வை பரமவிரோதி என்று ஜெயலலிதா கூறினார். ஆனால் பன்னீர்செல்வத்தின் தற்போதைய செயல்பாடுகள் திருப்தியாக இல்லை. தமிழகத்தில் தி.மு.க., அ.தி.மு.க. மட்டுமே வலுவான கட்சிகள். தற்போதைய தி.மு.க. அரசை எதிர்க்க ஒற்றை தலைமை இருந்தால் தான் அ.தி.மு.க. வலுவான எதிர் கட்சியாக செயல்படும். பொதுக்குழு கூட்டத்தின் போது கட்சியின் பொருளாளர் யார்? என்பது குறித்து முடிவு செய்யப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## பாலியல் பலாத்கார வழக்கு:

# பாப் பாடகர் ஆர்.கெல்லிக்கு 30 ஆண்டு சிறை தண்டனை

**நியூயார்க், ஜூலை 01-**

பிரபல பாடல்களை பாடிய பாப் பாடகர் ஆர்.கெல்லி, பல பெண்களையும், சிறுமிகளையும் பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாக கைது செய்யப்பட்டார்.

அவர் மீதான குற்றச்சாட்டு உறுதி செய்யப்பட்ட நிலையில், தற்போது அவருக்கு 30 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் வசித்து வருபவர் இசை நட்சத்திரம் கெல்லி என்று அழைக்கப்படுகிற ராபர்ட் கெல்லி. இவர் ஆர் அண்ட் பி என்று அழைக்கப்படுகிற ரிதம் அண்ட் புளூஸ் இசையில் பிரபலமானவர். இவர் மீது ஏராளமான செக்ஸ் புகார்கள் குவிந்தன. பெண்களையும், சிறுமிகளையும் பாலியல் பலாத்காரம் செய்திருக்கிறார் என்பதுதான் குற்றச்சாட்டு.

இவர் எல்லா குற்றச்சாட்டுகளையும் மறுத்து வருகிறார். ஆனாலும் கடந்த மாதம் இவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

சிகாகோ, புரூக்ளின் கோர்ட்டுகளில் கெல்லிக்கு எதிராக 2 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன. அவற்றில் கெல்லியும், அவரது கூட்டாளிகளும் சிறுமிகளை வேலைக்கு அமர்த்தி, கடத்திக் கொண்டு போய் பாலியல் பலாத்காரம் செய்ததுடன் ஆபாச படங்களும் எடுத்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

வழக்குகளில் தொடர்புடைய சாட்சிகளை மிரட்டியும், பணம் கொடுத்தும் நீதித்துறை நடவடிக்கைக்கு ஊறு விளைவிக்க முயற்சித்ததாகவும் அவர் மீது புகார் எழுந்தது.

அவர் மீதான குற்றச்சாட்டு உறுதி செய்யப்பட்ட நிலையில், தற்போது அவருக்கு 30 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

## உதய்பூர் படுகொலை:

# தையல்காரர் வீட்டுக்கு நேரில் சென்று ஆறுதல் கூறினார் முதல்வர் கெலாட்

**ஜெய்பூர், ஜூலை 01-**

ராஜஸ்தான் மாநிலம் உதய்பூரில் படுகொலை செய்யப்பட்ட தையல்காரர் கன்னையா லாலின் வீட்டிற்குச் சென்ற ராஜஸ்தான் முதல்வர் அசோக் கெலாட், குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

கன்னையா லாலின் குடும்பத்தினரிடமும் உறவினர்களிடமும் அசோக் கெலாட் பேசினார். அசோக் கெலாட், கட்சித் தலைவர் கோவிந்த் சிங், வருவாய்த் துறை அமைச்சர் ராம்லால் ஜத் உள்ளிட்டோருடன் கன்னையா லாலின் வீட்டிக்குச் சென்றார்.

தையல்காரர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை தேசிய புலனாய்வு அமைப்பு (என்ஐஏ) உரிய நேரத்துக்குள் விசாரணை நடத்திமுடிக்கவும் படுகொலை சம்பவம் தொடர்பாக விரைவாக விசாரணை நடத்த வேண்டும் என்றும் அசோக் கெலாட் கூறினார். கன்னையா வீட்டுக்கு முதல்வர் வருகை தருவதையொட்டி அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

ராஜஸ்தான் மாநிலம் உதய்பூரில் வசித்தவர் தையல்காரர் கன்னையா லால். சமூக ஊடகத்தில் இஸ்லாம் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பதிவு வெளியிட்டதற்காக கைது செய்யப்பட்ட இவர், கடந்த ஜூன் 15-ஆம் தேதி ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். இஸ்லாமிய இறைத் தூதர் நபிகள் நாயகம் குறித்து சர்ச்சைக்குரிய விதத்தில் பேசிய நூபுர் சர்மாவுக்கு ஆதரவாக சமூக ஊடகங்களில் பதிவிட்டதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், உதய்பூரின் தன்மண்டி பகுதியில் உள்ள அவரின் கடைக்கு செவ்வாய்க்கிழமை சென்ற இருவர், கன்னையா லாலை கழுத்தறுத்து கொலை செய்தனர். அந்தக் கொலையை விடியோவாக பதிவு செய்து சமூக ஊடகத்திலும் வெளியிட்டனர். அவர்கள் வெளியிட்ட மற்றொரு காணொலியில், கன்னையா லாலின் தலையை துண்டித்துவிட்டதாகக் கூறியிருந்தனர்.

இந்நிலையில், மத்திய உள்துறை அமைச்சக செய்தித்தொடர்பாளர் டுவிட்டரில் வெளியிட்டுள்ள பதிவில், ''கன்னையா லால் கொலைச் சம்பவம் குறித்து என்ஐஏ விசாரணைக்கு மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது'' என்று தெரிவித்தார்.

## அமைச்சர் சேகர்பாபு முன்னிலையில்

# பெரியபாளையம், பவானி அம்மன் கோவிலுக்கு சொந்தமான 130 கிலோ தங்கம் வங்கியில் முதலீடு

**பெரியபாளையம், ஜூலை 01-**

பெரியபாளையம் பவானி அம்மன் கோவிலுக்கு சொந்தமான 130 கிலோ தங்கம் வங்கியில் முதலீடு செய்யப்பட்டது. இதன் மூலம் கிடைக்கும் வட்டி தொகையில் கோவில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

கோவில்களில் பக்தர்கள் காணிக்கையாக செலுத்திய தங்க நகைகளில் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள தங்கம் வங்கியில் முதலீடு செய்யப்பட்டு வருகிறது.

இந்த முதலீட்டின் மூலம் பெறப்படும் வட்டித்தொகை கோவில் திருப்பணி மற்றும் வளர்ச்சிப்பணிக்கு பயன்படுத்தப்பட உள்ளது. இந்த நிலையில் பெரிய பாளையத்தில் உள்ள பவானி அம்மன் கோவிலில் பக்தர்களால் காணிக்கையாக கிடைத்ததில் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்த தங்கத்தை வங்கியில் முதலீடு செய்யும் நிகழ்ச்சி கோவில் வளாகத்தில் நடைபெற்றது.

இதில் அமைச்சர் சேகர்பாபு கலந்துகொண்டு கோவிலுக்கு சொந்தமான 130 கிலோ 512 கிராம் தங்கத்தை பாரத ஸ்டேட் வங்கியில் முதலீடு செய்ய ஒப்படைத்தார்.

அப்போது அமைச்சர் சேகர்பாபு நிருபர்களிடம் கூறியதாவது:-

பெரிய பாளையம்கோவிலில் உள்ள தங்க நகைகளை முதலீடு செய்ததன் மூலம் மாதமொன்றுக்கு ரூபாய் ஒரு கோடி வட்டி கிடைக்கும். 18 மாதங்களில் பெரியபாளையம் பவானி அம்மன் கோவில் உள்பட 3 கோவில்களில் தங்கத்தேர் செய்து முடிக்கப்படும்.

சிறுவாபுரி முருகன் கோவிலில் நவம்பர் மாதத்தில் கும்பாபிஷேகம் செய்ய அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## 3 மாதங்களில் இல்லாத அளவு பாதிப்பு உயர்வு:

# சிங்கப்பூரில் கொரோனா புதிய உச்சம்

**கோலாலம்பூர், ஜூலை 01-**

சிங்கப்பூரில் தினசரி கொரோனா தொற்று 3 மாதங்களில் இல்லாத புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் அங்கு 11,504 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. இது குறித்து சுகாதாரத் துறை அமைச்சர் ஆங் யே குங் கூறுகையில், கொரோனாவில் புதிய அலை எதிர்பார்த்ததற்கு முன்பே எழுந்து விட்டதாகத் தெரிவித்தார்.

நாட்டில் தினசரி கொரோனா பாதிப்பு இனி வரும் நாள்களில் மேலும் அதிகரிக்கக்கூடும் என்று துணை பிரதமர் லாரன்ஸ் வாங் எச்சரித்துள்ளார். எனினும், இப்போதைக்கு கொரோனா கட்டுப்பாடுகளை கடுமையாக்க வேண்டிய தேவையில்லை எனவும் நோய்த்தடுப்பு விதிமுறைகளில் தேவைப்படும் நேரங்களில் உரிய மாற்றங்கள் செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# அக்னிபாத் திட்டத்தில் இளைஞர்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் இருக்கிறது

## முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் கருத்து

**மதுரை, ஜூலை 01-**

அக்னிபாத் திட்டத்தில் பணியாற்றும் இளைஞர்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் இருக்கிறது என முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு என்பது பெரிய எதிர்பார்ப்பாக உள்ளது. தற்போது அக்னிபாத் திட்டத்தின் மூலம் தேசத்தின் நலனுக்காக இளைஞர்களுக்கு நல்ல வாய்ப்பு உருவாகி உள்ளது. பாரதப் பிரதமர் இளைஞர்களுக்காக 10 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். அதனைத் தொடர்ந்து மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் அக்னிபாத் என்ற திட்டத்தை வெளியிட்டார். அக்னிபாத் என்பது போர்க்களப்பணி என்பதாகும். இந்த திட்டத்தில் ராணுவம், கடற்படை, விமானப்படை உள்ளது. வரும் 90 நாட்களில் 46,000 இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் திட்டத்திற்கு 17 முதல் 21 வரை வயது வரம்பு உள்ளது. தற்பொழுது இந்த ஓராண்டுக்கு மட்டும் சிறப்பு நிகழ்வாக 23 வயதாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தில் பத்தாண்டுகளோ அதற்கு மேலாக பணியாற்ற முடியாது. இந்த பணியில் 4 ஆண்டுகள் ஒப்பந்த அடிப்படையில் மட்டுமே பணியாற்ற முடியும். அவர்களின் மாத சம்பளத்தில் 30 சதவீத தொகையை பங்களிப்பாக பிடித்து செய்யப்படும் நான்கு ஆண்டுகள் கழித்து பணி நிறைவுக்கு பிறகு அவர்களின் பிடித்தம் செய்யப்பட்ட தொகையுடன் அரசின் பங்களிப்பு தொகையாக இணையாக வட்டியோடு சேர்த்து ரூ. 11.71 லட்சம் மத்திய அரசு வழங்குகிறது.

இதன் மூலம் இளைஞர்கள் சுயதொழில் தொடங்க முடியும் வாழ்வில் நம்பிக்கை ஆதாரமாக விளங்கும். அக்னிபாத் திட்டத்தில் பணியாற்றும் இளைஞர்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் இருக்கிறது. துணை ராணுவ படைகள், மத்திய, மாநில போலீஸ் பணிகளில் வேலைவாய்ப்பு கிடைப்பது மட்டுமல்லாது, பொதுத்துறை தேர்வுகளில் 10 சதவீதம் பேருக்கு ஒதுக்கப்படவுள்ளது. சமுதாயத்தில் சிறந்த இளைஞர் படையாக உருவாக வாய்ப்பு உள்ளது. இந்த திட்டம் இளைஞர்களுக்கு மிகப்பெரிய வரப்பிரசாதமாக இருக்கும். இளைஞர்களுக்கு புரிதல் இல்லாத காரணத்தால் பல்வேறு குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. இளைஞர்கள் இதை முழுமையாக புரிந்து கொண்டு அக்னிபாத் திட்டத்தில் சேர வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.

## ரஷ்யாவின் அச்சுறுத்தல் காரணமாக

# ஐரோப்பியாவில் அமெரிக்க படை அதிகரிக்கப்படும்: ஜோ பைடன்

**மாட்ரிட், ஜூலை 01-**

சீனாவின் நேட்டோ மீதான எதிர்ப்பு மற்றும் ரஷ்யாவுடனான நெருக்கம் ஆகியவை பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. நேட்டோ அமைப்பில் சேர உக்ரைன் முயற்சி செய்ததால் அந்நாடு மீது ரஷ்யா போரை தொடங்கியது என்பது குறிப்பிடத்தக்கது. 30 நாடுகளை கொண்ட நேட்டோ அமைப்பின் மாநாடு ஸ்பெயினின் மாட்ரிட் நகரில் நடந்து வருகிறது. இம்மாநாட்டில் அமெரிக்க அதிபர் ஜோபைடன் உள்பட பல்வேறு நாட்டு தலைவர்கள் பங்கேற்றனர்.

இம்மாநாட்டில் நேட்டோ உறுப்பு நாடுகளுக்கு ரஷ்யா நேரடி அச்சுறுத்தலாக திகழ்கிறது என்று பிரகடனப் படுத்தப்பட்டது. மே=லும் உக்ரைன் மீது ரஷ்யா போரிட்டு வரும் சூழலில் உக்ரைனுக்கு அரசியல் ரீதியாகவும், செயல் ரீதியாகவும், அளித்து வரும் உதவிகள் அதிகரிக்க நேட்டோ நாடுகளின் தலைவர்கள் உறுதி அளித்தனர்.

இந்த நிலையில் ரஷ்யாவின் அச்சுறுத்தலையடுத்து ஐரோப்பியாவில் அமெரிக்க படை அதிகரிக்கப்படும் என்று அதிபர் ஜோபைடன் தெரிவித்தார். நேட்டோ பொதுச்செயலாளர் ஜென்ஸ் ஸ்டோல்டன் பெர்க்கை ஜோபைடன் சந்தித்து பேசினார். நேட்டோ அமைப்பு வலுவானது மற்றும் ஒன்றுபட்டது. உச்சி மாநாட்டில் எடுக்கும் நடவடிக்கைகள் மூலம் எங்களின் கூட்டு பலத்தை மேலும் அதிகரிக்க போகிறோம்.

போலந்தில் நிரந்தர ராணுவ தலைமையகத்தை அமெரிக்கா அமைக்க உள்ளது. புதிய அமெரிக்க போர்கப்பல்கள் ஸ்பெயினுக்கும், போர் விமானங்கள் இங்கிலாந்துக்கும், தரைப் படைகள் ருமேனியாவுக்கும் அனுப்பப்படும். கிழக்கு பகுதி முழுவதும் அமெரிக்கா நேட்டோ அமைப்பினை வலுப்படுத்த உள்ளோம். பால்டிக் பிராந்தியத்திற்கு சுழற்சி முறையில் வீரர்களை அமெரிக்கா அனுப்பி வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# கோவையில் திருநங்கைகள் நிலையை உயர்த்த ரோட்டராக்ட் கிளப் ஆஃப் டிரான்ஸ்மாம் தொடக்கம்

**கோவை, ஜூலை 01-**

வாழ்க்கையின் ஒவ்வொரு அசைவும் மனித குலம் எடுக்கும் முடிவுகளில் தான் உள்ளது. இந்த உலகத்தில் தேவை கூடி வாழ்தல் தான். வீட்டை விட்டு துரத்தப்பட்டு, சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டு, சில வலுவான சக்திகளின் ஒடுக்கத்தால் திருநங்கைகள் சமூகம் ஒன்றாக கூடி வாழ்கின்றனர்.

இவர்களில் சிலர் ஆண்களையும் பெண்களையும் போன்று, புத்திசாலித்தனமாகவும் கசப்பான அனுபவத்தோடும் தங்களது சூழல்களால் போராடி வாழ்கின்றனர். அவர்களது மவுனம் சொல்லும் தகவல், எல்லாவற்றுக்கும் தனிமைப்படுத்தப்பட்டிருப்பது தான்.இதன் ஒரு புதிய முயற்சியாக தமிழ்நாட்டில் முதல்முறையாக ரோட்டரி கிளப் கோயம்புத்தூர் டவுன்டவுன் (Rotary Club of Coimbatore Downtown) மேற்கொண்டு, "ரோட்டராக்ட் கிளப் ஆஃப் டிரான்ஸ்மாம்'' (Rotaract Club of TransMom) ஒன்றை துவக்கியுள்ளது. இந்த கிளப்பில் தற்போது 16 திருநங்கைகள் இணைந்துள்ளனர்.

இவர்களின் மதிப்பை உயர்த்த இன்னும் பலர் இணைய ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. இந்த கிளை துவக்க விழா, மாவட்ட ரோட்டரி கிளப் ஏற்பாட்டில் நேற்று கோயம்புத்தூர் ரோட்டரி கிளப் டெக்ஸிட்டி ஹாலில் நடந்தது. ரோட்டரி கவர்னர் ராஜசேகரன் ஸ்ரீனிவாசன் தலைமை விருந்தினராக பங்கேற்றார். ரோட்டரி மாவட்ட 2022-23 இளைர்கள் சேவை பிரிவு தலைவர் காட்வின் மரியா விசுவாசம் வாழ்த்துரை வழங்கினார். மாவட்ட ரோட்டராக்ட் பிரதிநிதி கீர்த்தி விவேக், 2022-23 உதவி கவர்னர் சுமித் குமார் பிரசாத் பங்கேற்றனர். டிரான்ஸ்மாம் ரோட்ராக்ட் கிளப்புக்கு சர்வதேச ரோட்டரி கிளப் அங்கீகாரம் பெற அயராத முயற்சியை மேற்கொண்ட 2021-22 தலைவர் கேப்டன் பாலாஜி பாபு, அவரது துணைநின்ற 2022 -23 தலைவர் சுந்தரேசன், 2021-22 செயலாளர் ஷியாம் மற்றும் 2022-23 செயலாளர் குமரன் ஆகியோரும் புதிய ரோட்டராக்ட் கிளப் துவக்க விழாவில் பங்கேற்றனர்.

இதுகுறித்து ரோட்டரி மாவட்டம் இளையர் சேவை பரிவு தலைவர் காட்வின் மரியா விசுவாசம் கூறுகையில், திருநங்கை தன்ஷிகா, கடின உழைப்பாளி. அவர், டிரான்ஸ்மம் ரோட்டரி கிளப்பின் உறுப்பினர் மற்றும் தலைவராகவும் உள்ளார். முதுநிலை பட்டம் பெற்ற அவர், கோவை அரசு மருத்துவமனையில் பணியாற்றி வருகிறார். டிரான்ஸ்மாம் பவுண்டேஷனில் ஒரு அறங்காவலராக உள்ள அவர், திருநங்கைகளின் தேவைகளை அறிந்து உதவி வருகிறார் என்றார். திருநங்கைகள் அனுஷ்யா மற்றும் தன்ஷிகா ஆகியோர், பிறருக்கு எடுத்துக்காட்டாக திகழும் இரட்டையர்களாக மாறியுள்ளனர்.

அனுஷ்யா, பலருக்கு வாகனங்களை ஓட்ட கற்றுக் கொடுத்து ஓட்டுனராக மாறியுள்ளார். அவர்கள் மதிப்பும் மரியாதையும் பெற்று பொருளீட்டி வருகின்றனர். திருநங்கை சங்கீதாவும் உபர் வாடகை கார் ஓட்டி வருகிறார். இந்த முயற்சிகளை மாவட்ட ரோட்டரி பிரதிநிதி கீர்த்தி விவேக், காட்டன் சிட்டி ரோட்டரி கிளப் தலைவர் காருண்யா ஆகியோர் முன்னின்று நடத்தி வருகின்றனர்.

## ஆதிதிராவிட கலை, இலக்கிய மேம்பாட்டுச் சங்கம் மூலம்

# சிறந்த எழுத்தாளர்களுக்கான பரிசு தொகையை உயர்த்தி தமிழக அரசு அரசாணை வெளியீடு

**சென்னை, ஜூலை 01-**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை, இலக்கிய மேம்பாட்டுச் சங்கத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் தேர்வு செய்யப்பட்ட சிறந்த எழுத்தாளர்களின் சிறந்த கதை, கட்டுரை, கவிதை, வரலாறு மற்றும் புதினம் ஆகிய படைப்புகளுக்கான பரிசுத்தொகையும், பாராட்டு சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது.

ஆதிதிராவிடர், பழங்குடியினர், மதம் மாறிய ஆதிதிராவிட கிறித்துவர்களின் சிறந்த படைப்புகள் மற்றும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் அல்லாதோரின் சிறந்த படைப்பையும் சேர்த்து மொத்தம் 11 படைப்புகளை தேர்வு செய்து, அப்படைப்புகளுக்கு ரூ.50,000 பரிசுத் தொகையாக ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது இந்த பரிசுத் தொகையானது 2022-2023-ஆம் நிதியாண்டு முதல் ரூ.50,000-லிருந்து ரூ.1,00,000-ஆக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி தேர்தல்:
# திரௌபதி முர்மு, சின்கா வேட்பு மனுக்கள் ஏற்பு



புதுடெல்லி, ஜூலை 01-

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட தாக்கல் செய்யப்பட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர் திரௌபதி முர்மு, எதிர்க்கட்சிகளின் வேட்பாளர் யஷ்வந்த் சின்கா ஆகியோரின் வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன. இந்தத் தகவலை, வியாழக்கிழமை, மாநிலங்களவைச் செயலக முதன்மைச் செயலரும் தேர்தல் அலுவலருமான பி.சி. மோடி தெரிவித்துள்ளார்.

ஜூலை 18-ல் நடைபெறவுள்ள இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்காக தாக்கல் செய்யப்பட்ட 115 மனுக்களில் தாக்கலின்போதே 28 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. மீதியிருந்த 72 வேட்பாளர்களின் 87 மனுக்களில் 79 மனுக்கள் தேவையான நிபந்தனைகளை நிறைவு செய்யாததால் நிராகரிக்கப்பட்டன. வேட்பு மனுக்களை திரும்பப் பெறக் கடைசி நாளான ஜூலை 2-க்குப் பிறகு (நாளை) அரசிதழில் வேட்பாளர்களின் இறுதிப் பட்டியல் வெளியிடப்படும்.

நாட்டின் அதி உயர் பதவிக்காகப் போட்டியிட, முர்மு, சின்கா தவிர, மும்பையைச் சேர்ந்த குடிசைவாசி, தமிழகத்தைச் சேர்ந்த சமூக செயற்பாட்டாளர், தில்லியைச் சேர்ந்த பேராசிரியர் ஆகியோரும் வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளனர். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட மனுச் செய்வோரைத் தேர்வாளர்கள் குழுவில் இருந்து (மக்களவை, மாநிலங்களவை, மாநிலங்களின் பேரவை உறுப்பினர்கள்) 50 பேர் முன்மொழியவும் 50 பேர் வழிமொழியவும் வேண்டும் என்பதைக் கட்டாயமாக்கியுள்ளது தேர்தல் ஆணையம்.

## அக்னிபாத் திட்டத்திற்கு எதிர்ப்பு:
# பஞ்சாப் சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றம்

சண்டிகர், ஜூலை 01-

அக்னிபாத் திட்டத்திற்கு எதிராக பஞ்சாப் சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நடைபெற்று வரும் பஞ்சாப் சட்டப்பேரவை கூட்டத்தொடரில் மத்திய அரசின் அக்னிபாத் திட்டத்திற்கு எதிராக மாநில அரசால் தீர்மானம் கொண்டுவரப்படும் என அம்மாநில முதல்வர் பகவந்த் மான் நேற்று முன்தினம் அறிவித்திருந்தார். இந்நிலையில் நேற்று அக்னிபாத் திட்டத்திற்கு எதிரான தீர்மானத்தை அவர் சட்டப்பேரவையில் முன்வைத்தார்.

பாஜக சட்டப்பேரவை உறுப்பினர்களான அஷ்வினி சர்மா மற்றும் ஜங்கி லால் மகாஜன் தவிர மற்ற அனைவரும் ஆதரவளித்த நிலையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து பேசிய பகவந்த் மான், அக்னிபாத் திட்ட விவகாரத்தை பிரதமர் மோடி மற்றும் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவிடம் முன்வைக்க உள்ளதாகக் குறிப்பிட்டார்.

மேலும் இந்தத் திட்டம் நாட்டின் இளைஞர்களுக்கு எதிராக உள்ளதாக பகவந்த் மான் குறிப்பிட்டார். காங்கிரஸ் மூத்த தலைவரும் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான பர்தாப் சிங் பஜ்வா அக்னிபாத் திட்டம் திரும்பப் பெறப்பட வேண்டும் வலியுறுத்தி பேசினார்.

அக்னிபாத் திட்டத்திற்கு எதிராக நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் போராட்டங்கள் நடைபெற்று வரும் நிலையில் பஞ்சாப் அரசு இத்திட்டத்திற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# 55 ஆண்டுகளாக அரசியலில் இருக்க கூடிய எனக்கு விளம்பரம் தேவையா?
## இராணிப்பேட்டை விழாவில் முதல்வர் ஸ்டாலின் கேள்வி

இராணிப்பேட்டை, ஜூலை 01-

55 ஆண்டுகளாக அரசியலில் இருக்கக்கூடியவன் நான். இனிமேல் எனக்கு விளம்பரம் எதற்கு என்று இராணிப்பேட்டையில் நடந்த விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி எழுப்பினார்.

இராணிப்பேட்டையில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து முதல்வர் மு.க. ஸ்டாலின் பேசியதாவது., இராணிப்பேட்டை என்பது புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டம். ஒரு காலத்தில் ராணுவப் பேட்டையாக இருந்தது தான் இந்தப் பகுதி. புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டமாக இருந்தாலும், இராணிப்பேட்டை பழமையானது தான். வரலாற்றுச் சிறப்புக்குரிய மாவட்டமாக இது விளங்கிக் கொண்டிருக்கிறது. ஆந்திரா, கர்நாடகா ஆகிய இரண்டு அண்டை மாநிலங்களையும் இணைக்கும் இடத்தில், இந்த மாவட்டம் அமைந்திருப்பது, இன்னொரு சிறப்பாக நாம் பார்க்கிறோம்.

தென்னிந்தியாவில் இருக்கும் தொழில் மையங்களில் ஒன்றாகவும் இராணிப்பேட்டை இருக்கிறது. தோல் பொருள் ஏற்றுமதியில், உலகத்தின் கவனத்தை ஈர்க்கும் மாவட்டமாகவும், அனைத்து சமூக மக்களும் அமைதியாக வாழும் சமரசம் உலவும் மாவட்டமாகவும் இந்த மாவட்டம் இருக்கிறது. மீண்டும் மஞ்சள் பை திட்டத்தை சிறிய முறையில் செயல்படுத்திக் கொண்டிருக்கக்கூடிய மாவட்டமாக இராணிப்பேட்டை மாவட்டம் திகழ்கிறது.

ஒவ்வொரு தனிமனிதரின் கோரிக்கைகளையும், கேட்டுக் கேட்டு, பார்த்துப் பார்த்து, நிறைவேற்றித் தரும் அரசுதான் தி.மு.க. அரசு. பெற்றவர்கள் தான் தங்களுடைய பிள்ளைகளுக்கு என்னவெல்லாம் தேவையோ அதையெல்லாம் தனித்தனியாக நிறைவேற்றித் தருவார்கள். அதைப்போலத்தான், ஒரு அரசும் செயல்பட வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

தோல் மற்றும் காலணி உற்பத்தித் தொழிலில், இராணிப்பேட்டை மாவட்டம் சிறந்து விளங்குகிறது. காலணி மற்றும் அது சார்ந்த பொருட்களின் உற்பத்தியை, சர்வதேசத் தரத்திற்கு மேலும் உயர்த்தி, அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் பனப்பாக்கத்தில், 400 கோடி ரூபாய் செலவில் 250 ஏக்கர் பரப்பளவில் மெகா காலணி உற்பத்தி பூங்கா ஒன்று அமைக்கப்படும். இதனால், சர்வதேச அளவில், தலைசிறந்த காலணி உற்பத்தி மற்றும் ஏற்றுமதி மையமாக இராணிப்பேட்டை மாவட்டம் மேலும் வலுப்பெறும். இந்தப் பூங்கா நிறுவப்படும் காரணத்தால், 20 ஆயிரம் பேருக்கு குறிப்பாக பெண்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

தி.மு.க. தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டதில் ஏறக்குறைய 70 சதவீதம், 80 சதவீதம் நாம் நிறைவேற்றி இருக்கிறோம். நாங்கள் கொடுத்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை என்று எதிர்க்கட்சியில் இருக்கக்கூடியவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இன்னொன்றையும் சொல்கிறார்கள். ஸ்டாலின் விளம்பரப் பிரியராக இருக்கிறார் என்று சொல்லியிருக்கிறார்கள். இனிமேலும் எனக்கு விளம்பரம் தேவையா? 55 ஆண்டுகளாக அரசியலில் இருக்கக்கூடியவன் நான். இனிமேல் எனக்கு விளம்பரம் எதற்கு?. ஏற்கனவே கிடைத்த புகழையும் பெருமையையும் காலமெல்லாம் கரையாமல் காப்பாற்றினால் போதும் என்று நினைப்பவன் நான்.

இந்த அரசாங்கத்தினுடைய இதயம் என்பது விளிம்புநிலை மக்களின் மகிழ்ச்சியில்தான் இருக்கிறது. இந்த ஆட்சியானது கடந்த பத்தாண்டு காலமாக, தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள சரிவைச் சீர் செய்து கொண்டிருக்கிறது. அதே சமயத்தில் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க எந்நாளும் உழைத்து வருகிறது. என் சக்தியை மீறியும் உங்களுக்காக உழைப்பேன். இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் பேசினார்.

# மாணவர்கள் தாய்மொழியில் பேசுவதை ஊக்குவிக்க வேண்டும்
## துணை ஜனாதிபதி வெங்கய்யா நாயுடு பேச்சு

சென்னை, ஜூலை 01-

அரசு மற்றும் தனியார் பள்ளிகள் மாணவர்கள் தாய்மொழியில் பேசுவதை ஊக்குவிக்க வேண்டும் என துணை ஜனாதிபதி வெங்கய்யா நாயுடு கேட்டுக் கொண்டார்.

வி.ஐ.டி. பல்கலைக்கழகத்தின் சார்பில் திருப்போரூர் அருகே காயார் கிராமத்தில் வேலூர் இன்டர்நேஷனல் பள்ளி தொடங்கப்பட்டுள்ளது. இப்பள்ளியின் திறப்பு விழாவிற்கு வி.ஐ.டி. கல்விக்குழும தலைவரும், வி.ஐ.டி. பல்கலைக்கழக வேந்தருமான ஜி.விஸ்வநாதன் தலைமை தாங்கினார்.

துணை ஜனாதிபதி வெங்கய்யா நாயுடு சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு புதிய பள்ளிக் கட்டிடத்தை திறந்து வைத்து பேசியதாவது: பள்ளிக் கல்வியில் தாய்மொழியை பயன்படுத்துவதற்கும் நாம் உரிய கவனம் செலுத்த வேண்டும். எங்கெங்கு முடியுமோ, குறைந்தபட்சம் தொடக்க நிலை வரையிலாவது, அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் தாய்மொழியிலேயே பயிற்றுவிக்க வேண்டும். ஒருவர் தம்மால் எவ்வளவு முடியுமோ அத்தனை மொழிகளை கற்றாலும், தாய்மொழியில் வலுவான அடித்தளமிடுவது அவசியம்.

பல மொழிகளை பயில்வது குழந்தைகளிடையே மேம்பட்ட அறிவாற்றல் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என பல்வேறு ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஒருவர் தமது தாய்மொழியுடன், பிற மொழிகளிலும் புலமை பெற்றிருப்பது, கலாச்சார பிணைப்புகளை உருவாக்க உதவுவதோடு, புதிய உலக அனுபவங்களை அறிந்து கொள்ளவும் உதவும். இவ்வாறு வெங்கய்யா நாயுடு பேசினார்.

## அ.தி.மு.க.விடம் ஆதரவு கோருகிறார்:
# ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் முர்மு நாளை சென்னை வருகை

புதுடெல்லி, ஜூலை 01-

ஜனாதிபதி தேர்தலில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வேட்பாளராக ஜார்க்கண்ட் மாநில முன்னாள் ஆளுநர் திரௌபதி முர்மு (64) அறிவிக்கப்பட்டுள்ளார். கடந்த 25-ஆம் தேதி பிரதமர் மோடி தலைமையில் தனது வேட்புமனுவையும் முர்மு தாக்கல் செய்தார். மேலும், அவர் சார்பில் மத்திய ஜல்சக்தித் துறை அமைச்சர் ஷெகாவத் தலைமையிலான குழு பல்வேறு கட்சியினரை சந்தித்து ஆதரவு கோரி வருகிறது.அதுபோல முர்முவும், முக்கியக் கட்சிகளின் தலைவர்களை நேரில் சந்தித்து ஆதரவு கோரி வருகிறார்.

இதையடுத்து தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள அதிமுகவிடம் கோரிக்கை விடுப்பதற்காக திரௌபதி முர்மு நாளை (ஜூலை 2) சென்னை வரவுள்ளார். அதிமுக நாடாளுமன்ற, சட்டப்பேரவை உறுப்பினர்களை அவர் ஆதரவு கோருகிறார். முன்னதாக, தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கட்சித் தலைவரும் மாநிலங்களவை உறுப்பினருமான ஜி.கே.வாசன் தில்லியில் திரௌபதி முர்முவை திங்கள்கிழமை நேரில் சந்தித்து ஆதரவு தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

# ஒருங்கிணைப்பாளர் உணர்வில் தாங்கள் எழுதியுள்ள கடிதம் செல்லத்தக்கதல்ல
## ஓ.பன்னீர் செல்வத்திற்கு எடப்பாடி பழனிசாமி கடிதம்

சென்னை, ஜூலை 01-

ஒருங்கிணைப்பாளர் என்ற உணர்வில் தாங்கள் எழுதியுள்ள கடிதம் செல்லத்தக்கதல்ல என்று ஓ.பன்னீர் செல்வத்திற்கு எழுதியுள்ள கடிதத்தில் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க.வில் ஒற்றைத்தலைமை விவகாரம் விஸ்வரூபம் எடுத்துள்ளது. ஓ.பன்னீர் செல்வம் - எடப்பாடி பழனிசாமி தரப்பு இடையே கடந்த சில நாட்களாக கருத்து மோதல் நடைபெற்று வருகிறது. இந்த பரபரப்புக்கு மத்தியில் எடப்பாடி பழனிசாமிக்கு ஓ.பன்னீர் செல்வம் நேற்று முன்தினம் கடிதம் எழுதியிருந்தார். அதில், உள்ளாட்சி இடைத்தேர்தலில் அ.தி.மு.க. வேட்பாளர்களுக்கு சின்னம் வழங்க கையெழுத்து போட நான் தயார் என்று ஓ.பன்னீர் செல்வம் கூறியிருந்தார். இந்தக் கடிதத்தை எடப்பாடி பழனிசாமி ஏற்க மறுத்ததாக தகவல்கள் வெளியானது.

இந்த நிலையில், ஓ.பன்னீர் செல்வத்திற்கு நேற்று எடப்பாடி பழனிசாமி கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது., தங்களின் 29.06.22-ம் தேதியிட்ட கடிதம் பத்திரிகைகளின் வாயிலாக தெரிந்து கொண்டேன். பின்னர் மகாலிங்கம் வழியாக பெறப்பட்டது. கடந்த 23.06.22 அன்று நடைபெற்ற பொதுக்குழுவில் 1.12.21 அன்று செயற்குழுவால் கொண்டு வரப்பட்ட சட்ட திட்ட திருத்தங்கள் அங்கீகரிக்கப்படவில்லை. ஆதலால் அந்த சட்ட திட்ட திருத்தங்கள் காலாவதியாகி விட்டது. எனவே ஒருங்கிணைப்பாளர் என்ற உணர்வில் தாங்கள் எழுதியுள்ள கடிதம் செல்லத்தக்கதல்ல.

மேலும் உள்ளாட்சி அமைப்புகளில் தற்போது காலியாக இருக்கும் பதவிகளுக்கு நடைபெறவுள்ள தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் செய்வதற்கு கடைசி நாள் 27.06.22 அன்று முடிவுற்ற நிலையில் இத்தனை நாட்கள் பொறுத்திருந்து கட்சியின் வேட்பாளர்களை அதிகாரபூர்வமாக அறிவிக்காத நிலையிலும் 27.06.22 அன்று கூட்டப்பட்ட தலைமை கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்திற்கு தாங்கள் உட்பட அனைவருக்கும் முறையாக தகவல் தெரிவிக்கப்பட்டு மொத்தமுள்ள 74 தலைமை கழக நிர்வாகிகளில் 65 பேர் கலந்து கொண்டனர். 4 பேர் உடல்நிலை சரியில்லை என்று தகவல் தெரிவித்திருந்தனர். தாங்கள் அந்த கூட்டத்தை புறக்கணித்த நிலையில் தற்போதைய தங்களின் இந்த கடிதம் ஏற்புடையதாக இல்லை.

அதே போல் நாம் இருவரும் கூட்டாக அழைப்பு விடுத்த கட்சியின் பொதுக்குழுவை நடத்த விடாமல் தடுத்து நிறுத்துவதற்காக தாங்கள் ஆவடி காவல் ஆணையருக்கு கடிதம் மூலம் புகார் அளித்தும், நீதிமன்றங்களின் மூலம் வழக்குகளை தாக்கல் செய்தும் அ.தி.மு.க.வை செயல்படாத நிலைக்கு கொண்டு செல்வதற்கான அனைத்து பணிகளையும் செய்து விட்டு தற்போது இப்படி ஒரு கடிதத்தை எனக்கு அனுப்புவது ஏற்புடையதாக இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அந்த கடிதத்தில் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

# இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அமர்நாத் யாத்திரை தொடக்கம்

ஜம்மு, ஜூலை 01-

அமர்நாத்தில் ஜம்மு-காஷ்மீர் துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா வழிபாடு செய்தார். இதுகுறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசியதாவது,

கடந்த இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அமர்நாத் யாத்திரை பலத்த பாதுகாப்புடன் இன்று தொடங்கியுள்ளது. அதன் முதல் பூஜை நிறைவடைந்ததாகவும், அமர்நாத் யாத்திரைக்கு நாடு முழுவதும் இருந்து பக்தர்கள் வந்திருப்பதாகவும் அவர் கூறினார்.

மேலும், மகாதேவ் மற்றும் பாபா அமர்நாத் அருளால் பயணம் வெற்றியடையும் என்று எனக்கு முழு நம்பிக்கை உள்ளது. பக்தர்கள் நல்ல தரிசனம் பெறவும் அவர்கள் பத்திரமாக வீடு திரும்பவும் பிரார்த்திக்கிறேன். இந்த வாரத் தொடக்கத்தில், ஜம்முவில் அமர்நாத் யாத்திரைக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை சின்ஹா ஆய்வு செய்தார்.

அமர்நாத் யாத்திரைக்கான 43 நாட்கள் பயணம், காஷ்மீரில் உள்ள இருமுகாம்களில் இருந்து நேற்று தொடங்கி, ஆகஸ்ட் 11-ஆம் தேதி முடிவடைகிறது.

## அ.தி.மு.க பொதுக்குழுவுக்கு தடைவிதிக்க ஐகோர்ட் மறுப்பு:
# நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் மட்டும் வரும் திங்கட்கிழமை விசாரணை

சென்னை, ஜூலை 01-

அ.தி.மு.க பொதுக்குழுக் கூட்டம் தொடர்பான நீதிமன்ற அவமதிப்பு வழக்கை வரும் ஜூலை 4-ம் தேதியன்று (திங்கட்கிழமை) விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக சென்னை உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அ.தி.மு.க பொதுக்குழு கூட்டம் ஜூன் 23-ம் தேதி சென்னை வானகரத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் ஏற்கெனவே முடிவு செய்யப்பட்ட 23 தீர்மானங்கள் தவிர புதிய முடிவுகள் எடுக்க தடை கோரி பொதுக்குழு உறுப்பினர் சண்முகம் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி, பொதுக்குழு கூட்டத்தில் என்ன நடக்கப்போகிறது என்பதை இந்த நீதிமன்றம் ஊகித்து முன்கூட்டியே உத்தரவு பிறப்பிக்க முடியாது என்றும் கட்சி மற்றும் சங்க விவகாரங்களில் நீதிமன்றம் பொதுவாக தலையிடுவது இல்லை எனக்கூறி பொதுக்குழு கூட்டத்துக்கு அனுமதி வழங்கி உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை எதிர்த்து சண்முகம் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு வழக்கை நீதிபதிகள் துரைசாமி மற்றும் சுந்தர் மோகன் அமர்வு விசாரித்தது. அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், திட்டமிட்டபடி பொதுக்குழு நடத்தலாம், அதில் 23 தீர்மானம் மட்டும் நிறைவேற்றலாம், மற்ற விவகாரங்கள் குறித்து விவாதிக்கலாமே தவிர எந்த முடிவும் எடுக்க கூடாது என்று உத்தரவிட்டிருந்தனர். இதைத்தொடர்ந்து ஜூன் 23-ம் தேதி நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்தில் 23 தீர்மானங்களும் நிராகரிக்கப்படுவதாக பொதுக்குழு உறுப்பினர் சி.வி.சண்முகம் அறிவித்தார்.

மேலும், நிரந்தர அவைத் தலைவராக தமிழ்மகன் உசேனை நியமிக்கும் தீர்மானத்தை இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி முன்மொழிந்தார். அதனை, பொதுக்குழு உறுப்பினர்கள் டி.ஜெயக்குமார் மற்றும் திண்டுக்கல் சீனிவாசன் ஆகியோர் வழிமொழிந்தனர். அடுத்த பொதுக்குழு கூட்டம் ஜூலை 11-ம் தேதி நடைபெறும் என தமிழ்மகன் உசேன் அறிவித்தார்.

இதையடுத்து, நீதிமன்ற உத்தரவை மீறி ஜூலை 11-ம் தேதி பொதுக்குழு கூட்டம் நடைபெறும் என அறிவித்த இ.பி.எஸ் தரப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் சண்முகம் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்துள்ளார். அந்த மனுவில், உயர் நீதிமன்ற உத்தரவை வேண்டுமென்றே அவமதித்த இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி கே. பழனிசாமி, முன்னாள் அமைச்சர்கள் சி.வி. சண்முகம், டி.ஜெயக்குமார், திண்டுக்கல் சீனிவாசன், கே.பி.முனுசாமி, அவைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள தமிழ் மகன் உசேன் ஆகியோரை நீதிமன்ற அவமதிப்பு சட்டத்தின் கீழ் தண்டிக்க வேண்டும்.

அதேபோல, பொதுக்குழுவில் 23 தீர்மானங்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில், அவைத் தலைவராக தமிழ்மகன் உசேனை நியமிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்த இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி, அதை வழிமொழிந்த டி.ஜெயக்குமார், திண்டுக்கல் சீனிவாசன் ஆகியோரை நீதிமன்ற அவமதிப்பு வழக்கின் கீழ் தண்டிக்க வேண்டும்.

தமிழ்மகன் உசேன் நியமிக்கப்பட்டதே நீதிமன்ற அவமதிப்பாக உள்ளபோது, அடுத்த பொதுக்குழு ஜூலை 11-ம் தேதி நடைபெறும் என அவர் அறிவித்தது மன்னிக்க முடியாத செயலாகும். இது நீதிமன்ற உத்தரவை மீறுவதற்கான சதித்திட்டத்தை வெளிப்படுத்துகிறது. நிரந்தர அவைத் தலைவராக தமிழ்மகன் உசேன் நியமிக்கப்பட்ட உத்தரவுக்கு தடை விதிக்க வேண்டும்.

கட்சி விதிகளின்படி ஒருங்கிணைப்பாளர் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் இணைந்து பொதுக்குழு கூட்டம் நடைபெறும் என அறிவிக்காததால், ஜூலை 11ஆம் தேதி பொதுக்குழுக் கூட்டம் நடத்தவும் தடை விதிக்க வேண்டும் என கோரியிருந்தார்.

இந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கை அவசர வழக்காக விசாரணைக்கு எடுக்கக் கோரி நீதிபதிகள் துரைசாமி மற்றும் சுந்தர் மோகன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் , சண்முகம் தரப்பில் நேற்று முறையீடு செய்யப்பட்டது. இதுதொடர்பான மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உயர்நீதிமன்றம், ஜூலை 11 ம் தேதி நடைபெற இருந்த அ.தி.மு.க பொதுக்குழுவுக்கு தடை விதிக்க மறுப்பு தெரிவித்துள்ளது. மேலும், நீதிமன்ற அவமதிப்பு வழக்கை மட்டும் ஜூலை 4-ம் தேதி விசாரிக்க உயர்நீதிமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

## இரட்டை இல்லை சின்னம் கிடைப்பதில் சிக்கல்:
# உள்ளாட்சி இடைத்தேர்தலில் சில இடங்களை புறக்கணித்த அ.தி.மு.க

சென்னை, ஜூலை 01-

இரட்டை இல்லை சின்னம் கிடைப்பதில் உள்ள சிக்கல் காரணமாக நடைபெறவுள்ள உள்ளாட்சி இடைத்தேர்தலில் சில இடங்களில் போட்டியிடாமல் அ.தி.மு.க புறக்கணித்துள்ளது.

தமிழகத்தில் காலியாக உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஜூலை 9-ம் தேதி தேர்தல் நடைபெறும் என்று மாநில தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதன்படி மொத்தம் 510 பதவிகளுக்கு தேர்தல் நடைபெறுகிறது. இந்தப் பதவிகளுக்கான வேட்புமனு தாக்கல் கடந்த 20-ம் தேதி தொடங்கி 27 ஆம் தேதி நிறைவு பெற்றது. வேட்புமனுக்களை திரும்பப் பெற நேற்று கடைசி நாள் ஆகும்.

510 பதவிகளில் 34 பதவிகளுக்கு கட்சி அடிப்படையில் தேர்தல் நடைபெற உள்ளது. அ.தி.மு.கவில் எழுந்துள்ள ஒற்றைத் தலைமை விவகாரத்தினால் கட்சி வேட்பாளர்களை அங்கீகரித்து படிவம் ஏ மற்றும் படிவம் பி ஆகியவற்றில் கையொப்பமிடுவதில் ஒருங்கிணைப்பாளர்களுக்கு இடையே கருத்து வேறுபாடு தொடர்கிறது.

உள்ளாட்சி தேர்தலில் போட்டியிடுவோரின் வேட்புமனுக்கள் பரிசீலனை 27-ம் தேதி நிறைவு பெற்றது. வேட்புமனுவை வாபஸ் நேற்று கடைசி நாள் ஆகும். வாபஸ் பெறுவதற்கான கால அவகாசம் நிறைவடைவதற்கு முன்பாகவே படிவங்களை வழங்கினால் சின்னம் ஒதுக்கப்படும் என தேர்தல் ஆணையம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று மாலை 3 மணியுடன் வேட்புமனு திரும்ப பெறுவதற்கான கால அவகாசம் நிறைவடைந்ததை முன்னிட்டு சுயேட்சை வேட்பாளர்களுக்கு சின்னம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

முன்னதாக கட்சித் தலைமை கையொப்பமிட்டு ஒப்புதல் அளித்தால் மட்டுமே அதிமுக வேட்பாளர்களுக்கு இரட்டை இலை சின்னம் கிடைக்கும் என்ற நிலை இருந்தது. இந்நிலையில் இரட்டை இல்லை சின்னம் கிடைப்பத்தில் உள்ள சிக்கல் காரணமாக உள்ளாட்சி தேர்தலை அ.தி.மு.க புறக்கணித்து உள்ளது.

இதன்படி காஞ்சிபுரம் மாநகராட்சியில் 36-வது வார்டு, தஞ்சாவூர் மாநகராட்சியில் 8-வது வார்டு , தேனி பெரியகுளம் நகராட்சியில் 26 -வார்டு, மயிலாடுதுறை நகராட்சியில் 19 -வது வார்டு, மாவட்ட கவுன்சிலர் பதவியிடங்களில் புதுக்கோட்டையில் 7- வது வார்டு மற்றும் கடலூரில் 26- வது வார்டு ஆகியவற்றில் அதிமுக வேட்பாளர்கள் களமிறங்கவில்லை.

அதேசமயம் மீதமுள்ள ஒன்றிய கவுன்சிலர், பேரூராட்சி கவுன்சிலர், மற்ற இதர ஊராட்சி பதவியிடங்களில் அதிமுக சார்பில் போட்டியிட வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளனர். ஆனால் அவர்களுக்கு படிவம் ஏ மற்றும் படிவம் பி வழங்கப்படாத நிலையில் அவர்கள் சுயேட்சை வேட்பாளர்களாகவே கருதப்படும் சூழல் உள்ளது.

# பான் - ஆதாரை இணைக்காவிட்டால் இன்று முதல் 1,000 ரூபாய் அபராதம்

புதுடெல்லி, ஜூலை 01-

நிரந்தர கணக்கு எண் எனப்படும் பான் எண்ணுடன் ஆதார் எண்ணை இணைக்க ஜூன் 30-ம் தேதி (நேற்று) கடைசி நாளாகும். ஒரு வேளை பான் எண்ணுடன் ஆதார் எண்ணை இணைக்கவிட்டால் இன்று முதல் இரண்டு மடங்கு, அதாவது. ரூ. 1,000 அபராதம் செலுத்தவேண்டியிருக்கும் என்று மத்திய நேரடி வரி வாரியம் அறிவித்துள்ளது.

நிரந்தர கணக்கு எண்ணுடன் ஆதாரை இணைப்பதற்கான கால அவகாசத்தை மத்திய அரசு பலமுறை நீட்டித்து வந்த நிலையில், தற்போது அதற்கு இறுதிக் கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஜூன் 30-ம் தேதிக்குள் ஆதார் - பான் எண்ணை இணைக்க வேண்டும். அவ்வாறு இணைக்க வேண்டுமென்றால், அபராதமாக ரூ.500 செலுத்தி 4 - 5 நாள்களுக்குப் பிறகுதான் பான் எண்ணுடன் ஆதார் எண்ணை இணைக்க முடியும். ஜூலை 1ம் தேதி முதல் இந்த அபராதத் தொகை ரூ.1,000 ஆக அதிகரிக்கப்படுகிறது.

ஏற்கனவே, நிரந்தர கணக்கு எண்ணுடன் ஆதாரை இணைக்க மார்ச் 31ஆம் தேதிவரை கால அவகாசம் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க...



இன்னும்கூட அ.தி.மு.க.வில் எனது ஸ்லீப்பர்செல்கள் இருக்கின்றனர். அ.தி.மு.கவின் தற்போதைய நிலைமையைப் பார்க்க வருத்தமாக உள்ளது. எனக்கும் அ.தி.மு.கவுக்கும் சம்பந்தமில்லை. நாங்கள் நரிக்கூட்டத்தில் சேர விரும்ப மாட்டோம்.

- டிடிவி தினகரன்



தமிழகம் முழுவதும் கடந்த சில மாதங்களில் புதிதாக திறக்கப்படும் டாஸ்மாக் மதுக்கடைகளுக்கு எதிரான பொதுமக்களின் போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன. அரசின் வருமானத்திற்காக மக்களை பலி கொடுக்கும் இச்செயலை தமிழக அரசு உடனே தடுத்து நிறுத்த வேண்டும்.

- கமல்ஹாசன்



மீண்டும் மீண்டும் தற்காலிக அடிப்படையில் ஆசிரியர்களை நியமிப்பதால் மாணவர்களின் கல்வித்தரம் பாதிக்கப்படும். எனவே, தற்போது தற்காலிக முறையில் ஆசிரியர்கள் நியமிப்பதை தமிழக அரசு கைவிட வேண்டும். ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் நிரந்தர அடிப்படையில் நியமனம் செய்ய வேண்டும்.

- கே.பாலகிருஷ்ணன்



சிவசேனா அதிகாரத்திற்காகப் பிறக்கவில்லை. அதிகாரம்தான் சிவசேனாவுக்காக பிறந்தது. இது பாலாசாகேப் தாக்கரேயின் மந்திரம். மீண்டும் தனித்து செயல்பட்டு நாங்கள் ஆட்சிக்கு வருவோம்.

- சஞ்சய் ராவத்

தினபூமி, மதுரை
thinaboomi.com
ஜூலை 01, 2022

# ஒட்டன்சத்திரம் ஒன்றியம் 15-வது வார்டு கவுன்சிலர் போட்டியின்றி தேர்வு



**ஒட்டன்சத்திரம், ஜூலை 01-**
திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம் லெக்கையன் கோட்டை மற்றும் அத்திக் கோம்பைக்கு உட்பட்ட 15-வது வார்டு ஒன்றிய கவுன்சிலர் தங்கராஜ் என்பவர் இறந்துவிட்டதால், அதற்கான தேர்தல் நடைபெறுவதற்கு வேட்புமனுக்கள் வாங்கப்பட்டு, திமுக வேட்பாளர் சண்முகம், சுயேட்சை வேட்பாளர்கள் விக்னேஷ்வரன், மோகன்ராஜ், செல்வராஜ் ஆகியோர்கள் மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

சுயேட்வை வேட்பாளர்கள் மூவரும் தங்கள் மனுக்களை வாபஸ் பெற்றுக் கொண்டதால் தி முக வேட்பாளர் சண்முகம் போட்டியின்றி 15-வது வார்டு ஒன்றிய கவுன்சிலாக தேர்வு செய்யப்பட்டார். தேர்வு செய்யப்பட்டதற்கான சான்றிதழ்களை தேர்தல் நடத்தும் அலுவலர் கிரி வழங்கினார். அதே போல் வாடிப்பட்டி ஊராட்சியில் 4-வது வார்டு உறுப்பினராக பன்னீர்செல்வி என்பவரும் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார்.

இந்நிகழ்வின்போது ஒன்றிய செயலாளர் ஜோதீஸ்வரன், ஒன்றிய பெருந்தலைவர் அய்யம்மாள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் காமராஜ், அந்தோனியார், மேலாளர் வடிவேல்முருகன், ஊராட்சிமன்ற தலைவர்கள் சிவராமகிருஷ்ணன், செல்லம்மாள்தண்டபாணி, செல்வராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

# சாக்கடை தேங்காமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் முதுகுளத்தூர் கவுன்சிலர்கள் கோரிக்கை



**முதுகுளத்தூர், ஜூலை 01-**
முதுகுளத்தூர் டவுனில் சாக்கடைகள் தேங்காமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். முதுகுளத்தூர் பேரூராட்சி அலுவலகத்தில் வார்டு கவுன்சிலர்கள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு பேரூராட்சி சேர்மன் ஏ.ஷாஜகான் தலைமை தாங்கினர். செயல் அலுவலர் மாலதி முன்னிலை வகித்தனர். பேரூராட்சி கவுன்சிலர்கள் கூறியதாவது: மோகன் தாஸ்: திருவள்ளுவர் தெரு- செட்டியார் தெரு-காவல்காரன் தெரு ஆகிய பகுதிகளில் கிடக்கின்ற சாக்கடையை தேங்காமல் சுத்தம் செய்ய வேண்டும். சர்வேயரையும் நியமிக்க வேண்டும். சேர்மன் ஷாஜஹான்: சாக்கடையை சுத்தப்படுத்த விரைவான நடவடிக்கை எடுக்கப்படும். துப்புரவு பணியாளர்கள் கூடுதலாக நியமிக்கவும் -தினசரி சந்தை கடை மற்றும் மீன் கடை புது ஏலம் குறித்தும் முடிவு எடுக்கப்படும். இவ்வாறு கூறினார். கூட்டத்தில் பேரூராட்சியின் வரவு செலவு குறித்தும் வாசிக்கப்பட்டன.

கவுன்சிலர்கள் கருப்பணன்-மீனாள்-முகமதுமீரா-பால்ச்சாமி-பேரூராட்சி அலுவலர்கள் ராஜேஸ்-முனியசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# ஆர்.எஸ்.மங்கலம் வட்டாரத்தில் வேளாண்துறை சார்பில் மண்பரிசோதனை முகாம்



**ராமநாதபுரம், ஜூலை 01-**
ராமநாதபுரம் மாவட்டம் ஆர்.எஸ்.மங்கலம் வட்டாரத்தில் வேளாண்துறை சார்பில் மண்பரிசோதனை முகாம் நடைபெற்றது.

ராமநாதபுரம் மாவட்டம் ஆர்.எஸ்.மங்கலம் வட்டாரம் வேளாண்மை உழவர்நலத்துறை சார்பில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட கிராமமான கொத்திடல் களக்குடி கிராமத்தில் நடமாடும் மண்பரிசோதனை நிலைய வாகனத்தின் மூலம் மண்பரிசோதனை முகாம் நடைபெற்றது.

இம்முகாமிற்கு வட்டரா வேளாண்மை உதவி இயக்குநர் ஆர்.இராஜலெட்சுமி தலைமை வகித்தார். அவர் தம் உரையில் மண் பரிசோதனை செய்வதன் மூலம் மண்ணில் உள்ள சத்துப்பற்றாக்குறையினை கண்டறிந்து அதற்கேற்றவாறு உரமிடுவதன் மூலம் உரச்செலவினை குறைக்கவும் மண்வளத்தினை பாதுகாக்க முடியும் என விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

இம்முகாமில் மண்மாதிரி எடுக்கும் முறைகள் குறித்து வேளாண்மை அலுவலர் கலைப்பிரியா விவாயிகளுக்கு செயல்விளக்கம் செய்து காண்பித்தார். விவசாயிகள் தங்கள் வயல்களில் சேகரித்து வந்த மண்மாதிரிகளை ஆய்வுசெய்து மண்ணில் உள்ள சத்துகளின் விபரங்களை நடமாடும் மண்பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் உமாதேவி மண்வள அட்டையில் பதிவுசெய்தார்.

மண்பரிசோதனையில் கண்டறியபட்ட சத்துகளின் விபரங்கள் பதிவேற்றம் செய்யப்பட்ட மண்வள அட்டையை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஆர்.இராஜலெட்சுமி விவசாயிகளுக்கு வழங்கினார். இம்முகாமிற்கான ஏற்பாடுகளை வேளாண்மை உதவி அலுவலர் பவித்ரா மற்றும் அங்காளேஸ்வரி ஆகியோர் செய்திருந்தனர். இம்முகாமில் கொத்திடல் களக்குடி விவசாயபெருமக்கள் கலந்து கொண்டனர்.

### இட ஒதுக்கீட்டின் கீழ் முன்னாள் படை வீரர்களின்

# குழந்தைகள் மேல்படிப்பில் சேர இணையத்தில் விண்ணப்பிக்கலாம்

**சிவகங்கை, ஜூலை 01-**
சிவகங்கை மாவட்டத்தைச் சார்ந்த முன்னாள் படைவீரரது குழந்தைகள் 12-ம் வகுப்பில் தேர்ச்சி பெற்று 2022-2023 கல்வியாண்டில் முன்னாள் படைவீரர்களுக்கான இட ஒதுக்கீட்டின் படி, மேற்படிப்பில் சேர சார்ந்தோர் சான்று தேவைப்படுவோர் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தை நேரில் அணுகி அல்லது exwelsvg@tn.gov.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

மேலும், பல்கலைக்கழக கல்லூரி சேர்க்கைக்கான விண்ணப்பத்தில் முன்னாள் படைவீரர் இட ஒதுக்கீட்டில் உரிய தேர்வு (டிக்) செய்வதுடன் சார்ந்தோர் சான்றின் நகலினை கட்டாயம் இணைத்து அனுப்ப வேண்டும். கலந்தாய்வின் போது அசல் சார்ந்தோர் சான்றினை எடுத்து செல்ல வேண்டும்.

கடந்த ஆண்டு பெற்ற சார்ந்தோர் சான்றினை பயன் படுத்தக் கூடாது.

மேற்படிப்பில் சேரும் சிறார்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படுவதால் உரிய விபரத்தை மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தில் நேரிலோ அல்லது 04575 240483 என்ற தொலைபேசி எண்ணிற்கு தொடர்பு கொண்டு பயனடையுமாறு சிவகங்கை மாவட்ட கலெக்டர் மதுசூதன் ரெட்டி தெரிவித்துள்ளார்.



விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலராக ரவிக்குமார் பொறுப்பேற்றுக் கொண்டார்.

# ஹிமாலயா வெல்னஸ் நிறுவனம் புதிய விளம்பரப் படத்தை வெளியிட்டுள்ளது

**திருநெல்வேலி, ஜூலை 01-**
இந்தியாவின் முன்னணி உடல் நல தயாரிப்புகளின் உற்பத்தி நிறுவனமான ஹிமாலயா வெல்னஸ் கம்பெனி, அனைவருக்குமான ஒரு புதிய விளம்பரப் படத்தை வெளியிட்டுள்ளது. உடல் நலம் மற்றும் நல்வாழ்வு குறித்த விழிப்புணர்வை அனைத்து வயது நுகர்வோருக்கும் ஏற்படுத்துவது இதன் நோக்கமாகும்.

"ஒவ்வொரு இல்லத்திலும் நோயற்ற நல்வாழ்வு, ஒவ்வொரு மனதிலும் மகிழ்ச்சி", என்கிற ஹிமாலயா நிறுவனத்தின் இலக்கிற்கு உயிரூட்டும் விதமாக இந்த விளம்பரப் படம் அமைந்துள்ளது. கடந்த 90 ஆண்டுகளாக உலகம் முழுவதும் உள்ள நுகர்வோர் பெரிதும் விரும்பும் வகையில் உடல் நலம் மற்றும் நல்வாழ்வுக்கான தயாரிப்புகளை வழங்குவதில் ஹிமாலயா முன்னணி வகித்துவருகிறது. ஆரோக்கியம் மற்றும் நோயற்ற நல்வாழ்விற்கு நாம் ஒவ்வொருவரும் முக்கியத்துவம் அளித்தால் உலகம் மகிழ்ச்சியான ஒரு இடமாக இருக்குமென ஹிமாலயா கருதுகிறது. நமது வாழ்க்கைமுறையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தவும்; உடல் ஆரோக்கியத்திற்கும், நலமான வாழ்விற்காகவும் சுகாதார நடவடிக்கைகளை முன்னதாக மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் இந்த புதிய விளம்பரம் காட்டுகிறது.

இவ்விளம்பரம் குறித்து, ஹிமாலயா வெல்னஸ் நிறுவனத்தின், கன்ஸ்யூமர் புராடக்ட்ஸ் பிரிவின் – பிஸ்னஸ் டைரக்டர், ராஜேஷ் கிருஷ்ணமூர்த்தி தெரிவிக்கையில், "ஹிமாலயாவில், நோயற்ற நல்வாழ்வே உண்மையான மகிழ்ச்சி என நாங்கள் நம்புகிறோம். ஆரோக்கியத்துடன் மகிழ்ச்சியாக இருக்க நோயற்ற நல்வாழ்வின் பங்கு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த விளம்பரத்தின் நோக்கமும் ஆகும். தலை முதல் கால் வரை நுகர்வோருக்காக பல்வேறு வகையான தயாரிப்புகளை உருவாக்கி வழங்குவதில் ஹிமாலயா முன்னணி வகித்து வருகிறது. 'ஒவ்வொரு இல்லத்திலும் நோயற்ற நல்வாழ்வு, ஒவ்வொரு மனத்திலும் மகிழ்ச்சி', என்கிற எங்களது இலக்கினை உறுதி செய்யும் விதமாக இந்த படைப்பு இருக்கும்," என்று தெரிவித்தார்.

# சதுரகிரி வழுக்குப்பாறை தடாகத்தில் தவறி விழுந்து வாலிபர் உயிரிழப்பு

**திருமங்கலம், ஜூலை 01-**
விருதுநகர் மாவட்டம் சிவகாசி போலீஸ் ரிசர்வ் லைனில் குடியிருப்பவர் கார்த்திகைமணி. இவர் சிவகாசி கிழக்கு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறார்.இவருடைய மகன் முருகப்பன்(19) தனது நண்பர்களுடன் நேற்று முன்தினம் சாப்டூர் சதுரகிரி சுந்தரமகாலிங்கம் கோவிலுக்கு சாமி கும்பிட சென்றார். இந்நிலையில் தனது நண்பர்களுடன் மகாலிங்கம் மலையில் உள்ள வழுக்குப் பாறையில் அருகே உள்ள தண்ணீர் தடாகத்தில் குளிக்க சென்றுள்ளார். அப்போது மேலிருந்து குதித்தபோது பாறையில் மோதி தலையில் காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.இச்சம்பவம் குறித்து தகவலறிந்த சாப்டூர் போலீசார் விரைந்து வந்து உடலைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விட்டு சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நிஷா கணேஷ் மலையேற்ற குறிப்புக்களை பகிர்ந்து கொள்கிறார்

**கோயம்புத்தூர், ஜூலை 01-**
கோவிட் 19 கட்டுப்பாடுகள் காரணமாக நாம் அனைவரும் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக வீட்டிற்குள்ளேயே பெரும்பாலான நேரத்தை செலவிட்டுள்ளோம். அதிர்ஷ்டவசமாக, நிலைமை மேம்பட்டுள்ளது மற்றும் குறைவான பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக சில வெளிப்புற பொழுதுபோக்கு நடவடிக்கைகளுடன் நம்மை நாமே நடத்துவதற்கான வாய்ப்பை வழங்குகிறது. மலையேற்றம் என்பது நீங்கள் தனியாக அல்லது குடும்பமாக அல்லது நண்பர்களுடன் அனுபவத்தை அனுபவிக்க கூடியது.

" மலையேற்றத்தின் போது உண்ணக்கூடிய சிறந்த தின்பண்டங்கள் அல்லது உணவுகள் எளிதில் எடுத்துச் செல்லக் கூடியவையாக, வசதியானவையாக மற்றும் மாறிவரும் கால நிலையில் புதியதாக இருக்கவேண்டும். நான் எப்போதும் என் மலையேற்ற பையில் பாதாம் ஒரு பெட்டியை எடுத்துச் செல்வேன், அதை நான் நாள் முழுவதும் சாப்பிடுவேன். பாதாம் போன்ற தின்பண்டங்கள் ஆரோக்கியமானவை, மற்றும் உணவு இடைவெளியில் என்னை திருப்திப்படுத்துகின்றன. பாதாமில் அதிக புரதம் உள்ளது மற்றும் வைட்டமின் பி2, வைட்டமின் ஈ, மெக்னீசியம் மற்றும் பாஸ்பரஸ் போன்ற ஏராளமான ஊட்டச்சத்துக்கள் உள்ளன. பாதாம் ஒரு ஆரோக்கியமான ஆற்றல் மூலமாக இருப்பதால், மேல்நோக்கிய நிலப்பரப்பின் கடினமான பரப்புகளில் மலையேற்றம் செய்யும்போது சகிப்புத்தன்மையை பராமரிக்க உதவுகிறது. குறைந்த வெப்பநிலை மற்றும் அதிக உயரங்களின் கலவையானது உங்களுக்கு தாகத்தை ஏற்படுத்துவது உறுதி. நீங்கள் மலைகளில் மேலே ஏறும்போது காற்று மெல்லியதாகிறது. உங்கள் உடலின் ஆக்ஸிஜன் அளவை பராமரிக்க சீரான இடைவெளியில் உங்களை நீரேற்றம் செய்துகொண்டால் அது உங்களுக்கு உதவியாக இருக்கும்" என மலையேற்ற ஆர்வலர் மற்றும் நடிகை நிஷா கணேஷ் கூறினார்.

# அனுமதியின்றி பட்டாசு தயாரிப்பு தடுக்க தனிப்படைகள் அமைப்பு

## டி.எஸ்.பி பாபு பிரசாத் தகவல்

**விருதுநகர், ஜூலை 01-**
சிவகாசி பகுதியில் சீல் வைக்கப்பட்ட பட்டாசு ஆலைகளில் பட்டாசு தயாரிப்பது தடுக்க இரு தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளதாக டி.எஸ்.பி. பாபு பிரசாத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியதாவது சிவகாசி பகுதியில் சீல் வைக்கப்பட்ட பட்டாசு ஆலைகளில் அனுமதி இன்றியும், இரவிலும், மரத்தடியிலும் பட்டாசு தயாரிப்பது தடுக்கவும் தடை செய்யப்பட்ட சரவெடி தயாரிப்பது தடுப்பதற்காகவும் சார்பு ஆய்வாளர்கள் விஜய சண்முகநாதன், சுந்தர்ராஜன் தலைமையில் தனி படைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் விதிமுறைகளை மீறுவோர் மீது கடுமையாக நடுக்க எடுக்கப்படும் என டி.எஸ். பி பாபு பிரசாத் கூறினார்.

# திருமங்கலத்தில் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் நடைபெறும் பணிகள்

## ப.மாணிக்க தாகூர் எம்.பி., நேரில் ஆய்வு



**திருமங்கலம் ஜூலை 01-**
மதுரை மாவட்டம் திருமங்கலம் தொகுதிக்குட்பட்ட பல்வேறு கிராமங்களில் நடைபெறும் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தில் பார்க்கும் பணிகளை விருதுநகர் நாடாளுமன்ற உறுப்பினர் மாணிக் தாகூர் நேரில் ஆய்வு மேற்கொண்டு பயனாளிகளிடம் குறைகளை கேட்டறிந்ததுடன்,ஜி.எஸ்.டி கவுன்சில் கூட்டத்தின் முடிவு அதிர்ச்சிகரமாக உள்ளது, ஏழை எளிய மக்களை பாதிக்கும் வகையில் உயர்த்தப்பட்டுள்ள வரிகளை குறைத்திட வேண்டும் என செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் கப்பலூர், மதிப்பனூர், அலப்பலச்சேரி, நடுவக்கோட்டை அச்சம்பட்டி ஆகிய பகுதிகளில் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பணிகளை விருதுநகர் நாடாளுமன்ற உறுப்பினர் ப.மாணிக் தாகூர் நேரில் பார்வையிட்டு பணிகளின் விபரங்கள் குறித்து பயனாளிகளிடம் கேட்டறிந்தார். அப்போது காலையில் 7:00 மணிக்கு வருகை பதிவு செய்திட வேலைக்கு வருவதால் வீட்டுப் பணிகளை பார்ப்பதில் சிரமம் ஏற்படுவதாக பெண்கள் குற்றம்சாட்டினர் .இதுதொடர்பாக பாராளுமன்றத்தில் குரல் கொடுத்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் ப.மாணிக்தாகூர் எம்.பி., கூறுகையில்: 100 நாள் வேலை திட்டத்தை ஆய்வு செய்ய வந்துள்ளோம். பொதுமக்கள் காலையில் எட்டு மணிக்கு வேலைக்கு வந்தவுடன் போட்டோ எடுத்து அனுப்புவதால் வீட்டில் வேலை பார்ப்பது சிரமமாக உள்ளதாகவும், இது தொடர்பாக மத்திய அமைச்சரிடம் கோரிக்கை வைப்பேன்.

இந்தியா முழுவதும் 6 லட்சம் பேர் உடனடியாக ஒரே நேரத்தில் பணித்தளத்திலிருந்து போட்டோ எடுத்து அனுப்புவதால் சர்வர் ஓவர் லோடாகி காலதாமதம் ஆகிறது.

இதனால் பணி செய்தாலும் அவர்களுக்கு ஊதியம் கிடைப்பதில்லை. 100 நாள் திட்டத்தை சோனியா காந்தி அவர்கள் பெண்களின் பாதுகாப்பு திட்டமாக அறிவித்து இருந்தார். எனவே 11 மணி கால நேரத்தை ஒரு மணி ஆக மாற்ற பிஜேபி அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் 30 நாட்கள் மட்டுமே வேலை கிடைக்கிறது.ஆதலால் முழுமையான பணி நாட்கள் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தின் முடிவு அதிர்ச்சிகரமாக உள்ளது. மிகப்பெரிய அளவில் ஏழை எளிய மக்களை பாதிக்கும் வகையில் உள்ளது. ஏற்கனவே மத்திய அரசு பெட்ரோல் டீசல் விலையை உயர்த்தி உள்ளது. தற்போது அத்தியாயசிய பொருட்கள் விலை 18 சதவீதம் வரி உயர்த்தப்பட்டுள்ளது வன்மையாக கண்டிக்கப்படத்தக்கது.இதனால் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்துவது மத்திய அரசின் கடமையாகும்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வினில் மதுரை தெற்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் அம்மாபட்டி எம்.பாண்டியன், வட்டார தலைவர் முருகேசன், திருமங்கலம் நகர் தலைவர் கரிசல்பட்டி எஸ்.சௌந்திரபாண்டி, கப்பலூர் ஊராட்சி மன்ற தலைவர் கண்ணன், ஊராட்சி செயலாளர் அழகர்சாமி மற்றும் அதிகாரிகள் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# 12-ம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு உயர்கல்விக்கு வழிகாட்டும் நிகழ்ச்சி

## சப் கலெக்டர் பிருத்திவிராஜ் தலைமையில் நடந்தது



**விருதுநகர், ஜூலை 01-**
விருதுநகர் வட்டம், ஆமத்தூர் AAA.பொறியியல் கல்லூரியில் பன்னிரெண்டாம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு உயர்கல்விக்கு வழிகாட்டும் கல்லூரி கனவு நிகழ்ச்சி சார் ஆட்சியர் பிருத்திவிராஜ். தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், சப் கலெக்டர் கூறியதாவது.தமிழ்நாட்டில் 12-ம் வகுப்பு பொது தேர்வு முடிவுகள் வெளியாகி, கலை, அறிவியல், பொறியியல் உள்ளிட்ட படிப்புகளுக்கான விண்ணப்ப விநியோகம் நடைபெற்று வருகிறது. மேல்நிலைப் பள்ளிகளில் படித்து தேர்ச்சி பெற்ற மாணவ - மாணவிகள் தங்களுக்கு உயர்கல்விக்கு உள்ள வாய்ப்பு குறித்து பட்டப்படிப்புகள், பட்டயப்படிப்புகள் என பிரிவு வாரியாக அறிய வைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இந்த வழிகாட்டுதல் நிகழ்ச்சியில் மேனிலை இரண்டாம் ஆண்டு முடித்த மாணவர்களுக்கான பல்வேறு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் பற்றிய விவரங்களும், பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம், கலைப் படிப்புகள், அறிவியல் படிப்புகள் மற்றும் ஊடகவியல் சார்ந்த படிப்புகள் என பல்வேறு படிப்புகளில் உள்ள உட்பிரிவுகளும் அவற்றிற்கான வேலைவாய்ப்புகள் தொடர்பாக விளக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் பங்கேற்று பயனடையுமாறு சிவகாசி சார்ஆட்சியர் பிருத்திவிராஜ். தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட் ;ட வருவாய் அலுவலர் இரா. மங்களராமசுப்பிரமணியன், மாவட்ட முதன்மை அலுவலர் தஞானகௌரி, சிவகாசி ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் முத்துலெட்சுமி விவேகன்ராஜ், திருச்சுழி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் பொன்னுசாமி, மாவட்ட கல்வி அலுவலர்கள், AAA.பொறியியல் கல்லூரி தாளாளர் விக்னேஷ்வரன், AAA.பொறியியல் கல்லூரி முதல்வர் சேகர் மற்றும் ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# டி.கல்லுப்பட்டியில் மனைவியை கம்பியால் அடித்து கொலை செய்த கணவன் கைது

**திருமங்கலம், ஜூலை 01-**
மதுரை மாவட்டம் டி. கல்லுப்பட்டியில் நடத்தையில் ஏற்பட்ட சந்தேகத்தால் மனைவியை கம்பியால் அடித்து கொலை செய்த சம்பவம் தொடர்பாக கணவனை டி.கல்லுப்பட்டி போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். டி.கல்லுப்பட்டி பி.ஆர் நகர் பகுதியைச் சேர்ந்தவர் கிருஷ்ணன்(44). இவருடைய மனைவி முருகாம்பாள்(40). இவர்களுக்கு 13 வயதில் விக்னேஷ் என்ற மகன் உள்ளான். கிருஷ்ணன் தனியார் நிறுவனத்தில் காவலாளியாக வேலை பார்த்து வந்தார்.மனைவி முருகாம்பாள் தனியார் மில்லில் வேலை பார்த்து வந்துள்ளார். இந்நிலையில் கிருஷ்ணன் கடந்த ஒரு வருட காலமாக வேலைக்குச் செல்லவில்லை என கூறப்படுகிறது.

மேலும் மனைவி முருகாம்பாள் நடத்தையில் சந்தேகம் கொண்டு தகராறு செய்து வந்ததாக கூறப்படுகிறது. இதனிடையே நேற்று முன்தினம் இரவு இருவருக்கும் பிரச்சனை ஏற்பட்டுள்ளது. அப்போது நேற்று அதிகாலை தூங்கிக் கொண்டிருந்த மனைவி முருகாம்பாளின் தலையில் கணவன் கிருஷ்ணன் கம்பியால் தாக்கியதில் அவர் ரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார்.இதனை தொடர்ந்து கணவர் கிருஷ்ணன் கல்லுப்பட்டி காவல் நிலையத்தில் சரணடைந்தார். பின்னர் டி. கல்லுப்பட்டி போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து விசாரணை நடத்தியதுடன் முருகம்பாள் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.மேலும் சம்பவம் தொடர்பாக கணவன் கிருஷ்ணனிடம் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## நான் முதல்வன் திட்டத்தின் கீழ்

# மாணவர்களின் உயர்கல்விக்கான வழிகாட்டி விழிப்புணர்வு நிகழ்ச்சி

## அமைச்சர் பி.மூர்த்தி தொடங்கி வைத்தார்



**மதுரை, ஜூலை 01-**

மதுரை விரகனூரில் உள்ள வேலம்மாள் பொறியியல் கல்லூரியில் நேற்று பள்ளிக்கல்வித் துறை சார்பாக அமைச்சர் பி.மூர்த்தி, நான் முதல்வன் திட்டத்தின் கீழ் கல்லூரி கனவு என்ற தலைப்பில் மேல்நிலைக் கல்வி பயின்ற மாணவ, மாணவியர்கள் உயர்கல்விக்கான வழிகாட்டி விழிப்புணர்வு நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் பேசியதாவது:-

மாணவ, மாணவியர்கள் புத்தகப் படிப்பு மட்டுமல்லாது, தனித்திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் நான் முதல்வன் என்ற புதிய திட்டத்தை முதல்வர் தொடங்கி வைத்துள்ளார். இத்திட்டத்தின் கீழ், மாணவ மாணவியர்களுக்கு தமிழில் தனித்திறன் பெற சிறப்புப் பயிற்சியுடன் ஆங்கிலத்தில் எழுதவும், சரளமாகப் பேசவதற்கும், நேர்முக தேர்வுக்கு தயாராகுவது குறித்தும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றது. மேல்நிலைக்கல்விப் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு தங்களது எதிர்காலம் குறித்த தெளிவான சிந்தனை இருந்திட வேண்டும். கல்வியில் உயர்ந்த கல்வி, தாழ்ந்த கல்வி என எதுவும் இல்லை.

குழந்தைகள் தங்களுக்கு விருப்பமான பாடங்கள் தொடர்பான உயர்க்கல்வி வாய்ப்புகளை தேர்வு செய்திட வேண்டும். அத்துறையில் உள்ள புதிய தகவல்களையும், தொழில்நுட்ப முன்னேற்றங்களையும் தொடர்ந்து கற்றறிந்திட வேண்டும். இதன் மூலம் தங்களது திறனுக்கேற்ற வேலைவாய்ப்புகள் தங்களை தேடி வரும். இளைஞர்கள் வேலைவாய்ப்புகளை நாடுவதோடு மட்டுமல்லாமல் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் தொழில் முனைவோர்களாகவும் உருவாகிட வேண்டும் என்று பேசினார்.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மதுரை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இருந்து ஏறத்தாழ 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர். இதில் மாணவ, மாணவியர்களுக்கு உயர்கல்வி வாய்ப்புகள் குறித்து துறை சார்ந்த வல்லுநர்கள் எடுத்துரைத்தனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட கலெக்டர் அனீஷ் சேகர், விருதுநகர் நாடாளுமன்ற உறுப்பினர் பா.மாணிக்கம் தாகூர், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) சரவணன், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன், மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் சூரியகலா கலாநிதி, மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் கார்த்திகா, மாவட்ட கல்வி அலுவலர் (திருமங்கலம்) கோகிலா உட்பட அரசு அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# உணவுப் பஞ்சம்: 6 வயது சிறுவனுடன் அகதியாக தனுஷ்கோடி வந்த இலங்கை தமிழர்கள்



**ராமேஸ்வரம், ஜூலை 01-**

ராமேஸ்வரம் தனுஷ்கோடி கடலோரப் பகுதியில் 4 மணல் திடையில் தஞ்சம் புகுந்திருந்த இலங்கை இருந்து வந்த ஒரு சிறுவர் உள்பட நான்கு அகதிகளை அப்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டு இந்த மீனவர்கள் மீட்டு ராமேஸ்வரத்துக்கு நேற்று காலையில் அழைத்து வந்தனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார வீழ்ச்சி காரணமாக உணவு மற்றும் அத்தயாவசிய பொருட்களின் கடும் விலை ஏற்றம் மற்றும் அத்தியவசிய பொருட்களின் தட்டுபாடு காரணமாக இலங்கை தமிழர்கள் தனுஸ்கோடி கடல் வழியாக தமிழகத்திற்குள் அகதிகளாக வந்த வண்ணம் உள்ளனர்.

இந்நிலையில் நேற்று இரவு வவுனிய மாவட்டத்தை சேர்ந்த டோமினிக் (42), அவரது மனைவி சுதர்சனி(24) அவரது ஆறு வயது மகன் என ஒரே குடும்பத்தை சேர்ந்த மூன்று பேர் மற்றும் கிளிநொச்சியை சேர்ந்த மகேந்திரன் (50) ஒள்ளிட்ட 4 பேர் ஒரு பைப்பர் படகில் புறப்பட்டு நேற்று காலை சுமார் 5 மணி அளவில் தனுஸ்கோடி அடுத்த நான்காம் மணல் தூடையில் வந்திருங்கினர்.

அதன்பின்னர் எங்கு செலவேண்டும் என தெரியாமல் மணல் தீடையில் சுமார் 4 மணி நேரமாக சிக்கி தவித்து இருந்தனர். இந்நிலையில் இலங்கை தமிழர்கள் குறித்து அப்பகுதியில் மீன் பிடித்து கொண்டிருந்த மீனவர்கள் நான்கு இலங்கை அகதிகளை மீட்டு தனுஷ்கோடி கடலோர பகுதிக்கு அழைத்து வந்தனர் அதன் பின்னர் கடலோர பாதுகாப்பு குடும்ப போலீசாருக்கு தகவல் அளித்தனர் அதன் பேரில் அங்கு வந்த போலீசார் அகதிகளை மண்டபம் மெரைன் காவல் நிலையம் அழைத்து சென்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக அத்தியவாசிய பொருட்களான அரிசி, பருப்பு, கோதுமை விலை அதிகரித்தள்ளது. அதே போல் டீசல் மற்றம் பெட்ரோல் விலையும் வெகுவாக உயர்ந்துள்ளது.

விலைவாசி ஒரு பக்கம் உயர்ந்தாலும், அத்தியாவசிய பொருட்களின் தட்டுபாடு அதிகரித்துள்ளதால்; இலங்கையில் குழந்தைகளை வைத்து வாழ முடியாது சூழல் ஏற்பட்டுள்ளதால் பெரியவர்களுக்கு நபர் ஒருவருக்கு ஒரு லட்சம் என இலங்கை பணம் 3 லட்சம் ரூபாய் கொடுத்து பைப்பர் படகில் தமிழகத்திற்;கு அகதிகளாக வந்தாக இலங்கை தமிழர்கள் பாதுகாப்;பு வட்டார அதிகாரிகள் நடத்தி விசாரணையில் தெரிவித்தார்.

பாதுகாப்பு வட்டார அதிகாரிகளின் விசாரணைக்கு பின் நால்வரையும்; மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்படுவார்கள் என மரைன் போலீசார் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த மார்ச் மாதம் 22ந்தேதி முதல் இன்று வரை இலங்கையில் இருந்து 96 இலங்கை தமிழர்கள் அகதிகளாக தமிழகம் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர ஆன்லைன் மூலம் விண்ணப்பிகலாம்

## விருதுநகர் கலெக்டர் தகவல்

**விருதுநகர் ஜூலை 01-**

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு தொழிற்பிரிவுகளில் சேர பயிற்சியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. Online மூலம் விண்ணப்பம் செய்யலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெ.மேகநாதரெட்டி தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்ட அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு 2022-ம் ஆண்டிற்கான ஓராண்டு /ஈராண்டு தொழிற்பிரிவுகளில் சேர பயிற்சியாளர்களிடமிருந்து Online மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இப்பயிற்சிக்கு இருபாலரும் (ஆண் / பெண்) 20.07.2022 முடிய ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்யலாம். விண்ணப்பிக்க வேண்டிய இணையதள முகவரி www.skilltraining.tn.gov.in பயிற்சிக்கு விண்ணப்பிக்க கல்வித் தகுதி 8-ம் வகுப்பு தேர்ச்சி / 10ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் அதற்கு மேல் பயின்ற அனைவரும் தகுதியானவர்கள். வயது வரம்பு ஆண்களுக்கு குறைந்தபட்ச வயது 14 முதல் அதிகபட்ச வயது 40 வரை மற்றும் மாற்றுத்திறனாளி / முன்னாள் இராணுவத்தினருக்கு விதிகளின்படி 5 ஆண்டு வயது வரம்பில் தளர்வு உண்டு. பெண்களுக்கு குறைந்தபட்சம் 14 முதல் அதிகபட்ச வயது உச்ச வரம்பு இல்லை. விண்ணப்பக்கட்டணமாக ரூ.50 –யை Debit Card / Credit Card / GPay/ Internet Banking ஆகியவற்றின் மூலமாக மட்; டுமே செலுத்த வேண்டும்.

விருதுநகர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் உள்ள தொழிற்பிரிவுகளின் விபரம் பொருத்துநர், கடைசலர், இயந்திர வேலையாள், கம்மியர், மோட்டார் வண்டி கம்மியர், மின்பதனம் மற்றும் தட்பவெப்ப நிலையை கட்டுப்படுத்துதல் , கம்பியாள் பற்ற வைப்பவர் உட்புற வடிவமைப்பு மற்றும் அலங்காரம் கம்மியர் இயந்திரக்கலப்பை மேலும் தீயணைப்பு தொழில்நுட்பம் மற்றும் தொழிற்சாலை பாதுகாப்பு மேலாண்மை இப்பிரிவில் சேருவதற்கு மட்டும் 10-ம் வகுப்பு கல்வித்தகுதியும், உடற்கூறு தகுதியும் உடையவர்கள் விண்ணப்பிக்கலாம். (உயரம் 165cm, எடை 52kg மார்பு விரிவதற்கு முன் 81cm பின் 85cm ).; அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரும் மாணவ / மாணவிகளுக்கு தமிழக அரசால் பின்வருமாறு விலையில்லா உபகரணங்கள் வழங்கப்படுகிறது. மடிக்கணினி / மிதிவண்டி ஃ கட்டணமில்லா பேருந்து பயணச் சலுகை / மாதாந்திர கல்வி உதவித் தொகை ரூ.750/ -சீருடை 2 செட் /மூடு காலணி 1 செட் /பாடப்புத்தகங்கள் / வரைபட கருவிகள் மற்றும் பயிற்சியாளர் அடையாள அட்டை.

அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், விருதுநகரில் பயிற்சியில் சேர Online மூலம் விலையில்லாமல் விண்ணப்பிக்கலால்.

மேலும் விபரங்களுக்கு தொலைபேசி எண்கள் : விருதுநகர்: 04562-294382 ஃ 252655, 9499055821, 9364433137.

Printed Published and Owned
by S.Manimaran,
Printed at Manimaran
Printers at 9, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
RNI Regn. No.61494 / 94

# வெள்ளைக்கல் குப்பை சேகரிப்பு மையத்தில் ஆணையாளர் சிம்ரன்ஜீத் சிங் நேரில் ஆய்வு



**மதுரை, ஜூலை 01-**

மதுரை மாநகராட்சியில் உள்ள 100 வார்டு பகுதிகளில் சேரும் குப்பைகளை திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வெள்ளைக்கல் குப்பை சேகரிக்கும் மையத்திற்கு தினந்தோறும் சுமார் 700 டன் குப்பைகள் கொண்டு சென்று தரம் பிரிக்கப்பட்டு உரமாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் மாநகராட்சியின் நுண்ணுயிர் செயலாக்க உரக்கூடங்களில் மக்கும் குப்பைகள் மட்டும் தரம் பிரித்து வாங்கப்பட்டு அந்தந்த உரக்கூடங்களில் உரமாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி அவனியாபுரம் வெள்ளைக்கல்லில் செயல்பட்டு வரும் குப்பை சேகரிப்பு மையத்தில் குப்பைகளில் இருந்து பிளாஸ்டிக் மற்றும் இதர கழிவுகளை பிரிக்கும் இடங்கள், பணியாளர்கள், திடக்கழிவு மேலாண்மைக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் மற்றும் உரம் தயாரிக்கும் இடத்தையும் ஆணையாளர் சிம்ரன்ஜீத் சிங் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு செயல்பட்டு வரும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டு கழிவுநீர் சுத்திகரிப்பு செயல்பாடுகள், தினந்தோறும் வரக்கூடிய கழிவுநீர் குறித்தும், சுத்திகரிக்கப் படும் கழிவுநீரின் புல்வண்ணைகளுக்கு பயன்படுத்தப்படும் முறைகள் உள்ளிட்ட பணிகள் குறித்தும் அவர் ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் அனைத்து கழிவுநீர் நீரேற்று நிலையங்களிலும் உள்ள மின் மோட்டார்களின் இயக்க நிலை குறித்தும், கழிவுநீர் சுத்திகரிக்கப்படும் கொள்ளளவு குறித்தும், வைகை ஆற்றில் கழிவுநீர் கலக்கும் இடங்களை ஆய்வு செய்து சரி செய்து அதன் முழு விவரத்தினை தெரிவிக்குமாறு சம்பந்தப்பட்ட அலுவலருக்கு உத்தரவிட்டுள்ளார். இந்த ஆய்வின்போது துணை ஆணையாளர் முஜிபூர் ரகுமான், மக்கள் தொடர்பு அலுவலர் மகேஸ்வரன், செயற்பொறியாளர் ரவிசந்திரன், உதவி செயற்பொறியாளர் ரவிச்சந்திரன் உட்பட மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

மாண்புமிகு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்.
திருமங்கலம்.
ந.க.எண்.1736/2022/ஆ2

நாகரத்தினம், க/பெ.திருப்பதி
வடக்குத்தெரு
சிவரக்கோட்டை கிராமம்
கள்ளிக்குடி தாலுகா
மதுரை மாவட்டம்.
------ மனுதாரர்
--- எதிர் ---
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்
திருமங்கலம்.

அறிவிப்பு

மேற்படி மனுதாராகிய நான், எனது கணவர் திருப்பதி, த/பெ. ராமசாமி என்பவர் கடந்த 01.07.2004-ம் தேதி கள்ளிக்குடி தாலுகா,சிவரக்கோட்டை கிராமத்தில் உள்ள வீட்டில் வைத்து இறந்ததை பதிவு செய்து உத்தரவிட வேண்டி திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீதான விசாரணைக்கான வாய்தா வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திருமங்கலம் முன்பாக நடைபெறுகிறது.இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 10தினங்களுக்குள் காலை 11.00மணிக்கு மேற்படி கனம் உட்கோட்ட நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.

மனுதாரர்
நாகரத்தினம்
சிவரக்கோட்டை.

---

## காணவில்லை

நான் கடந்த 10.05.2022 அன்று கமுதி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 1 புத்தகம் 90/2011 ஆவணத்தின் மூலம் எனக்கு கிரையப் பாத்தியமான நீராவி கிராமத்திலுள்ள சர்வே 192/11H நம்பருக்குட்பட்ட மேற்படி 90/2011 நிர் அசல் பத்திரத்தை ஜெராக்ஸ் எடுக்கும் காரியத்திற்காக கமுதி கொண்டு வந்தபோது கமுதி பேருந்து நிலையம் அருகில் என்னுடைய கவனக்குறைவால் கைதவறுதலாக தொலைந்துவிட்டது. மேற்படி பத்திரத்தை பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை. மேற்படி அசல் பத்திரத்தை கண்டெடுத்தவர்கள் கீழ்கண்ட முகவரிக்கு தகவல் தெரிவிக்கவும்.

கண்ணகி, W/o. முனியசாமி
58/1, N.கரிசல்குளம், கமுதி வட்டம், இராமநாதபுரம் மாவட்டம் -623 603
(செல் எண்.6379400306)

---

## பொது அறிவிப்பு

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி தாலுகா, ஜக்கம்பட்டி, சுப்பு காலனி, கதவு எண்: 13-18-42 (1)-ல் குடியிருக்கும் குமார் மகன் K.சிவமுருகன்குமார் அவர்களின் தகவலின் பேரில், மேற்படி எமது கட்சிக்காரருக்கு பாத்தியமான சொத்தின் மூலப்பத்திரம் அசல் ஆவணம் எண் : 1162 / 1994, நாள் : 13.06.1994 என்ற ஆவணத்தை எமது கட்சிக்காரர் ஜெராக்ஸ் எடுப்பதற்காக ஆண்டிபட்டி பஸ் நிறுத்தம் அருகே கொண்டு சென்றபோது காணாமல்போய்விட்டது. பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை. மேற்படி அசல் ஆவணத்தை யாரேனும் கண்டுபிடித்தால் எம்மிடமாவது அல்லது எமது கட்சிக்காரரிடமாவது ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

A. ராமகிருஷ்ணன்
S. பூபதி
அட்வகேட்ஸ், தேனி.

---

மாண்புமிகு முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்.
திருமங்கலம்.
I.A.No:171/2019 in
O.S.No:507/2013

நாகசிவம், த/பெ.மாதவன்
413,வ.உ.சி.தெரு
இந்தியன் வங்கி காலனி
நாராயணபுரம், மதுரை
மதுரை மாவட்டம்.
------- மனுதார்/வாதி
--------எதிரிடை------
1.கந்தசாமி, த/பெ.சுப்பிரமணியன்
பிளாட்எண்.3675
2வது மெயின் ரோடு
வில்லாபுரம், மதுரை-11
மதுரை மாவட்டம்.
2.சின்னக்கருப்பன்
த/பெ.சுப்பிரமணியன்
பிளாட்எண்.3675
2வது மெயின் ரோடு
வில்லாபுரம், மதுரை-11
மதுரை மாவட்டம்.
3.சத்தியமூர்த்தி(எ)பாலு
த/பெ.சுப்பிரமணியன்
மேலஉப்பிலிக்குண்டு
கள்ளிக்குடி வட்டம்
மதுரை மாவட்டம்.
4.இருளாயி அம்மாள்
க/பெ.மருதப்பன்
மேலஉப்பிலிக்குண்டு
கள்ளிக்குடி வட்டம்
மதுரை மாவட்டம்.
5.வெள்ளைதாய், க/பெ.முருகன்
மேலஉப்பிலிக்குண்டு
கள்ளிக்குடி வட்டம்
மதுரை மாவட்டம்.
6.வேலு அம்மாள்,
க/பெ.மகாலிங்கம்
மேலஉப்பிலிக்குண்டு
கள்ளிக்குடி வட்டம்
மதுரை மாவட்டம்.
7.மாதவன், த/பெ.சின்னக்கருப்பன்
மேலஉப்பிலிக்குண்டு
கள்ளிக்குடி வட்டம்
மதுரை மாவட்டம்.
-------- எதிர்மனுதார்/பிரதிவாதிகள்

அறிவிப்பு

மேற்படி நிர் வழக்கில் ஏற்பட்ட தள்ளுபடி உத்தரவை மாற்ற தாக்கல் செய்த மனுவில் ஏற்பட்ட ஒருதலைப்பட்ச தள்ளுபடி உத்தரவை ரத்து செய்யக் கோரி தாக்கல் செய்த மனு I.A.No.171/2019-மனுவில் இந்த நிர் எதிர்மனுதார்/பிரதிவாதிகள் ஆஜராவதற்காக வரும் 04.08.2022-ம் தேதி அன்று வாய்தா ஏற்பட்டுள்ளது. மேற்படி வாய்தா அன்று காலை 10.00மணிக்கு மேற்படி நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராக இதன் மூலம் கேட்டுக்கொள்ளப் படுகிறது.தாங்கள் ஆஜராகா விட்டால், தங்களுக்கு எதிராக ஒருதலை பட்சமாக உத்தரவிடப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

A.தமிழ்ச்செல்வம் M.A.,B.L.,
அட்வகேட்/நோட்டரி பப்ளிக்
திருமங்கலம்.

---

ந.க.எண்.9468/2021
வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், சிவகங்கை

அறிவிப்பு

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், 222 சோனைப்பட்டி, அழகிச்சிப்பட்டி, கீழப்பூங்குடி என்ற முகவரியில் வசிக்கும் அம்மாசி என்பவரின் தந்தை நடராஜன் என்பவர் கடந்த 02.04.2002ந் தேதியன்று ஷை முகவரியில் இறந்துவிட்டார். மேற்படி இறப்பு பதிவு செய்யப்படவில்லை. இந்த இறப்பு பதிவினை பதிவு செய்யக்கேட்டு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபணையை எழுத்துபூர்வமாக தெரிவிக்கலாம். அவ்வாறு ஆட்சேபணை ஏதும் வரப்பெறவில்லை எனில் விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதார் கோரியவாறுள்ள இறப்பினை பதிவு செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

அம்மாசி
மனுதார்

---

உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
ராமநாதபுரம்
மனு எண் 2022 / 9005 / 27 / 389216 / 0630

மாரிமுத்து, த/பெ. கருங்கன்,
2/20எ, கொத்தங்குளம்,
எக்ககுடி அஞ்சல்,
கீழக்கரை வட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம்.
..... மனுதார்
எதிர்
வட்டாட்சியர்,
பிறப்பு இறப்பு பதிவாளர்,
தாலுகா அலுவலகம், கீழக்கரை.
.... எதிர்மனுதார்

அறிவிப்பு

எனது தந்தை கருங்கன் அவர்கள் இராமநாதபுரம் வட்டம், எக்ககுடி குரூப், கொத்தங்குளம் கிராமத்தில் கடந்த 28.11.2018 -ம் தேதி வீட்டில் இறந்து போனார். எனது தந்தை இறந்தபோது எங்களது அறியாமையின் காரணமாக அவரது இறப்பை எக்ககுடி குரூப் பிறப்பு இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய விடுபட்டுபோனது. எனவே இறந்துபோன என் தந்தை கருங்கன் இறப்பை எதிர்மனுதார் அலுவலக பிறப்பு இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய உத்தரவிடக் கோரி இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மாரிமுத்து,
மனுதார்.

---

# ராமேஸ்வரத்தில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல்



**ராமேஸ்வரம், ஜூலை 01-**

ராமேஸ்வரம் நகராட்சி பகுதியில் பாலத்தின் மட்டும் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை வர்த்தக நிறுவனங்களில் பயன்படுத்தியதை நகராட்சி நிர்வாகம் நேற்று கைப்பற்றி அவதாரம் விதித்தனர்.

ராமநாதபுரம் மாவட்டம் ஆட்சியர் உத்திரவின்பேரில் ராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சி ஆணையர் மூர்த்தி தலைமையில் பாலீத்தின் மற்றும் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பயன் படுத்தும் வர்த்தக நிறுவனங்களில் நேற்று சோதனை நடைபெற்றது. அதன் ஒரு பகுதியாக அக்னிதீர்த்தம், திருக்கோவில் சுற்றி நான்குரத வீதிகளில் உள்ள உணவகங்கள் , டீ கடைகள், பேக்கிரி மற்றும் பலசரக்கு கடைகளில் சோதன நடைபெற்றது.அப்போது இந்த நிறுவனங்களில் தடை செய்யப்பட்ட பாலீத்தின் பைகள், டீ கப்புகள் உள்பட 120 கிலோ எடையளவில் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் இந்த நிறுவனங்களுக்கு அபராதம் ரூ.3 ஆயிரம் வரை வசூலிக்கப்பட்டனர். இந்த சோதனையில் நகராட்சி சுகாதார ஆய்வாளர் தியாகராஜன் மற்றும் நகராட்சி பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

---

## மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

**தேனி இருப்பு வைகை அணை**
**தேனி மாவட்டம்**

சுதந்திரத்திருநாள் அமுதப் பெருவிழா

ந.க.எண்.1883/இ/2003 நாள்:17.06.2022

### ஏலம் அறிவிப்பு

தேனி (இருப்பு) வைகை அணை மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலக கட்டுப்பாட்டில் உள்ள பழுதடைந்த ஊர்திகள் கழித்தொக்கம் செய்ய வேண்டி ஏலம் விடப்பட உள்ளது. ஏலத்தில் கலந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் 19.07.2022 அன்று காலை 11.00 மணியளவில் வைகை அணை, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற உள்ள பொது ஏலத்தில் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது. மேலும் விபரங்களுக்கு கீழ்க்காணும் தொலைபேசியிலோ அல்லது வைகை அணை மீன்வள உதவி இயக்குநர் அலுவலகத்தில் நேரிலோ தொடர்பு கொள்ளலாம் என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது.

அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச ஏலத் தொகை

| வரிசை எண் | ஊர்தி எண் | குறைந்த பட்ச குத்தகை தொகை |
|---|---|---|
| 1. | TCU-245 | ரூ.16,000 |
| 2. | TDU-3081 | ரூ.15,000 |

தொடர்பு கொள்ள வேண்டிய எண்.
1. 04546-291891
2. 9751958400

உதவி இயக்குநர்,
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை
தேனி இருப்பு வைகை அணை

வெ.ஆ.எண்.265/செ.ம.தொ.அ/தேனி/நாள்.30.06.22

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம். சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

---

உயர்திரு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், மேலூர், (இருப்பு வெள்ளரிபட்டி, மேலூர்)
அ.தி.மு. எண்: 811/2021/ஆ1

இருளன், S/o.பெரியசாமி,
125, தெற்கு தெரு,
இராமன் குளம்,
குசவன் குண்டு கிராமம்,
மதுரை தெற்கு வட்டம்,
மதுரை மாவட்டம்.
.....மனுதார்
//எதிரிடை //
உயர்திரு.சார்பதிவாளர் அவர்கள்
மதுரை வடக்கு
....... எதிர்மனுதாரர்

மனுதார் இருளன் என்பவரின் தந்தை பெரியசாமி 05.07.1981ம் தேதியில் மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம், குசவன் குண்டு கிராமம், இராமன் குளம், தெற்கு தெரு வீட்டில் இறந்ததை அவரது இறப்பை குசவன்குண்டு கிராம பதிவேட்டில் பதிவு செய்யக்கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்து மனு சான்றிதழ் வழங்க கோரி உள்ளோம். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இன்றிலிருந்து 15 தினங்களுக்குள் மேற்படி மேலூர் வருவாய் கோட்டாட்சியர் (இருப்பு வெள்ளரிப்பட்டி மேலூர்) அலுவலகத்தில் தெரிவிக்கவும் என இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

P. இருளன்
மனுதாரர்

---

மாண்புமிகு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்.
திருமங்கலம்.
ந.க.எண்.2414/2022/ஆ2

அமீரம்மாள், க/பெ.மாயாண்டி
எம்.ஜி.ஆர் காலனி
தனக்கன்குளம், மதுரை-6.
------ மனுதாரர்
--- எதிர் ---
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
திருமங்கலம்.

அறிவிப்பு

மேற்படி மனுதாராகிய நான், எனது மகள் ஜீலத் பத்திலா உமா, த/பெ. மாயாண்டி என்பவர் கடந்த 29.01.2004-ம் தேதியும்,மற்றொரு மகள் ஐஸ்சாபீவி, த/பெ.மாயாண்டி என்பவர் கடந்த 05.03.2005-ம் தேதியும் மதுரை-16,தனக்கன்குளம் எம்.ஜி.ஆர் காலனியில் உள்ள வீட்டில் வைத்து இறந்ததை பதிவு செய்து உத்தரவிட வேண்டி திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீதான விசாரணைக்கான வாய்தா வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திருமங்கலம் முன்பாக நடைபெறுகிறது.இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 10தினங்களுக்குள் காலை 11.00மணிக்கு மேற்படி கனம் உட்கோட்ட நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.

மனுதாரர்
அமீரம்மாள்
தனக்கன்குளம்.

---

உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்/ வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் பரமக்குடி.
ந.க.பி 6/131/2021

ராமு, த/பெ சின்னாள் 1/56
நெல்மடூர் கிராமம் பரமக்குடி
வட்டம் இராமநாதபுரம் மாவட்டம்
(எதிர்)
வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்,
வருவாய் கோட்டாட்சியர்
அலுவலகம், பரமக்குடி.
---------- எதிர்மனுதார்

அறிவிப்பு

ஷை மனுதாராகிய நான் எனது தந்தை சின்னாள் கடந்த 15.11.2009-ம் தேதியன்று பரமக்குடி வட்டம்,நெல்மடூர் கிராமத்தில் இறந்ததை பதிவு செய்ய உத்தரவிட வேண்டி மனுதாக்கல் செய்துள்ளேன்.எனது தந்தை இறந்ததை அறியாமையின் காரணமாக பதிவு செய்ய தவறி விட்டேன்.மேற்படி மனு மீதான விசாரணை ஷை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் அலுவலகம் பரமக்குடி முன்பாக விசாரணைக்கான வாய்தா வரும் 06.07.2022 -ம் தேதியன்று நடைபெறுகிறது. இதில் யாருக்கேணும் ஆட்சேபணை இருப்பின் அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 தினங்களுக்குள் காலை 10 மணிக்கு ஷை நடுவர் முன்பு ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்துக்கொள்ளலாம்.

ராமு
மனுதார்

---

ந.க.எண்.9486/2021
வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், சிவகங்கை

அறிவிப்பு

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், 222 சோனைப்பட்டி, அழகிச்சிப்பட்டி, கீழப்பூங்குடி என்ற முகவரியில் வசிக்கும் அம்மாசி என்பவரின் தாயார் முனியாயி க/பெ. நடராஜன் என்பவர் கடந்த 16.05.2005ந் தேதியன்று ஷை முகவரியில் இறந்துவிட்டார். மேற்படி இறப்பு பதிவு செய்யப்படவில்லை. இந்த இறப்பு பதிவினை பதிவு செய்யக்கேட்டு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபணையை எழுத்துபூர்வமாக தெரிவிக்கலாம். அவ்வாறு ஆட்சேபணை ஏதும் வரப்பெறவில்லை எனில் விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதார் கோரியவாறுள்ள இறப்பினை பதிவு செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

அம்மாசி
மனுதார்

---

சிவகங்கை சப் கோர்ட்டு
O.S.No.292/2019

சந்தியாகு
....... வாதி
எதிர்
ஆரோக்கியம்
த/பெ.சவரிமுத்து
புலியடிதம்மம் கிராமம் &
போஸ்ட்
.............. 4ம் பிரதிவாதி

அறிவிப்பு

வாதி தங்கள் மீது பாகப்பாவினை பரிகாரம் கோரிதாவா வழக்கை தாக்கல் செய்ததில் தாங்கள் ஆஜர் ஆவதற்க்காக 22.07.2022 அன்று வாய்தா ஏற்பட்டுள்ளது. அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராக வேண்டப்படுகிறது. தவறும் பட்சத்தில் தங்கள் மீது ஒருதலைபட்சமாக தீர்ப்பு ஏற்படும் என்பதை இந்த அறிவிப்பு மூலமாக அறியத்தருகிறோம்.

B.ரமேஷ் பி.ஏ.பி.எல்
வழக்கறிஞர்/சிவகங்கை.

---

சிவகங்கை சப் கோர்ட்டு
O.S.No.292/2018

R.கண்ணப்ப செட்டியார்
....... வாதி
எதிர்
1.வள்ளிக்கண்ணு
க/பெ.சொக்கலிங்கம்
கீழசெவல்பட்டி கிராமம் &
போஸ்ட்
திருப்பத்தூர் தாலுகா
சிவகங்கை மாவட்டம்.
2.ஆண்டாள், க/பெ.சிதம்பரம்
திருவல்லிக்கேணி, சென்னை.
.............. 2,3 பிரதிவாதிகள்

அறிவிப்பு

வாதி தங்கள் மீது பாகப்பாவினை பரிகாரம் கோரிதாவா வழக்கை தாக்கல் செய்ததில் தாங்கள் ஆஜர் ஆவதற்க்காக 22.07.2022 அன்று வாய்தா ஏற்பட்டுள்ளது. அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராக வேண்டப்படுகிறது. தவறும் பட்சத்தில் தங்கள் மீது ஒருதலைபட்சமாக தீர்ப்பு ஏற்படும் என்பதை இந்த அறிவிப்பு மூலமாக அறியத்தருகிறோம்.

B.ரமேஷ் பி.ஏ.பி.எல்
வழக்கறிஞர்/சிவகங்கை.

---

வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்,
திண்டுக்கல்
ந.க.எண்.7881/2021/ஆ6
பி.ப.வ.எண்.05/2020

முருகன், த/பெ. நல்லான்,
க.எண்.13-1-62,
சாமிக்கண்ணுத் தெரு,
அழகர்நாயக்கன்பட்டி,
சித்தையன் கோட்டை,
ஆத்தூர் வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்.
...... மனுதாரர்
//எதிர்//
வருவாய் கோட்டாட்சியர் மற்றும்
உட்கோட்ட நடுவர் திண்டுக்கல்

அறிவிப்பு

மேற்படி வழக்கில் மனுதாரர் மகன் M.முத்தமிழ் செல்வன் என்பவர் கடந்த 03.07.2006ம் தேதி ஷை முகவரியில் பிறந்ததை பதிவு செய்ய வேண்டி வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பிறப்பு தொடர்பாக யாருக்கேனும் ஆட்சேபனை ஏதும் இருப்பின் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் 15 தினங்களுக்குள் நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளலாம்.தவறும்பட்சத்தில் மேற்படி மனு ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அறியவும்.

வருவாய் கோட்டாட்சியர்
திண்டுக்கல்

---

வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்,
திண்டுக்கல்
ந.க.எண்.10023/2019/ஆ6
இ.ப.வ.எண்.529/2019

மெர்சிகுழந்தைதெரஸ்,
த/பெ. லேட் ஆரோக்கியசாமி,
உலகம்பட்டி, தாடிக்கொம்பு,
திண்டுக்கல் மேற்கு வட்டம்.
...... மனுதாரர்
//எதிர்//
வருவாய் கோட்டாட்சியர் மற்றும்
உட்கோட்ட நடுவர் திண்டுக்கல்

அறிவிப்பு

மேற்படி வழக்கில் மனுதாரர் தாத்தா சவரிமுத்து என்பவர் கடந்த 18.05.2001ம் தேதி ஜம்புத்துரைக் கோட்டை, சக்கைய நாயக்கனூர், நிலக்கோட்டை வட்டம் என்ற முகவரியில் இறந்ததை பதிவு செய்ய வேண்டி வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பு தொடர்பாக யாருக்கேனும் ஆட்சேபனை ஏதும் இருப்பின் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் 15 தினங்களுக்குள் நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளலாம்.தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அறியவும்.

வருவாய் கோட்டாட்சியர்
திண்டுக்கல்

---

கூடுதல் மாவட்ட நீதிமன்றம், பழனி
I.A.No. 136 / 2021
O.S.No. 151 / 2021

ஈஸ்வரி
.......மனுதாரர்/வாதி
எதிர்
1.திண்டுக்கல் மாவட்டம், பழனி டவுன், சண்முகபுரம், 19/15, திருவள்ளுவர் குறுக்கு சாலையில் குடியிருக்கும் சந்திரசேகர் மனைவி S.சரஸ்வதி.
2.திண்டுக்கல் மாவட்டம், பழனி டவுன், அடிவாரம், பாட்டாளி தெரு, க.எண் 170, இசைத்தமிழ் இல்லத்தில் குடியிருக்கும் அனந்தகுமார் மனைவி ஜெயபாரதி.
3.திண்டுக்கல் மாவட்டம், பழனி டவுன், லட்சுமிபுரம், க.எண். 7. ரவிமந்திரில் குடியிருக்கும் சங்கரநாயர் மகன் S.M.தாஸ்.
...13,15,16 எதிர் மனுதாரர்கள் / 13,15,16பிரதிவாதிகள்

மேற்படி நம்பர் வழக்கில் மனுதாரர் / வாதி இந்த எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் மீதும், மற்றும் மற்ற எதிர்மனுதாரர்கள் மீதும், பிராது சொத்தை பொறுத்து பாகபிரிவினை, விளம்புகை, மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து அதில் தாங்கள் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராக வாய்தா வருகின்ற 05.07.2022ம் தேதி ஏற்பட்டுள்ளது. இந்த வழக்கை பொறுத்து தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணை இருப்பின் வாய்தா அன்று காலை 10.30 மணிக்கு நீதிமன்றத்தில் அழைக்கும் பொழுது ஆஜராகி தங்களுடைய ஆட்சேபணையை தெரிவித்து கொள்ளவேண்டியது. தவறினால் இந்த வழக்கை பொறுத்து ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

S.அன்வர்தீன் B.Sc.,B.L.,
அட்வகேட்> 29.ராஜேந்திரா ரோடு, பழனி.

# கள்ளிக்குடி ஒன்றியம் 1-வது வார்டு தி.மு.க வேட்பாளர் வசந்தகுமாரி போட்டியின்றி தேர்வு

## மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் வாழ்த்து



**திருமங்கலம், ஜூலை 01-**

மதுரை மாவட்டம் கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம் 1வது வார்டு ச ஒன்றிய கவுன்சிலர் பதவிக்கான இடை தேர்தலில் அதிமுக உள்ளிட்ட அனைத்து கட்சி வேட்பாளர்களும் மற்றும் சுயேட்சை வேட்பாளர்களும் தங்களது வேட்பு மனுக்களை வாபஸ் பெற்றுக் கொண்டதால் திமுக வேட்பாளர் ஜெ.வசந்தகுமாரி போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார். இதையடுத்து வெற்றி பெற்ற திமுக வேட்பாளருக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்த மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் திமுகவின் நல்லாட்சி தொடர்வதால் தோல்வி பயத்தில் எதிர்த்து போட்டியிட்ட அனைவரும் மனுக்களை வாபஸ் பெற்றனர் என்று தெரிவித்தார்.

மதுரை மாவட்டம் கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட 1வது வார்டு செங்கப்படை பகுதி ஒன்றிய கவுன்சிலர் பதவி வகித்து வந்த அதிமுக கவுன்சிலர் அன்னலட்சுமி அண்மையில் உயிரிழந்ததையடுத்து காலியாக இருந்த செங்கப்படை ஒன்றிய கவுன்சிலர் பதவிக்கு வரும் 9ம் தேதி இடைத்தேர்தல் என அறிவிக்கப்பட்டிருந்தது. இதனை தொடர்ந்து கடந்த 20ஆம் தேதி வேட்பு மனு தாக்கல் தொடங்கி 27-ம் தேதி நிறைவு பெற்றது. இதில் திமுக,அதிமுக அமமுக, நாம் தமிழர் உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மற்றும் சுயேட்சை வேட்பாளர்கள் உட்பட 11 பேர் வேட்பு மனு தாக்கல் செய்திருந்தனர். வேட்புமனு பரிசீலணையில் 11 மனுக்களுமே ஏற்றுக் கொள்ளப்பட்டதாக உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் இளங்கோ தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் அதிமுக சார்பில் போட்டியிட்ட ராகிணிதேவி கட்சியின் அங்கீகார கடிதம் இல்லாமல் மனுத்தாக்கல் செய்திருந்தார். இதனால் அவர் சுயேட்சை வேட்பாளராக அறிவிக்கப்படலாம் என்ற நிலை இருந்தது. இதேபோல் தமிழக முழுவதும் ஊரக உள்ளாட்சி தேர்தலில் அதிமுக சார்பில் போட்டியிட்டவர்கள் சுயேட்சை வேட்பாளர்களாக அறிவிக்கப்பட வாய்ப்பு இருந்தது. இந்நிலையில் அதிமுக பிரச்சனை காரணமாக வேட்பாளர்களுக்கு அங்கீகார கடிதம் கொடுக்கப்படவில்லை. இதனால் ஊரக உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடவில்லை என நேற்று காலை அதிமுக சார்பில் அறிவிக்கப்பட்டது. இதனை அடுத்து செங்கப்படை ஒன்றிய கவுன்சிலர் பதவிக்கு போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் ராகிணிதேவி தனது வேட்பு மனுவை வாபஸ் பெற்றார். இதேபோல் அமமுக, நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள், சுயேட்சை வேட்பாளர்கள் உட்பட அனைவரும் தங்களது வேட்பு மனுவை வாபஸ் பெற்றதால் திமுக வேட்பாளர் ஜெ.வசந்தகுமாரி போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டதாக தேர்தல் நடத்தும் அதிகாரி சரவணன் தெரிவித்தார்.

தி.மு.க வேட்பாளர் போட்டியின்றி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து தேர்தல் நடத்தும் அலுவலகத்திற்கு மதுரை தெற்கு மாவட்ட திமுக செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் மேளதாளம் முழங்க பட்டாசுகளை வெடித்தபடி ஏராளமான தி.மு.க.வினர் ஊர்வலமாக வந்தனர். பின்னர் திமுக வேட்பாளர் ஜெ.வசந்தகுமாரியிடம் தேர்தல் அதிகாரி சரவணன், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் இளங்கோ ஆகியோர் வெற்றி பெற்றதற்கான சான்றிதழை நேரில் வழங்கினர். இதனை தொடர்ந்து மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு. மணிமாறன், தி.மு.க சார்பில் வெற்றி பெற்ற செங்கப்படை 1வது வார்டு ஒன்றிய கவுன்சிலர் ஜெ.வசந்தகுமாரிக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். இதையடுத்து வெற்றி பெற்ற வசந்தகுமாரிக்கு கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் சால்வை அணிவித்தும் மாலை அணிவித்தும் வாழ்த்து தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த மதுரை தெற்கு மாவட்ட திமுக செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உழைப்பும், மக்களுக்கு ஆற்றி வருகின்ற பணிகளும் அவரது தலைமையில் நல்லாட்சி தொடர்வதாலும் எதிர்க்கட்சிகள் போட்டியிட்டால் தங்களுக்கு தோல்வி நிச்சயம் என்பதை உணர்ந்து தங்களது மனுக்களை வாபஸ் பெற்றுள்ளனர். 1வது வார்டு செங்கப்படை பகுதிக்கு உட்பட்ட கிராமப் பகுதி மக்களின் அடிப்படைத் தேவைகள் அனைத்தையும் விரைவில் நிறைவேற்றுவோம் என்று தெரிவித்தார்.

அப்போது தெற்கு மாவட்ட அவைத் தலைவர் நாகராஜன், கள்ளிக்குடி ஒன்றிய செயலாளர் ராமமூர்த்தி, மாவட்ட அணி அமைப்பாளர்கள் மதன்குமார், பாசபிரபு, முன்னாள் எம்எல்ஏ லதா அதியமான், பொதுக்குழு உறுப்பினர் சிவமுருகன், திருமங்கலம் நகர செயலாளர் ஸ்ரீதர்,திருமங்கலம் நகர் மன்ற தலைவர் ரம்யா முத்துக்குமார்,நகர்மன்ற துணைத்தலைவர் ஆதவன் அதியமான், மாவட்ட கவுன்சிலர் கிருத்திகா தங்கப்பாண்டி, புவனேஸ்வரி ராஜசேகர் கட்சி நிர்வாகிகள் ஆலம்பட்டி சண்முகம், ஆதிமூலம், முன்னாள் யூனியன் சேர்மன் கொடிசந்திரசேகர் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# பட்டிவீரன்பட்டி பேரூராட்சியில் வளர்ச்சி கூட்டம்



**வத்தலகுண்டு, ஜூலை 01-**

திண்டுக்கல் மாவட்டம் பட்டிவீரன்பட்டி பேரூராட்சி மன்றக் கூட்டம் நடைபெற்றது. பட்டிவீரன்பட்டி பேரூராட்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு பேரூராட்சித் தலைவர் சியாமளா தலைமை தாங்கினார். துணைத் தலைவர் கல்பனாதேவி முன்னிலை வகித்தார். செயல்அலுவலர் உமாசுந்தரி வரவேற்றார். இக்கூட்டத்தில் அண்ணாநகர் பேருந்து நிறுத்தம் அருகாமையில் பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவிகளின் நலன் கருதி கழிப்பறை வசதி செய்தல், ஆதிதிராவிடர் மாணவியர் விடுதி அருகாமையில் உள்ள மினி பவர் பம்பை சரிசெய்து புதுப்பித்தல், பட்டிவீரன்பட்டி பேருந்து நிறுத்தத்தில் அருகில் உள்ள பேரூராட்சிக்கு சொந்தமான இடங்களில் அகிலாவில் உள்ளூர் மற்றும் வெளியூர் பயணிகள் வந்து செல்லும் ரேடியோ மைதானம் மற்றும் பஸ்நிறுத்தம் அருகாமையில் உள்ள வரலாறு காணாத அளவிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். மேலும் பல்பயணிகளின் நலன் கருதி சிறுநீர் கழிப்பிட வசதி செய்தல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில் கவுன்சிலர்கள் தங்களது வார்டுகளில் வளர்ச்சிப்பணிகளை செய்து கொடுக்குமாறு மனு அளித்தனர். இதில் பேரூராட்சி அனைத்து கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர்.

# ஸ்ரீவில்லிபுத்தூர் பெரியாழ்வார் சுவாதி உற்சவம் கொடியேற்றத்துடன் துவக்கம்

**விருதுநகர், ஜூலை 01-**

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலில் பெரியாழ்வார் திரு ஆனி உற்சவம் கொடியேற்றத்துடன் துவங்கியது. சம்பவத்தன்று காலை கொடிப்பட்டம் மாட வீதிகள் சுற்றி பெரியாழ்வார் சன்னதிக்கு கொண்டு வரப்பட்டது.

பின்னர் கொடிமரத்தில் சிறப்பு பூஜை செய்யப்பட்டு பாலாஜி பட்டர் கொடியேற்றினார்.

பின்னர் வடபத்ரசாயி சன்னதியில் பெரியாழ்வாரின் எழுந்தருளும் சிறப்பு பூஜைகளும் பிறகு பெரியாழ்வார் மண்டபம் எழுந்தருளல் நடைபெற்றது. பொது மக்கள் பெரும் திரளாக கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் தக்கார் ரவிச்சந்திரன், செயல் அலுவலர் முத்துராஜா, கோவில் பட்டர்கள் அலுவலர்கள் கலந்து கொண்டனர். ஜூலை 7 காலை 7 மணிக்கு சிறப்பு தேரோட்டம் நடக்கிறது. விழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாகம் செய்து வருகின்றனர்.

# சிவகாசியில் பட்டாசு தொழில் பாதுகாக்கப்படும்: மாணிக் தாகூர் எம்.பி. உறுதி

**விருதுநகர், ஜூலை 01-**

சிவகாசி பகுதியில் பட்டாசு தொழில் நிச்சயமாக காப்பாற்றப்படும் என விருதுநகர் தொகுதி எம்.பி மாணித்தாகூர் தொழிலாளர்களிடம் உறுதியளித்தார்.

வெம்பக் கோட்டையில் அரசு சார்பில் அமைக்கப்பட்டுள்ள மியா வாக்கி காட்டினை பார்வையிட்ட எம்.பி தேசிய வேலை உறுதித் திட்டத்தின் கீழ் வேலை செய்யும் பெண்களிடம் கலந்துரையாடி குறைகளை கேட்டறிந்தார்.

அப்போது பட்டாசு ஆலையில் பிரச்சினை இல்லாமல் செயல்பட வேண்டும் என பெண்கள் கோரிக்கை விடுத்தனர். அவர்களிடம் மாணிக்க தாகூர் எம்பி கூறுகையில் பட்டாசு தொழில் நிச்சயம் காப்பாற்றப்படும் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்தார் .நிகழ்ச்சியில் ஊராட்சித் தலைவர் அழகுத்தாய், காங்கிரஸ் மேற்கு மாவட்ட தலைவர் ரங்கசாமி மற்றும் அதிகாரிகள், காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# ஸ்மார்ட் ஹோம் பயன்பாடு இந்தியாவில் அதிகரிப்பதாக ஆய்வில் புதிய தகவல்

**கோவை, ஜூலை. 01-**

ஸ்மார்ட் ஹோம் பயன்பாடு இந்தியக் குடும்பங்களில் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து, 92 சதவீத பயனீட்டாளர்கள் ஸ்மார்ட் ஹோம் நிறுவக் குரல் கட்டுப்பாடு வசதியாக உள்ளதெனத் தெரிவித்துள்ளனர். இந்தியாவில் ஸ்மார்ட் ஹோம் ஏற்பு மற்றும் பயன்பாட்டுப் போக்கைப் புரிந்து கொள்ள அமேசான் இந்தியா நிறுவனத்துக்காக டெக்ஆர்க் மேற்கொண்ட ஆய்வு இதை உறுதிப்படுத்துகிறது. மெட்ரோ மற்றும் மெட்ரோ அல்லாத நகரங்களில் வசிக்கும் 1200-க்கும் அதிகமான ஸ்மார்ட் ஹோம் பயனீட்டாளர்களிடமிருந்து திரட்டப்பட்ட தரவுகளின் அடிப்படையில் ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

டெக்ஆர்க் முதன்மை பகுப்பாய்வாளர் பைசல் கவூஸா ஆய்வறிக்கையின் முக்கிய அம்சங்களை விவரிக்கையில், நிலை அகன்ற அலைக்கற்றை ஊடுருவல் அதிகரிப்பு மற்றும் கொரோனா நோய் காரணமாக இல்லங்கள் தானியாக வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதனால் விட்டு உபயோகப் பொருள்களைக் குரல் மூலம் இயக்கும் ஸ்மார்ட் ஹோம் முக்கிய அம்சமாக உருவெடுத்துள்ளது. குடும்பத்திலுள்ள அனைத்து உறுப்பினர்களும் நவீன தொழில்நுட்பமோ, திறன் மேம்பாடோ இன்றி, வீட்டு உபயோகப் பொருள்களுடனான தொடர்பும், ஆணையும், கட்டுப்பாடும் இயங்கும் போது ஸ்மார்ட் ஹோம் சூழல் சிறப்பாகப் பயன்படும் என்றார்.

அமேசான் டிவைசஸ் இயக்குனர், கண்ட்ரி மேலாளர் பராக் குப்தா பேசுகையில், ரூ. 500, ரூ. 1,50,000/- விலையுள்ள பல்ப், ப்ளக், பூட்டுகள், நிழற்படக் கருவிகள், மின் விசிறிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், குளிர்சாதனப் பெட்டிகள், ஏர் ப்யூரிபையர் எனப் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த பொருள்கள் உள்பட ஆயிரக் கணக்கான ஸ்மார்ட் ஹோம் கருவிகள் அலெக்ஸாவுடன் இணக்கமாக உள்ளன. வாடிக்கையாளர்கள் தங்கள் ஸ்மார்ட் ஹோம் பயணத்தைத் தொடங்கவும், அலெக்ஸாவின் மந்திரக் கைகளால் ஹாண்ட்ஸ்-ப்ரீ கண்ட்ரோலை அனுபவிக்கவும் வசதியாக, இந்தியாவின் முன்னணி பிராண்ட்களிலிருந்து பல்வேறு பொருள்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்றார்.

# நரிக்குடியில் இருசக்கர வாகனம் மீது லாரி மோதி விபத்து - ஒருவர் பலி

**அருப்புக்கோட்டை, ஜூலை 01-**

நரிக்குடியில் இருசக்கர வாகனம் மீது லாரி மோதிய விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

நரிக்குடியைச் சேர்ந்தவர் விஜயன் மகன் அரிய முத்து ( 62 ).கூலித்தொழிலாளியான இவர்,சொந்தவேலையாக தனது இருசக்கர வாகனத்தில் வெளியில் சென்றுவிட்டு மீண்டும் அதே இருசக்கர வாகனத்தில் வீடு திரும்பியுள்ளார்.அப்போது அவர் நரிக்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பாக வந்தபோது,எதிர்பாராவிதமாக சாலையோரம் நின்றிருந்த லாரி ஒன்றின்மீது மோதி நிலைதடுமாறி கீழே விழுந்து விட்டாராம். அப்போது எதிரில் வந்த மற்றொரு லாரி அவர் மீது மோதியதுடன் அந்த லாரியின் சக்கரங்கள் அவர்மீது ஏறியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் அரிய முத்துவின் உடலை மீட்டு திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பிவைத்தனர. இதுதொடர்பாக வழக்கு பதிந்த நரிக்குடி போலீசார்,சம்பவத்தின்போது எச்சரிக்கைவிளக்குகளை எரியவிடாமல் அஜாக்கிரதையாக இருளில் நின்றிருந்த லாரியின் ஓட்டுநரிடமும், மேலும் அரியமுத்துவின் மீதுமோதி விபத்தை ஏற்படுத்திய லாரியின் ஓட்டுநரான குரு சங்கர் (34 ) என்பவரிடமும் விபத்து ஏற்பட்டவிதம் குறித்து விசாரணை மேற்கொண்டனர்.

# ஓடிடி தளத்துக்கு விற்கப்படும் உள்ளடகத்தில் முதலீடு செய்யும் பெட்டர் இன்வெஸ்ட்

**சென்னை, ஜூலை 01-**

பெட் டர் இன் வெஸ்ட் என்பது சில்லறை முதலீட்டாளர்களை மேம்படுத்தும் மாற்று முதலீட்டு தளமாகும். பெட்டர்இன்வெஸ்ட் பல்வேறு சொத்து வகுப்புகளைக் கொண்டிருக்கும் போது, தனியார் கடன்கள் முதல் வணிக ரியல் எஸ்டேட் வரை சில்லறை முதலீட்டாளர்களுக்கு பரந்த தேர்வுகளை வழங்குகிறது. குறிப்பாக, நெட்பிக்ஸ் மற்றும் அமேசான் பிரைம் போன்ற ஓடிடி தளங்களில் ஏற்கனவே விற்கப்பட்ட உள்ளடக்கத்தில் முதலீடு செய்ய சில்லறை முதலீட்டாளர்களுக்கான முதல் சொத்து வகுப்பு வருவாய் அடிப்படையிலான நிதியுதவி ஆகும். இதை மேற்கொண்டு வருகிறது. பெட்டர்இன்வெஸ்ட் என்பது சொத்து வகுப்பாக ஓடிடிகளுக்கு விற்கப்படும் உள்ளடக்கத்தில் முதலீட்டை வழங்கும் முதல் பிராண்ட் ஆகும்.

சில்லறை முதலீடுகளின் அடிப்படையில் இந்தியாவின் விழிப்புணர்வும் முதிர்ச்சியும் குறிப்பிடத்தக்க சக்தி மாற்றத்தைக் காண்கிறது, குறிப்பாக கொரோனாவுக்கு பிறகு என்பது நினைவுக்கூறத்தக்கது. இளைய மக்களிடையே வருவாய் அடிப்படையிலான நிதியுதவி போன்ற மாற்று முதலீட்டு இடங்களை ஏற்றுக்கொள்வதில் இது ஒரு முக்கிய காரணியாக உள்ளது என்கிறார் பெட்டர்இன்வெஸ்ட் இணை நிறுவனர், சி.இ.ஓ. பிரதீப்.

சிறிய முதலீட்டாளர் சந்தையின் விரிவு, நிபுணத்துவம் மற்றும் பெட்டர்இன்வெஸ்ட் குழு மேசைக்குக் கொண்டு வரும் ஆற்றலைக் கருத்தில் கொண்டு, அவர்களின் வளர்ச்சியில் நான் மிகவும் நம்பிக்கையுடன் இருக்கிறேன் என்கிறார் பெட்டர் இன்வெஸ்டின் முன்னணி முதலீட்டாளராக சுரேஷ் கிருஷ்ணன். சமீபத்திய அறிக்கையின்படி, மார்ச் 2022 நிலவரப்படி, என்.எஸ்.இ. பட்டியலிடப்பட்ட நிறுவனங்களில் சில்லறை முதலீட்டாளர்களின் பங்குகள் 7.42 சதவீதம் என்ற எல்லா நேர உயர்வையும் எட்டியது, சந்தையை வழிநடத்த ஓட்டுநர்களின் இருக்கையில் அவர்களை நிறுத்தியது குறிப்பிடத்தக்கது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## இராமநாதபுரம் மாவட்ட அ.தி.மு.க. கூட்டம்:

# அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளராக இ.பி.எஸ். பொறுப்பேற்க கோரி தீர்மானம் நிறைவேற்றம்



**பரமக்குடி, ஜூலை 01-**

இராமநாதபுரம் மாவட்ட அதிமுக ஆலோசனைக் கூட்டம் பரமக்குடி கீர்த்தி மஹாலில் நேற்று நடந்தது.இக்கூட்டத்திற்கு மாவட்ட அவைத் தலைவர் சாமிநாதன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் எம்.ஏ.முனியசாமி முன்னிலை வகித்தார்.கூட்டத்தில் மாநில மகளிர் அணி இணைச் செயலாளர் கிருத்திகா முனியசாமி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.அப்போது அவர் பேசுகையில் ஜாதி மதங்களுக்கு அப்பாற்பட்டு அனைவரையும் அரவணைத்துச் செல்லக் கூடிய ஒற்றை தலைமையாக அதிமுகவின் பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமி தான் பொறுப்பேற்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறோம். நம் மாவட்டத்தின் சார்பில் பொதுக்குழுவில் நகர, ஒன்றிய செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள் மற்றும் பொதுக் குழு உறுப்பினர்கள் மொத்தம் 36 பேர் அதில் 3 பேரைத் தவிர 33 பேர் எடப்பாடி பழனிச்சாமி பொதுச்செயலாளராக்க ஆதரவு தெரிவித்துள்ளனர்.எடப்பாடி பழனிச்சாமி தான் பொதுச் செயலாளராக வரவேண்டுமென்று அடிமட்டத் தொண்டனின் விருப்பமாகும்.அனைத்து தொண்டர்களையும் அரவணைத்துச் செல்லக் கூடிய ஒரே தலைவர் எடப்பாடி பழனிச்சாமி.திமுகவை எதிர்கொள்ள வல்லமை மிக்க தலைவராக எடப்பாடியார் இருப்பார்.வருகின்ற 11-ம் தேதி நடைபெறக்கூடிய பொதுக்குழு கூட்டத்தில் நிச்சயம் எடப்பாடி பழனிசாமி பொதுச்செயலாளர் பதவியேற்பார் எனக் கூறி னார்.இக் கூட் டத் தில் மாநில எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளர் டாக்டர் முத்தையா, எம்ஜிஆர் மன்ற துணைச் செயலாளர் ரத்தினம், முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் நிறைகுலத்தான், மாவட்ட நிர்வாகிகள் கவிதா சசிகுமார், பாதுஷா, பாலாமணி மாரி, பாலசுப்ரமணியன், ஒன்றிய செயலாளர்கள் முனியசாமி பாண்டியன், குப்புசாமி, அசோக்குமார், முத்தையா, காளிமுத்து,அந்தோணி ராஜ், மருதுபாண்டியன், ஜானகிராமன், கருப்பையா, நகர் கழக செயலாளர்கள் ஜமால், சகுபர் உசைன், பால்பாண்டியன், பேரூராட்சி செயலாளர்கள் சங்கரபாண்டியன், ஜெயம் பாண்டியன், சதீஷ்குமார், ரமேஷ் குமார், சீமான் மரைக்காயர், ரஹ்மத்துல்லா, காளிதாஸ், சார் பணி மாவட்ட செயலாளர் தர்வேஸ் ,செந்தில்குமார், ஸ்டாலின் சரவணகுமார், ஜெய்லானி சீன் கட்டி, பழனியாண்டி, ராதாகிருஷ்ணன், உதுமான் அலி, பிரகாசம், திலகர், இளைஞர் அணி மாவட்ட துணைச் செயலாளர் செல்வராஜ், இணைச்செயலாளர் நேதாஜி மற்றும் நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# அருப்புக்கோட்டை தெருக்களில் குண்டும் குழியுமான ரோடுகள், தரமற்ற குடிநீர் வினியோகம் – நகர மன்ற கூட்டத்தில் கவுன்சிலர் குற்றச்சாட்டு



**அருப்புக்கோட்டை,ஜூலை01-**

அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் நகர் மன்ற உறுப்பினர்களின் சாதாரண கூட்டம் நகர்மன்றத் தலைவர் சுந்தரலட்சுமி தலைமையில் நகர்மன்ற துணைத்தலைவர் பழனிசாமி நகராட்சி ஆணையாளர் அசோக்குமார் முன்னிலையில் நடைபெற்றது.

.கவுன்சிலர் பாலசுப்ரமணி. திருநகரத்தில் குடிநீர் குழாய் இணைப்பிற்காக தோண்டப்பட்ட சாலைகள் அனைத்தும் குண்டும் குழியுமாக காணப்படுகிறது குடிநீர் உப்புநீராக வழங்கப்படுகிறது என பேசினார்.

இதற்கு பதிலளித்த பேசிய நகர்மன்ற தலைவர் அனைவருக்கும் தாமிரபரணி குடிநீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.சாலைகள் விரைவில் சரி செய்யப்படும் என தெரிவித்தார். .கவுன்சிலர் தனலட்சுமி. பேசுகையில் மினி பவர் பம்புகள் சேதமாகியுள்ளது டேங்க்குகளும் சேதமாகியுள்ளது. அதை சரி செய்ய எந்த நடவடிக்கையும் இல்லை என பேசினார்.

.கவுன்சிலர் கண்ணன். பேசுகையில் கணேஷ்நகர் பகுதியில் தாமிரபரணி குடிநீர் முறையாக வழங்கவில்லை.பணிகளும் முறையாக நடைபெறவில்லை வாறுகால்பணி நடைபெறுவது குறித்த எந்த தகவலும் இல்லை.விநாயகர் கோயில் தெரு திருச்சுழிசாலையில் திறந்த வெளியில் குப்பைகள் கொட்டப்படுகிறது. .கவுன்சிலர் ஜெயகவிதா.

தெற்குத்தெரு விரிவாக்கப்பகுதியில் குழாய்கள் பழுதடைந்து குடிநீர் விணாகிவருகிறது.இதனால் முறையாக குடிநீர் வழங்க முடியமால் பொதுமக்களிடம் தலைகாட்டமுடியவில்லை.மேலும்

துப்புரவு பணியாளர்களை அதிகரிக்க வேண்டும் என பேசினார்.

.கவுன்சிலர் டுவிங்கிளின் ஞானபிரபா. புதிய பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டு உள்ள கழிப்பறைகள் மற்றும் சைக்கிள் ஸ்டாண்ட் பல ஆண்டுகளாக மூடிய கிடக்கிறது அதை திறக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பேசினார். மேலும் இதே போல் ஜோதிபுரம் 2 வது தெருவில் வாறுகால் பணி மந்தமாக நடைபெறுகிறது ஆக்கிரமிப்புகள் அதிகமாக உள்ளது.19 வது வார்டு சிங்காரதோப்பு பகுதியில் பயோ டாய்லெட் அமைக்க வேண்டும்.ரயில்வே பீடர் சாலையில் கழிவுகள் தேங்கி கிடக்கிறது.10 வது வார்டில் சிறிய மழை பெய்தால் கூட கழிவுநீர் தெருக்களில் ஓடுகிறது என பல்வேறு புகார்களை கவுன்சிலர்கள் கூட்டத்தில் முன் வைத்தனர்.

கவுன்சிலர்களின் கோரிக்கைகளை கேட்ட நகர்மன்றத் தலைவர் சுந்தரலட்சுமி அனைத்து கோரிக்கைகளும் பரிசீலிக்கப்பட்டு விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

இறுதியாக பேசிய நகர் நல அலுவலர் ராஜநந்தினி தற்போது கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்துவருகிறது. கவுன்சிலர்கள் தங்களது பகுதியில் பொதுமக்களிடம் முககவசம் அணிந்து செல்லவும் பூஸ்டர் தடுப்பூசி போட்டுக்கொள்ளவும் அறிவுறுத்த வேண்டும். என கேட்டுக்கொண்டார். கூட்டத்தில் முன்னாள் நகரமன்ற தலைவர் சிவப்பிரகாசம், கவுன்சிலர்கள் நகராட்சி அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# வத்தலக்குண்டு அருகே கட்டக்காமன்பட்டி கிராமத்தில் பெண்களுக்கான தொழில் பயிற்சி தொடக்க விழா




**வத்தலகுண்டு, ஜூலை 01-**

திண்டுக்கல் மாவட்டம் அய்யம்பாளையம் சக்தி அறக்கட்டளை சார்பாக கரூர் வைஸ்யா வங்கியின் கூட்டாண்மை சமூக பொறுப்பு (CSR) திட்டதின் மூலமாக பெண்களுக்கு தொழில் பயிற்சி வழங்கப்படுகிறது. ஆரி மற்றும் பூத்தையல் பயிற்சி வழங்கப்படுவதக்காக பெண்களை தேர்வு செய்து அவர்களுக்கு மூன்றாம் கட்டமாக 30 பேருக்கு பயிற்சி வழங்கும் தொடக்க விழா கட்டக்காமன்பட்டி கிராமத்தில் வாழ்வாதார இயக்க கட்டிடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கரூர் வைஸ்யா வங்கியின் மத்திய அலுவலகம் கரூர் உதவி மேலாளர் வெங்கடேசன் கலந்து கொண்டு தலைமையுரை வழங்கினார். கரூர் வைஸ்யா வங்கியின் இந்த பயிற்சி சக்தி அறக்கட்டளை மூலமாக வழங்குவதன் நோக்கம் பற்றியும் சுயதொழிலின் அவசியம் பற்றியும் பேசினர். சக்தி அறக்கட்டளை நிர்வாகி ஜோதி பேசும்போது, கரூர் வைஸ்யா வங்கியின் வழிகாட்டுதல்கள் பற்றியும், இந்த கூட்டாண்மை சமூக பொறுப்பு (CSR) திட்டம் மூலமாக கிராமப்புற முன்னேற்றத்தை முன்னிலைப்படுத்தி செயல்படுகிற இந்த திட்டம் பற்றியும் விரிவாக பேசினார்.

உதவி திட்ட அலுவலர் முருகேசன் – மகளிர் திட்டம், மகேஸ்வரி, பஞ்சாயாத்தலைவர், கட்டக்காமன்பட்டி, அருண்குமார், வட்ட அணி தலைவர், வாழ்ந்து காட்டுவோம் திட்டம், பிரேமா, சமூகப்பணியாளர் ஆகியோர் கலந்துக்கொண்டார்கள்.

இந்த பயிற்சி 30 நாட்கள் நடத்தப்படும். லோகேஸ்வரி, கண்ணகி, மகேஸ்வரி, புவேன்ஷ்வரி, கவியா, தமிழ்செல்வி, சுபத்ரா, மருதையம்மாள், தீபா ஆகியோர் கலந்து கொண்டனர். விழாவின் முடிவில் பயிற்சியாளர் ராமு திலகம் நன்றி கூறினார்

## மலேசிய பேட்மிண்டன் தொடர்:
# பி.வி.சிந்து, பிரனாய் காலிறுதிக்கு தகுதி

**கோலாலம்பூர், ஜூலை 01-**



மலேசிய பேட்மிண்டன் தொடரில், இந்திய வீராங்கனை பி.வி.சிந்து கால் இறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**முதல் சுற்றில்...**

கோலாலாம்பூரில் நடைபெற்று வரும் போட்டியில், 2-வது சுற்றில் தாய்லாந்து வீராங்கனை சாய்வானை எதிர்கொண்டார் சிந்து. முதல் செட்டை இழந்த சிந்து, அடுத்த இரு செட்களையும் வென்று வெற்றியை வசமாக்கினார். ஆண்கள் பிரிவில், இந்தியாவின் பிரனாய், சீன தைபே வீரரை வீழ்த்தி கால் இறுதிக்கு முன்னேறினார்.

**சாய்னா நெஹ்வால்...**

முன்னதாக மகளிர் ஒற்றையர் பிரிவு 2வது சுற்றில் விளையாட, இந்திய நட்சத்திரம் பி.வி.சிந்து தகுதி பெற்றார். முதல் சுற்றில் தாய்லாந்தின் போர்ன்பவீ சோச்சுவாங்குடன் (10வது ரேங்க்) மோதிய சிந்து (7வது ரேங்க்) 21-13, 21-17 என்ற நேர் செட்களில் வெற்றியை வசப்படுத்தினார். மற்றொரு முதல் சுற்றில் இந்தியாவின் சாய்னா நெஹ்வால் 11-21, 17-21 என்ற நேர் செட்களில் அமெரிக்காவின் ஐரிஸ் வாங்கிடம் தோற்று ஏமாற்றத்துடன் வெளியேறினார்.

**காஷ்யப் வெற்றி...**

இப்போட்டி 37 நிமிடத்திலேயே முடிவுக்கு வந்தது.ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் களமிறங்கிய முன்னாள் காமன்வெல்த் சாம்பியன் பாருபள்ளி காஷ்யப் 21-12, 21-17 என்ற நேர் செட்களில் கொரியாவின் ஹியோ க் வாங்கை வீழ்த்தினார். அவர் அடுத்த சுற்றில் தாய்லாந்தின் குன்லாவுட் விதித்சர்னை சந்திக்கிறார். கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் சுமீத் ரெட்டி - அஷ்வினி பொன்னப்பா இணை 15-21, 21-19, 17-21 என்ற செட் கணக்கில் நெதர்லாந்தின் ராபின் - செலினா ஜோடியிடம் 52 நிமிடம் போராடி தோல்வியைத் தழுவியது.

# இந்தியா - இங்கிலாந்து இடையே கடைசி டெஸ்ட் இன்று தொடக்கம்
## கேப்டனாக ஜஸ்ப்ரிட் பும்ரா நியமனம்

**பர்மிங்காம், ஜூலை 01-**



இந்தியா -இங்கிலாந்து இடையேயான கடைசி டெஸ்ட் போட்டி இன்று தொடங்குகிறது. இந்திய அணிக்கு பும்ரா தலைமை தாங்குகிறார்.

**பயிற்சி ஆட்டம்...**

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக கடந்த ஆண்டு தள்ளி வைக்கப்பட்ட இந்தியா-இங்கிலாந்து அணிகள் இடையிலான 5-வது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பர்மிங்காமில் ஜூலை 1-ம் தேதி (இன்று) தொடங்குகிறது. டெஸ்ட் தொடருக்கு முன்னதாக இந்தியா- லீசெஸ்டர்ஷைர் அணிகளுக்கு இடையிலான பயிற்சி ஆட்டம் நடந்தது. இந்த போட்டியின் போது இந்திய கேப்டன் ரோகித் சர்மா கொரோனாவால் பாதிக்கப்பட்டார்.

**பும்ரா தலைமையில்...**

இந்த நிலையில் கேப்டன் ரோகித் சர்மா இன்னும் முழுமையாக குணமடையாததால், இங்கிலாந்து அணிக்கு எதிரான5-வது டெஸ்ட் போட்டியில் விளையாடமாட்டார் எனவும் ,அவர் இந்த போட்டியிலிருந்து விலகியுள்ளதாக அறிவிக்கப்பட்டது. இந்த சூழலில் இந்திய அணியை வழிநடத்தும் பொறுப்பு வேகப்பந்துவீச்சாளரான பும்ராவுக்கு கொடுக்கப்பட்டு உள்ளது,

**கபில்தேவுக்கு பிறகு...**

இன்று நடைபெறும் போட்டியில் பும்ரா தலைமையில் இந்திய அணி களமிறங்க உள்ளது. 28 வயதான பும்ரா இதற்கு முன்பு எந்த அணிக்கும் கேப்டனாக இருந்ததில்லை. மேலும் 1987-ம் ஆண்டு கபில்தேவுக்கு பிறகு இந்திய டெஸ்ட் அணியை வழிநடத்தும் வேகப்பந்து வீச்சாளர் என்ற சிறப்பையும் அவர் பெற உள்ளார்.

**உழைக்கக் கூடியவர்...**

இங்கிலாந்துக்கு எதிரான 5-வது டெஸ்ட் இன்று நடைபெறவுள்ள நிலையில் விராட் கோலி பற்றி இந்திய அணியின் பயிற்சியாளர் ராகுல் டிராவிட் கூறியதாவது., அருமையான உடற்தகுதி கொண்ட, கடினமாக உழைக்கக் கூடியவர் விராட் கோலி. பயிற்சி ஆட்டத்தில் அச்சூழலில் அவர் எடுத்த 50, 60 ரன்களும் முக்கியமானவை. சதம் அடிக்க முடியாத இந்த நிலை எல்லா வீரர்களும் எதிர்கொண்டதுதான். ஊக்கமில்லாமல் கோலி விளையாடுகிறார் என்கிற பேச்சுக்கு இடமில்லை. சதங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை. கேப்டவுனில் 70 ரன்கள் எடுத்தது அருமையான இன்னிங்ஸ், அது சதமாக மாறாவிடிலும்.

**பங்களிப்பே முக்கியம்...**

விராட் கோலி போன்ற ஒரு வீரர், அவர் நிர்ணயித்த தரம், எடுத்த சதங்களின் எண்ணிக்கை போன்றவற்றால் சதமெடுப்பதைத்தான் வெற்றிக்கான அளவுகோலாக மக்கள் பார்க்கிறார்கள். ஆனால் ஒரு பயிற்சியாளராக, ஆட்டத்தின் வெற்றிக்குப் பங்களிக்கும் 50, 60 ரன்கள் கூட முக்கியமானவை. எங்களுடைய கோணத்தில், அவர் சதமடிப்பதில் அதிகக் கவனம் செலுத்துவதில்லை. பங்களிப்பே முக்கியம். ஆடுகளத்திலும் வெளியேயும் அவர் தொடர்ந்து பங்களித்து, அணிக்குப் பெரிய ஊக்கமாக உள்ளார் என்றார்.

## கொரோனாவால் பாதிப்பு:
# ரோகித் சர்மா, அஸ்வின் பற்றி பயிற்சியாளர் டிராவிட் கருத்து

**பர்மிங்காம், ஜூலை 01-**



கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள ரோகித் சர்மாவின் ரிசல்ட் நெகடிவாக வந்தால் அவர் களமிறங்க வாய்ப்புள்ளதா பயிற்சியாளர் டிராவிட் தெரிவித்துள்ளார். மேலும் அஸ்வினை தொடர்ந்து கண்காணித்து வருகிறோம் என்றும் அவர் கூறினார்.பும்ரா தலைமையில்...

கொரோனா தொற்று பரவல் காரணமாக கடந்த ஆண்டு தள்ளிவைக்கப்பட்ட இந்தியா- இங்கிலாந்து அணிகள் இடையிலான 5-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி பர்மிங்காம் நகரில் இன்று துவங்குகிறது. இந்திய நேரப்படி பிற்பகல் 3 மணிக்கு துவங்கும் இப்போட்டியில் இந்திய கேப்டன் ரோகித் சர்மாவுக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டதால் பங்கேற்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். இதனிடையே, ரோகித் சர்மாவுக்கு பதில் இந்திய அணியை வேகப்பந்து வீச்சாளரும் துணை கேப்டனுமான பும்ரா வழிநடத்துவார் என்று பிசிசிஐ தகவல்கள் தெரிவித்துள்ளன.

**சிறப்பான பந்துவீச்சு...**

இந்நிலையில் இந்திய அணியின் பயிற்சியாளர் ராகுல்டிராவிட் கூறுகையில், ``கொரோனா பாதிப்பால் தனிமைப்படுத்தப்பட்டுள்ள ரோகித் சர்மாவுக்கு நடத்தப்படும் பரிசோதனையின் முடிவை பொறுத்துதான் அவர் போட்டியில் பங்கேற்பாரா இல்லையா என்பது உறுதி செய்யப்படும். (அதாவது ரோஹித்துக்கு நெகடிவ் வந்தால் அவர் களமிறங்க வாய்ப்புள்ளதாம்). இதுபோல் அஸ்வினுக்கு சமீபத்தில் கொரோனா ஏற்பட்டது. இருப்பினும், பயிற்சி டெஸ்டின் கடைசி நாளில் இந்திய அணியில் இணைந்து சிறப்பாக பந்துவீசினார். அதன்பிறகும் பயிற்சியின்போது தொடர்ந்து சிறப்பாக பந்து வீசினார்.

**தொடர் கண்காணிப்பில்...**


அணியின் மருத்துவக் குழு அஸ்வின் குறித்து மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது. இருப்பினும் அவரை தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். அவரது பிட்னஸில் பிரச்சினை ஏற்பட்டால், 5 நாட்களும் தொடர்ந்து பங்கேற்க முடியாது. மருத்துவ குழு கொடுத்துள்ள அறிக்கையின்படி அஸ்வினால் 5 நாட்களும் சுறுசுறுப்பாக விளையாட முடியும் என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு ராகுல் டிராவிட் கூறி உள்ளார்.

**கபில்தேவுக்கு பிறகு...**

அஸ்வின் குறித்து டிராவிட் இரண்டு விதமாக கூறி உள்ளதால், இந்த டெஸ்டில் அவர் பங்கேற்பது இன்னமும் உறுதியாகவில்லை. இதுபோல் பும்ராவுக்கு கேப்டன் வாய்ப்பு கிடைக்கும் பட்சத்தில் கபில்தேவுக்கு பிறகு இந்திய டெஸ்ட் அணியை வழிநடத்தும் வேகப்பந்து வீச்சாளர் என்ற சிறப்பை அவர் பெறுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# வெற்றிகரமாக முடிந்த சிகிச்சை: கே.லோகேஷ் ராகுல் தகவல்



தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான டி20 தொடரிலிருந்து காயம் காரணமாக கே.எல். ராகுல் விலகினார். இதனால் இங்கிலாந்துக்கு எதிராக நாளை தொடங்கும் 5-வது டெஸ்டிலும் அவரால் பங்கேற்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் ஜெர்மனியில் தனக்கு வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாக ட்விட்டரில் தெரிவித்துள்ளார் கே.எல். ராகுல். ஜெர்மனியின் மியூனிக்கில் இருந்து அவர் கூறியதாவது:

கடந்த சில வாரங்கள் கடினமானதாக இருந்தன. ஆனால் அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக முடிந்துள்ளது. காயம் குணமாகி வருகிறது. காயத்திலிருந்து மீண்டு வருவதற்கான பயணம் தொடங்கி விட்டது. அனைவருடைய பிரார்த்தனைகளுக்கு நன்றி என்று கூறியுள்ளார்.


# மார்கனின் ஓய்வு இங்கிலாந்து அணியை பாதிக்கும்: ஆர்ச்சர்



கடந்த செவ்வாயன்று, சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார் இங்கிலாந்து அணியின் வெள்ளைப் பந்து கேப்டன் இயன் மார்கன். ஒருநாள், டி20 கிரிக்கெட் ஆட்டங்களில் தலைசிறந்த அணியாக இங்கிலாந்து திகழ்வதற்கு முக்கியப் பங்களித்த மார்கனுக்குப் புகழாரம் சூட்டியுள்ளார் ஆல்ரவுண்டர் ஜோப்ரா ஆர்ச்சர். இங்கிலாந்து ஊடகத்தில் மார்கன் பற்றி அவர் தெரிவித்ததாவது:

மார்கனின் ஓய்வு அறிவிப்பு நான் எதிர்பாராதது. உலகக் கோப்பைப் போட்டி தொடங்கும் சில மாதங்களுக்கு முன்பு அறிவித்திருப்பது பலருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பேட்டிங்கில் பெரிதாகப் பங்களிக்க முடியாததால் அணியிலிருந்து விலகுவது இதுவே சரியான நேரம் என அவர் நினைத்துள்ளார். நான் அப்படி நினைக்கவில்லை. மற்றவர்களும். அவரது அறிவிப்பு இங்கிலாந்து அணியை பாதிக்கும் என்றார்.

# புதிய அணி, புதிய கேப்டன்: ஆச்சர்யப்படும் ஆண்டர்சன்..!



புதிய கேப்டன், புதிய பயிற்சியாளர் தலைமையில் விளையாடும் இங்கிலாந்து அணி தனக்கு ஆச்சர்யம் தருவதாக 39 வயது வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் ஆண்டர்சன் கூறியுள்ளார். நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை 3-0 என முழுமையாக வென்றது இங்கிலாந்து அணி. அடுத்ததாக இந்தியாவுக்கு எதிரான 5-வது டெஸ்டில் விளையாடுகிறது.

புதிய கேப்டன் பென் ஸ்டோக்ஸ், புதிய பயிற்சியாளர் மெக்கல்லம் தலைமையில் விளையாடும் இங்கிலாந்து அணி பற்றி வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் ஆண்டர்சன் கூறியதாவது: சுழற்பந்துவீச்சுக்குச் சாதகமான ஆடுகளத்தில் நாங்கள் 300 ரன்களை விரட்டும்போது (2-வது டெஸ்டில் 50 ஓவர்களில் 299 ரன்களை விரட்டி வெற்றி பெற்றது இங்கிலாந்து அணி) ஓய்வறை மிகவும் அமைதியாக, இலக்கை விரட்டி விடுவோம் என்கிற நம்பிக்கையுடன் இருந்தது. இப்படியொரு ஓய்வறையில் நான் இருந்ததே இல்லை. 20 வருடங்களாகச் சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடும் நான் இது போன்று பார்த்ததே இல்லை என்று ஆச்சர்யம் தெரிவித்துள்ளார்.

# சென்னையில் ஜூலை 5-ம் தேதி முதல் தேசிய குத்துச்சண்டை



இளையோருக்கான 5-வது தேசிய ஆடவர் மற்றும் மகளிர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் சென்னை காட்டாங்கொளத்தூரில் உள்ள எஸ்ஆர்எம் பல்கலைக்கழகத்தில் வரும் ஜூலை 5 முதல் 11-ம் தேதி வரை நடைபெற உள்ளது. இதில் இந்தியா முழுவதிலும் இருந்து 33 மாநில பிரிவுகளைச் சேர்ந்த 800 வீரர், வீராங்கனைகள் கலந்து கொள்கின்றனர்.

தமிழகத்தில் இருந்து மகளிர் பிரிவில் 12 எடைப் பிரிவிலும், ஆடவர் பிரிவில் 13 எடைப் பிரிவிலும் பங்கேற்கின்றனர். மகளிர் பிரிவில்லோஷினி (சென்னை), பூவிதா (புதுக்கோட்டை), மதுமிதா (திருவள்ளூர்), ஜீவா (புதுக்கோட்டை), ஸ்நேகா (திருச்சி), மாலதி (புதுக்கோட்டை), அனுசுயா (காஞ்சிபுரம்), ஸ்ரீநிதி (சென்னை), எம்.மதுமிதா (திருவள்ளூர்), ஜெயஸ்ரீ (திருவள்ளூர்), அபிநய சரஸ்வதி (திருவள்ளூர்), பிரிஸ்கிலா (கன்னியாகுமரி) ஆகியோர் பல்வேறு எடைப் பிரிவில் களமிறங்குகின்றனர்.

## சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில்
# அ.தி.மு.க பொதுக்குழுவுக்கு தடை விதிக்கக்கோரி கூடுதல் மனு தாக்கல்

**சென்னை, ஜூலை 01-**

அ.தி.மு.க பொதுக்குழு கூட்டத்திற்கு தடை விதிக்கக்கோரிய வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் மனுவில் பதிலளிக்க ஓ.பி.எஸ், ஈ.பி.எஸ் க்கு சென்னை கோர்ட்டு நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

அ.தி.மு.கவில் இரட்டை தலைமை உருவாக்கப்பட்டதை எதிர்த்து திண்டுக்கலை சேர்ந்த சூரியமூர்த்தி என்பவர் வழக்கு தொடர்ந்து இருந்தார். இந்த வழக்கில் அ.தி.மு.க பொதுக்குழு கூட்டத்திற்கு தடை விதிக்கக்கோரி கூடுதல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவிற்கு ஓ.பன்னீர் செல்வம் மற்றும் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் வருகிற ஜூலை 4-ம் தேதி பதிலளிக்க சென்னை உரிமையியல் கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

## அதிகரிக்கும் கொரோனா தொற்று:
# தமிழகத்தில் தினசரி பாதிப்பு 2 ஆயிரத்தை கடந்து பதிவு

**சென்னை, ஜூலை 01-**

தமிழகத்தில் ஒருநாள் கொரோனா பாதிப்பு 1,827-ல் இருந்து 2,069- ஆக உயர்ந்துள்ளது.

தமிழகத்தில் கடந்த சில நாட்களாக கொரோனா பாதிப்பு கிடு கிடுவென உயர்ந்து வருகிறது. அந்த வகையில் நேற்று ஒருநாள் பாதிப்பு 2,069- ஆக உயர்ந்துள்ளது.சென்னையில் ஒரு நாள் பாதிப்பு 771-ல் இருந்து 909- ஆக உயர்ந்துள்ளது. செங்கல்பட்டு மாவட்டத்தில் 352, திருவள்ளூர்-100, கோவை -96, கன்னியாகுமரி -61, காஞ்சிபுரம் -71, திருச்சி -62 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது.

## கழிவு நீரகற்று பணியின் போது விபத்து ; சிகிச்சை பலனின்றி உயிரிழந்த
# ஒப்பந்த தொழிலாளர்கள் 2 பேரின் குடும்பத்திற்கு தலா ரூ.15 லட்சம்
## முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவிப்பு

**சென்னை, ஜூலை 01-**

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்த சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய ஒப்பந்த தொழிலாளர் வே.ரவிகுமாரின் குடும்பத்தினருக்கு நிவாரணத் தொகையாக ரூ.15 லட்சம் வழங்கிட முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில்,

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய ஒப்பந்த தொழிலாளர்கள் 28.06.2022 அன்று காலை முதல் ஜெட் ராடிங் மற்றும் சூப்பர் சக்கர் இயந்திரத்தைப் பயன்படுத்தி மாதவரம் முத்துமாரியம்மன் கோயில் தெருவில் கழிவுநீர் அடைப்பை அகற்றும் பணியில் ஈடுபட்டு வந்தனர். அப்போது, பிற்பகல் சுமார் 2.30 மணியளவில் ஒப்பந்தத் தொழிலாளர் நெல்சன் என்கிற கட்டாரி (வயது - சுமார் 26), இயந்திர துளையில் ஏதேனும் கல்/துணி அடைக்கப்பட்டிருக்கிறதா என்று சாலையில் நின்று கவனித்த போது, இயந்திர துளையில் எதிர்பாராத விதமாக தவறி விழுந்து விட்டார். அவரைக் காப்பாற்ற முயன்ற ஒப்பந்த தொழிலாளர் வே.ரவிகுமார் (வயது - சுமார் 35) என்பவரும் இயந்திர துளையில் விழுந்து விட்டார். உடனடியாக தீயணைப்புத் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு இருவரும் உயிருடன் மீட்கப்பட்டு ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதில் ஒப்பந்தத் தொழிலாளர், நெல்சன் என்கிற கட்டாரி என்பவர் சிகிச்சை பலனின்றி 28.06.2022 அன்று இறந்து விட்டார். உயிரிழந்த ஒப்பந்த தொழிலாளர் நெல்சன் என்கிற கட்டாரி அவர்களது குடும்பத்தினருக்கு இழப்பீடாக 07.06.2022 நாளிட்ட நகர் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண்.83-ன் படி ரூ. 15 லட்சம் வழங்கப்படும் என முதல்வரால் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தொடர் சிகிச்சை பெற்று வந்த ஒப்பந்த தொழிலாளர் வே.ரவிகுமார் சிகிச்சை பலனின்றி 30.06.2022 அன்று காலை உயிரிழந்தார். உயிரிழந்த ஒப்பந்த தொழிலாளர் வே.ரவிகுமாரது குடும்பத்தினருக்கு இழப்பீடாக 07.06.2022 தேதியிட்ட நகர் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண்.83-ன்படி ரூ.15 லட்சம் வழங்கப்படும் என முதல்வரால் அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## வீரர்களுக்கு கொரோனா தொற்று:
# காமன்வெல்த் போட்டிக்கான இந்திய ஹாக்கி அணியின் பயிற்சி பாதிப்பு..!




**பெங்களூரு, ஜூலை 01-**

இந்திய ஆண்கள் ஹாக்கி அணியின் இரண்டு வீரர்கள், மூன்று துணை ஊழியர்களுக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

**தொற்று உறுதி...**

இந்திய ஆண்கள் ஹாக்கி அணியின் இரண்டு வீரர்கள், மூன்று துணை ஊழியர்களுக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. கொரோனா தொற்றின் காரணமாக காமன்வெல்த் ஹாக்கி தொடருக்கான பயிற்சி தடைபட்டுள்ளது.

**தனிமையில்...**

குர்ஜந்த் சிங் மற்றும் தலைமை பயிற்சியாளர் கிரஹாம் ரீட் ஆகியோர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்திய ஆண்கள் ஹாக்கி அணியின் வீரர்கள் மற்றும் குழுவினருக்கு ஆடி-பிசிஆர் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. அதில் தொற்று உறுதியானவர்களில் லேசான அறிகுறிகளுடன் பாதிக்கப்பட்டவர்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

**பயிற்சி முகாமில்...**

பர்மிங்ஹாம் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிக்காக தற்போது வீரர்கள் பயிற்சி முகாமில் பங்கேற்றுள்ளனர். இந்த முகாம் ஜூலை 23 அன்று நிறைவடைகிறது. அதனை தொடர்ந்து காமன்வெல்த் தொடரில் பங்கேற்ற இந்திய ஹாக்கி அணி பர்மிங்ஹாம் செல்கிறது.

# விம்பிள்டன் டென்னிஸ் போட்டி: ஆன்டி முர்ரே அதிர்ச்சி தோல்வி

**லண்டன், ஜூலை 01-**




விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் பிரபல வீரர் ஆன்டி முர்ரே 2-வது சுற்றில் தோல்வியடைந்துள்ளார்.

**2-வது சுற்றில்...**

விம்பிள்டன் போட்டியில் 2013, 2016 ஆண்டுகளில் சாம்பியன் பட்டம் வென்றவர் ஆன்டி முர்ரே. முன்னாள் நெ. 1 வீரர். லண்டனில் நடைபெற்று வரும் விம்பிள்டன் ஒற்றையர் 2-வது சுற்றில் ஜான் இஸ்னரை எதிர்கொண்டார். ஆன்டி முர்ரேவின் வெற்றியை அனைவரும் எதிர்பார்த்த நிலையில் 37 வயது ஜான் இஸ்னர் அபாரமாக விளையாடி 6-4, 7-6 (4), 6-7 (3), 6-4 என்ற செட்களில் ஆன்டி முர்ரேவைத் தோற்கடித்து 3-வது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**முதல்முறையாக...**

இஸ்னர், 2018-ல் அரையிறுதிக்கு முன்னேறியவர். இந்த ஆட்டத்தில் 36 ஏஸ்களின் உதவியுடன் முதல்முறையாக முர்ரேவை வீழ்த்தியுள்ளார். விம்பிள்டன் போட்டியில் 2005, 2021 ஆண்டுகளில் 3-வது சுற்றில் வெளியேறிய முர்ரே, இம்முறை 2-வது சுற்றுடன் வெளியேற நேர்ந்துள்ளது.

# பர்மிங்காம் டெஸ்ட் போட்டி: இங்கிலாந்து அணி அறிவிப்பு

**பர்மிங்காம், ஜூலை 01-**




இந்தியாவுக்கு எதிரான இந்த டெஸ்ட் போட்டிக்கான இங்கிலாந்து ஆடும் லெவன் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**பயிற்சி ஆட்டம்...**

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக கடந்த ஆண்டு தள்ளி வைக்கப்பட்ட இந்தியா-இங்கிலாந்து அணிகள் இடையிலான 5-வது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பர்மிங்காமில் இன்று தொடங்குகிறது. டெஸ்ட் தொடருக்கு முன்னதாக இந்தியா- லீசெஸ்டர்ஷைர் அணிகளுக்கு இடையிலான பயிற்சி ஆட்டம் நடந்தது. இந்த பயிற்சி ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

**ஆடும் லெவன்...**

இந்த நிலையில் இந்தியாவுக்கு எதிரான இந்த டெஸ்ட் போட்டிக்கான இங்கிலாந்து ஆடும் லெவன் அறிவிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்து அணி : அலெக்ஸ் லீஸ், ஜாக் கிராலி, ஒல்லி போப், ஜோ ரூட், ஜானி பேர்ஸ்டோவ், பென் ஸ்டோக்ஸ் (கேப்ச்), சாம் பில்லிங்ஸ் (வ), மேத்யூ பாட்ஸ், ஸ்டுவர்ட் பிராட், ஜாக் லீச், ஜேம்ஸ் ஆண்டர்சன்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று ராணிப்பேட்டையில் ரூ.118.40 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய மாவட்ட கலெக்டர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ.வேலு, ஆர்.காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜெகத்ரட்சகன், கதிர்ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கலெக்டர் பாஸ்கர பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இந்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் அமைச்சகத்தால் 2022-ம் ஆண்டுக்கான தேசிய எம்.எஸ்.எம்.இ விருதுக்கு விருதுநகர் மாவட்டம் (தமிழ்நாடு), தேர்வு செய்யப்பட்டதை முன்னிட்டு, புதுடெல்லியில் நேற்று பிரதமர் நரேந்திரமோடி விருதுநகர் மாவட்ட கலெக்டர் ஜெ.மேகநாதரெட்டிக்கு முதல் பரிசிற்கான தேசிய விருதிதை வழங்கினார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று ராணிப்பேட்டை, காரைக்கூட்ரோட்டில் உள்ள சிறுவர்களுக்கான அரசினர் குழந்தைகள் இல்லத்திற்கு சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டு, மாணவர்களிடம் தேவைகள் குறித்து கேட்டறிந்தார். இந்நிகழ்வின் போது அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ.வேலு, ஆர்.காந்தி ஆகியோர் உடனிருந்தனர்.

### குறு, சிறு தொழில்துறையை ஊக்குவிக்க

# ரூ.200 கோடி வரையிலான ஆர்டர்களுக்கு உலகளாவிய டெண்டர் எடுக்க மாட்டோம்

## பிரதமர் நரேந்திர மோடி பேச்சு

புதுடெல்லி, ஜூலை01-

நாட்டில் குறு, சிறு, நடுத்தர தொழில்துறையை ஊக்குவிக்க ரூ.200 கோடி வரையிலான ஆர்டர்களுக்கு உலகளாவிய டெண்டர் எடுக்கப்படாது என்றும், இந்தியா இன்று ரூ.100 சம்பாதிக்கிறது என்றால் குறு, சிறு, நடுத்தர தொழில் துறையால் ரூ.30 வருகிறது என்றும் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

டெல்லியில் உள்ள விஞ்ஞான் பவனில் நடந்த தொழில் முனைவு நிகழ்ச்சியில் பிரதமர் மோடி கலந்து கொண்டார். இதில் ரூ.6 ஆயிரம் கோடி செலவிலான குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களின் செயல்திறன் அதிகரித்தல் மற்றும் துரிதப்படுத்துதல் திட்டம், முதல் முறை ஏற்றுமதி செய்யும் குறு, சிறு, நடுத்தர தொழில்களின் திறன் மேம்பாட்டு திட்டம், பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்க திட்டத்தில் புதிய அம்சங்களை தொடங்கி வைத்தார்.

2022-23-ம் ஆண்டுக்கான பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்க திட்ட பயனாளிகளுக்கு உதவிகளை வழங்கினார். 2022-ம் ஆண்டுக்கான குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களின் தேசிய விருதுகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசியதாவது.

குறு, சிறு, நடுத்தர தொழில் துறையை வலுப்படுத்த கடந்த 8 ஆண்டுகள் எங்களது அரசாங்கம் பட்ஜெட்டை 650 சதவீதத்துக்கும் மேல் உயர்த்தியுள்ளது. இந்தியாவில் ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருகிறது. நாட்டின் தயாரிப்புகள் புதிய சந்தைகளை அடைய குறு, சிறு, நடுத்தர தொழில்துறை வலுவாக இருப்பது மிகவும் முக்கியம். இத்துறை நிறுவனங்கள் இந்தியாவின் வளர்ச்சி பயணத்தின் மிகப்பெரிய தூண்.

நாட்டின் பொருளாதாரத்தில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கை இத்துறை கொண்டுள்ளது. இந்தியா இன்று ரூ.100 சம்பாதிக்கிறது என்றால் குறு, சிறு, நடுத்தர தொழில் துறையால் ரூ.30 வருகிறது. உங்களது தயாரிப்புகளை அரசுக்கு விநியோகம் செய்ய அரசு மின்-சந்தையில் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். ரூ.200 கோடி வரையிலான ஆர்டர்களுக்கு உலகளாவிய டெண்டர் எடுக்கப்பட மாட்டாது என்ற முடிவை எடுத்துள்ளோம். இது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட தயாரிப்புகளை ஊக்குவிப்பதை உறுதி செய்ய குறு, சிறு, நடுத்தர தொழில்துறைக்கு இட ஒதுக்கீடு ஆகும்.

நாடுகளுடனான ஈடுபாட்டின் 3 தூண்கள் வர்த்தகம், தொழில்நுட்பம், சுற்றுலா ஆகியவை ஆகும். ஒவ்வொரு மாவட்டத்திலும், பகுதியிலும் தனித்துவமாக உள்ளூர் உற்பத்தியை உலக அளவில் உருவாக்க முடிவு செய்துள்ளோம். குறு, சிறு, நடுத்தர தொழில் துறையை மேம்படுத்த அதிக கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கடந்த 8 ஆண்டுகளில் காதி விற்பனை நான்கு மடங்கு அதிகரித்துள்ளது. முதல் முறையாக காதி மற்றும் கிராம தொழில்களின் விற்பனை ரூ.1 லட்சம் கோடியை தாண்டியுள்ளது. கிராமங்களில் உள்ள சிறு தொழில் முனைவோர் சகோதரிகள் கடுமையாக உழைத்ததால் இது சாத்தியமானது.

இவ்வாறு அவர் பேசினார்.

### ஜனாதிபதி தேர்தலில் போட்டி:

# முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து ஆதரவு கோரினார் யஷ்வந்த் சின்கா

சென்னை, ஜூலை01-

ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சிகளின் சார்பில் போட்டியிடும் பொது வேட்பாளர் யஷ்வந்த் சின்கா முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று சந்தித்து ஆதரவு கோரினார்.

ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சிகள் சார்பில் பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள முன்னாள் மத்திய அமைச்சர் யஷ்வந்த் சின்கா, பா.ஜனதா இல்லாத பிற கட்சிகளின் ஆதரவை திரட்டி வருகிறார். அந்த வகையில் தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள் மற்றும் காங்கிரஸ் உள்ளிட்ட கூட்டணி கட்சி எம்.பி., எம்.எல்.ஏ.க்களின் ஆதரவை திரட்டுவதற்காக யஷ்வந்த் சின்கா நேற்று சென்னை வந்தார்.

கிண்டி ஐ.டி.சி. சோழா நட்சத்திர ஓட்டலில் தங்கி ஓய்வு எடுத்த அவர், மாலையில் அண்ணா அறிவாலயம் வந்தார். அங்கு அவர் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து ஆதரவு கோரினார். மேலும் அங்கு கூடியிருந்த தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணி தலைவர்களிடம் ஆதரவு கோரினார்.

இந்நிகழ்ச்சியில் யஷ்வந்த் சின்கா பேசுகையில், மதச்சார்பின்மையை காக்கவே இந்த தேர்தலில் போட்டியிடுவதாக கூறினார். குடியரசு தலைவர் தேர்தலில் போட்டியிட தன்னை தேர்வு செய்தமைக்கு நன்றி தெரிவித்த அவர், எதிர்க்கட்சிகளின் நான்காவது விருப்பமாகவே தன் பெயர் இருந்தாக குறிப்பிட்டார்.

'இந்த தேர்தலில் வெற்றி-தோல்வியைத் தாண்டி நாட்டு மக்களின் ஆசியை பெறுவதில்தான் எனக்கு மகிழ்ச்சி. கூட்டாட்சி தத்துவம் வெற்றி பெற தொடர்ந்து பாடுபடுவேன். நாடாளுமன்றம் விதிகளை பின்பற்றி நடப்பதை உறுதி செய்வேன்' என்றும் சின்கா கூறினார்.

# அரசினர் குழந்தைகள் இல்லத்தில் முதல்வர் ஸ்டாலின் திடீர் ஆய்வு

## பணியில் இல்லாத ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவு

இராணிப்பேட்டை, ஜூலை 01-

இராணிப்பேட்டை மாவட்ட அரசு விழாவிற்கு செல்லும் வழியில் காரைக் கூட்ரோட்டில், முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று சமூக நலத் துறையின் கீழ் இயங்கும் சிறுவர்களுக்கான அரசினர் குழந்தைகள் இல்லத்திற்கு சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டு, மாணவர்களிடம் தேவைகள் குறித்து கேட்டறிந்தார்.

ஆய்வின் போது, பணியில் இல்லாத ஆசிரியர்கள் மற்றும் அலுவலர் மீது விளக்கம்கோரி நடவடிக்கை எடுக்க முதல்வர் உத்தரவிட்டார்.

மேலும், அந்த இல்லத்தில் உள்ள மாணவர்களிடம் பாடம் நடத்தும் முறை குறித்தும், வழங்கப்படும் உணவின் தரம் குறித்தும் முதல்வர் கேட்டறிந்தார். ஆசிரியர்களிடம் அம்மாணவர்களை உயர்கல்வி கற்க ஊக்குவிக்க வேண்டும் என்றும், அவர்களின் எதிர்கால நல்வாழ்விற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்றும் முதல்வர் கேட்டுக் கொண்டார். அந்த இல்லத்தில் பணியாற்றும் பணியாளர்களின் விவரங்கள் குறித்து கேட்டறிந்த முதல்வர், ஆய்வின் போது, பணியில் இல்லாத ஆசிரியர்கள் மற்றும் அலுவலர் மீது விளக்கம்கோரி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். இந்த ஆய்வின்போது, அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ.வேலு, காந்தி ஆகியோர் உடனிருந்தனர்.

# டாஸ்மாக் போல வருமானம் கிடைத்தால்தான் வனத்துறை மீதும் அக்கறை செலுத்துவீர்களா?

## தமிழக அரசுக்கு சென்னை ஐகோர்ட் கேள்வி

சென்னை, ஜூலை01-

டாஸ்மாக் நிறுவனம் போல வருமானம் கிடைத்தால் வனத்துறை மீது அக்கறை செலுத்துவீர்களா? என்று தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது. வனப்பகுதியில் உள்ள அந்நிய மரங்களை அகற்றுவது தொடர்பான வழக்கில் தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

சத்தியமங்கலம், முதுமலை உள்ளிட்ட வனப்பகுதிகளில் சுமார் 1,500 ஏக்கரில் அந்நிய மரங்கள் வளர்ந்துள்ளன என்று வனத்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்நிய மரங்கள் விவகாரத்தில் அறிக்கை தாக்கல் செய்வதைத் தவிர தமிழக அரசு வேறு என்ன செய்தது? அந்நிய மரங்களால் சரணாயலங்கள் அழிந்துவிடும் ஆபத்து உள்ளது என்று நீதிபதிகள் குறிப்பிட்டனர். மேலும், தமிழகத்தில் டாஸ்மாக் போல வருமானம் கிடைத்தால் வனத்துறை மீது அக்கறை செலுத்துவீர்களா என்றும் நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

முன்னதாக, தமிழக முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் சையது முசாமில் அப்பாஸ் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட நிலை அறிக்கையில், மாநிலத்தில் ஆனைமலை புலிகள் காப்பகம் (ஏடிஆர்), முதுமலை புலிகள் காப்பகம் (எம்டிஆர்), சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் (எஸ்டிஆர்) மற்றும் தருமபுரியில் 700 ஹெக்டேர் பரப்பளவில் உள்ள சீமைக்கருவேல மரங்களை அகற்றுவதற்கான முன்னோடி திட்டம் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்காக ரூ. 5.35 கோடி ஒதுக்க நிதித்துறை செயலர் ஒப்புதல் அளித்துள்ளார். முதல்கட்டமாக 200 ஹெக்டேர் பரப்பிலான சீமைக் கருவேல மரங்கள் அகற்றப்படும்.

குறிப்பாக, சீமைக்கருவேல மரங்களை 10 ஆண்டுகளில் படிப்படியாக, முழுமையாக அகற்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதற்கடுத்த 5 ஆண்டுகளில் சீமைக்கருவேல மரங்கள் மீண்டும் வளராமல் கண்காணிக்கும் திட்டமும் வகுக்கப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் 196 வகை அந்நிய மரங்கள் பரவியுள்ளன. இதில் சீமைக்கருவேலம் உள்ளிட்ட 23 வகை மரங்கள் உடனடியாக அப்புறப்படுத்தப்பட வேண்டியவை என முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மதுரையில் ஜி.எஸ்.டி கவுன்சில் கூட்டம்: நிர்மலாவுக்கு முதல்வர் ஸ்டாலின் நன்றி

சென்னை, ஜூலை01-

48-வது ஜி.எஸ்.டி.கவுன்சில் கூட்டம் மதுரையில் நடைபெறுகிறது. தமிழகத்தின் கோரிக்கை ஏற்று மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஒப்புதல் வழங்கியுள்ளார். இதற்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தனது டுவிட்டர் பக்கத்தில் நன்றி தெரிவித்துள்ளார்.

47-வது ஜி.எஸ்.டி கவுன்சிலின் 2 நாள் ஆலோசனை கூட்டம் சண்டிகரில் நடைபெற்றது. இந்த கூட்டத்தின் நிறைவில் அடுத்த கூட்டம் ஆகஸ்ட் முதல் வாரம் நடைபெறும் என்று மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்தார். அப்போது தமிழகம் விடுத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன், அடுத்த கூட்டத்தை மதுரையில் நடத்த ஒப்புதல் வழங்கியதாக தகவல்கள் வெளியாகின.

இதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நன்றி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில்,

எங்கள் அழைப்பை ஏற்று, அடுத்த ஜி.எஸ்.டி. கவுன்சில் கூட்டத்தை மதுரையில் நடத்த ஒப்புக் கொண்டதற்காக மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கோவில் நகரம் மற்றும் அதன் மக்கள் சார்பாக, மத்திய அமைச்சர்கள், மாநில அமைச்சர்கள் மற்றும் மூத்த அதிகாரிகளை நாங்கள் அன்புடன் வரவேற்கிறோம். இவ்வாறு அந்த பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் 11 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு

சென்னை, ஜூலை 01-

தமிழகத்தில் இன்று 11 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக இன்று தமிழ்நாடு, புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இன்று நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, திண்டுக்கல், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, விழுப்புரம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், புதுச்சேரி ஆகிய மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

2-ம் தேதி நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களிலும், 3 மற்றும் 4ம் தேதி தமிழ்நாடு, புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மிதமானது முதல் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 36-37 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாரூர் பெரிய ஏரியில் இருந்து இன்று நீர் திறக்க அரசு உத்தரவு

சென்னை, ஜூலை01-

கிருஷ்ணகிரி மாவட்டம் பாரூர் பெரிய ஏரியில் இருந்து இன்று முதல் 135 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விட அரசு உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து நீர்வளத் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில்,

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், பாரூர் பெரிய ஏரியிலிருந்து 2022 - 2023 -ஆம் ஆண்டு முதல் போக பாசனத்திற்கு ஏரியின் கிழக்கு மற்றும் மேற்கு பிரதான கால்வாய்களில் சுழற்சி முறையில் நாள் ஒன்றுக்கு 6.00 மி.க.அடி வீதம் 01.07.2022 முதல் 12.11.2022 வரை மொத்தம் 135 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிட்டுள்ளது.

இதன்மூலம் கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டத்தில் உள்ள 2397 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.